# அரங்கம்

செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, ஆவணி (ஆகஸ்ட்) 31, 2018. இதழ் - 28



இலஞ்சம் ,ஊழல் மற்றும் மோசடி தொடர்பிலான

இலவச சட்ட ஆலோசனைக்கு

அழையுங்கள்

011 2 501 503

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05




## அடிமைப்படுத்தும் மதுபாவனை

கட்டிளமைப்பருவம் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது.

பக்கம் - 22



## நெல் விற்பனையும் ஒரு போராட்டமே!

கடன்பட்டு, கஸ்டபட்டு வேளாண்மை செய்தாலும் உரிய நெல்லினை உரிய விலைக்கு கொடுக்க முடியுதுமில்லை,

பக்கம் - 05



## கணிதம் கடினமல்ல ...

இந்த வாரம் BIDMAS பற்றி நாம் கலந்துரையாடுவோம்

பக்கம் - 18

## சிங்கள சமூக அமைப்பில் கன்னிப் பரிசோதனை சடங்கு



சிங்கள சமூக அமைப்பில் நிலவிய கன்னித் தன்மையை பரிசோதிக்கும்

பக்கம் - 09



# ‘சாகும்வரை போராடுவோம்’ : உக்கிரமடைகிறது பொத்துவில் போராட்டம்

-- வி.ரி.சகாதேவராஜா--

தமது குடியிருப்புக்கள் தமக்கு திரும்பத் தரப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று அம்பாறை மாவட்டம் பொத்துவில் ஊறணியின் கனகர் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

போர்க்காலத்தில் இடம்பெயர்ந்ததை அடுத்து பறிபோன தமது குடியிருப்புக்களை மீட்கும் வரை ஓயமாட்டோம் என்று அவர்கள் சூளுரைத்துள்ளனர். அவர்களது போராட்டம் வெள்ளிக்கிழமையுடன் 19 நாட்களை தாண்டியுள்ளது.

பொத்துவில் பிரதேசசபையின் உபதவிசாளர் பெ.பார்த்தீபன் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக மாவட்டத்திலுள்ள சகல தமிழ் கிராமங்களிலிருந்தும் போராட்டத்திற்கான ஆதரவுகள், ஒத்துழைப்புகள் கிடைக்க ஆரம்பித்துள்ளன.

இதுவரை பல அரசியல்வாதிகள், சமூகசேவையாளர்கள் பல அமைப்புகளின் பிரதிநிதிகள் வந்து போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி, பல உறுதிமொழிகளை

தொடர்ச்சி... (பக்கம் -02 )

# அதிகரிக்கும் யானைத் தாக்குதல்

மட்டக்களப்பு போரதீவுப்பற்று சின்னவத்தைப் பிரதேசத்தில் யானை தாக்கி உயிரிழந்த தம்பிராசா குணராசா (47) என்பவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் இவர் புதன்கிழமை அதிகாலை வெளியில் சென்ற வேளை யானைத்தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பு ஏறாவூர் பற்று - கித்துள் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றும் பகுதி ஒன்றினுள் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்திருந்தார். பெரிய புல்லுமலைப்பிரதேசத்தில் யானை தாக்கியதில் கணவன் மனைவி இருவர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



கடந்த செவ்வாய்க்கிழமை வவுணதீவு பாவற்கொடிச் சேனை காந்திநகர் பிரதேசத்தில் காலை வேளையில் கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்ற குடும்பப்பெண் ஒருவர் யானையால் தாக்கப்பட்டு படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த மாதம் வவுணதீவு - நெல்லிக்காடு பிரதேசத்தில் விவசாயி ஒருவர் யானை தாக்கி உயிரிழந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக யானைகளின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# கிரானிலும் பெரும் யானைத்தொல்லை

கிரான் - கும்புறுமூலைப் பகுதியில் தினமும் யானைகள் வந்து தொந்தரவு செய்வதாக அப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து வன இலாகாவினருக்கு புகார் செய்த போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
குறிப்பாக கிரான் - கும்புறுமூலை பகுதியில் ஹிறுணிகா சேர்விஸ் ஸ்டேசனுக்கு பின்பாக உள்ள தென்னந்தோட்டங்களை அவை தொடர்ச்சியாக வந்து தாக்கிச்

தொடர்ச்சி... (பக்கம் -02 )


MEGAM AGENCY

Import, Export Clearing Forwarding & Customs

Tel/Fax 2445383 Hotline (+94 77 773 2226)

megamagency@yahoo.com

#61,A.G HINNI APPUHAMY MW, COLOMBO -13

- உங்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விடயங்களை / சுங்கப் பணிகளை திறம்படச் செய்து முடிக்க நாடுங்கள்..
- உங்கள் தனிப்பட்ட பொதிகள் மற்றும் கொள்கலன்களை சுங்கத்தில் இருந்து பெற்று உங்கள் வீட்டு வாசலில் ஒப்படைப்போம்.
- கொழும்பில் இருந்து வீடுகள் மற்றும் கம்பனி பொருட்களை இலங்கையின் அனைத்து இடங்களுக்கும் மாற்றிகொடுக்க நம்பிக்கையான இடம்.



# மட்டக்களப்பு, ஆயித்தியமலை சகாய மாதா ஆலய பாதயாத்திரை



கிழக்கு மாகாணத்தில் புகழ்பெற்ற மட்டக்களப்பு, ஆயித்தியமலை புனித சதா சகாய மாதாவின் 64 வது ஆண்டுத் திருவிழாவின் பாதயாத்திரை நாளை சனிக்கிழமை காலை (சனிக்கிழமை 01.09.2018ஆம் திகதி) நடைபெறவுள்ளது.

இம்மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா எதிர்வரும் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து கொடியிறக்கத்துடன் நிறைவுபெறவுள்ளது.

நாளை நடைபெறவுள்ள பாதயாத்திரை வழமைபோன்று இவ்வருடமும் மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்திலிருந்து காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி வவுணதீவு ஊடாக ஆயித்தியமலைக்கும், செங்கலடி சந்தியிலிருந்து காலை ஆரம்பமாகி கரடியனாறு ஊடாக ஆயித்தியமலைக்கும் இரு வழியாக செல்லும் என விழா ஒழுங்கமைப்புக் குழு கூறியுள்ளது.

(வவுணதீவு நிருபர்)

# துப்பாக்கிகள் மீட்பு

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள சில்லிக்கொடியாறு பிரதேசத்தில் 3 ரி 56 ரகத் துப்பாக்கிகளும் 5 மகசின்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.



நேற்றைய தினம் புதன்கிழமை காணியொன்றை டோசர் மூலம் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் காணி உரிமையாளர் பொலிசாருக்கு அறிவித்துள்ளார்.

பழுதடைந்த நிலையில் காணப்பட்ட இத்துப்பாக்கிகள் மீட்கப்பட்டு கொக்கட்டிச்சோலை பொலிஸ்நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.
விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த இப்பிரதேசத்தில் அவர்களது காலத்தில் இத்துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என அறிய முடிகிறது.

# கிரானிலும் பெரும் யானைத்தொல்லை



செல்வதாக அங்கு தென்னந்தோட்டம் ஒன்றை வைத்திருக்கும் உரிமையாளரான செல்வி. எம். எஸ். ஜெயவீரரட்ணம் தெரிவித்துள்ளார். இதனால், பெருமளவு தென்னங்கன்றுகள் அழிந்துவிட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டுகின்றார்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு செல்லும் பிரதான வீதியில் மட்டக்களப்பில் இருந்து சில மைல்கள் தூரத்தில் உள்ள கிரான், மக்கள் பெருமளவில் செறிந்து வாழும் நகர் சார் பகுதியாகும். அங்கு யானைகள் வந்து தாக்கிச் செல்வது அங்குள்ள மக்களை பெரும் பீதிக்கு உள்ளாக்கியுள்ளது.

யானைகளை அங்கிருந்து அகற்ற உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்கிறார்கள்.

# 'சாகும்வரை போராடுவோம்' : உக்கிரமடைகிறது பொத்துவில் போராட்டம்

அளித்துள்ளார்கள். எனினும் உறுதியான தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் அவர்களது போராட்டம் தொடர்கிறது.

தாம் செத்தாலும் இந்த இடத்திலே சாவோமே தவிர தமக்கான உறுதியான ஆவணம் கிடைக்கும்வரை இந்தப்போராட்டம் ஓயாது என்று அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இற்றைக்கு 58 வருடங்களுக்கு முன்பிருந்து கனகர் கிராமத்தில் வாழ்ந்துவந்த தமது காணிகளைக்கோரி அந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். 1990களில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அவர்களை கடந்த 28 வருடங்களாக அங்கு மீளக்குடியேற, அனுமதிக்கவில்லையென்பது அவர்களது பிரதான குற்றசாட்டாகும்.

அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சி. கனகரெட்ணம் காலத்தில், அவரது ஏற்பாட்டில், பல தசாப்தங்களாக இவர்கள் வாழ்ந்துவந்த காணிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டு, வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டிருந்தன.

ஆனாலும், இடம்பெயர்வின் பின்னர் அவர்கள் அங்கு குடியேற அதிகாரிகள் அனுமதியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நடவடிக்கையை ஒரு இன ரீதியான பழிவாங்கலாக அந்த மக்கள் பார்க்கிறார்கள். அதேவேளை, அரசியல்வாதிகள் தமது விடயத்தை புறக்கணிப்பதாகவும் அவர்கள் கவலையடைகிறார்கள்.
(மேலதிக விபரங்களுக்கு 2ஆம் பக்கம் பார்க்க)

# 'நாம் வாழ்ந்த காணியையே கேட்கிறோம்'

## பொத்துவில் கனகர் கிராம தமிழ்மக்கள்

--- விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா ---



அம்பாறை மாவட்ட கரையோரத்தின் அக்கரைப்பற்று – பொத்துவில் ஏ4 பிரதான சாலையில் ஊறணி எனுமிடத்தில் கனகர் கிராம தமிழ் மக்களின் காணி மீட்புப் போராட்டம் தொடங்கி பல தினங்களைக் கடந்துள்ளது.

இற்றைக்கு 58வருடங்களுக்கு முன்பிருந்து வாழ்ந்துவந்த தமது காணிகளைக்கோரி அந்த மக்கள் போராட்டத்திலீடுபட்டுவருகின்றனர். 1960களில் சுமார் 278 குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. 1981களில் முன்னாள் எம்.பி. அமரர் எம்.சி.கனகரெத்தினத்தின் முயற்சியால் வீடுகட்ட அரை ஏக்கர் நிலமும் பயிர்செய்ய 2ஏக்கர் நிலமும் தரப்பட்டு, 30 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு அவர்கள் மகிழ்ச்சியாக சேனைப்பயிர்ச் செய்கையுடன் வாழ்ந்துவந்தனர்.

1990களில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அவர்களை கடந்த 28 வருடங்களாக அங்கு குடியேற அனுமதிக்கவில்லையென்பது பிரதான குற்றசாட்டாகும்.

எது எப்படியிருந்தபோதிலும் அவர்கள் வாழ்ந்த பிரதேசம் இன்று மிகவும் பயங்கரமான சூரப்பற்றைகளினால் சூழ்ந்து காடு மண்டிக்காணப்படுகின்றது. அந்தக்காட்டினுள் பாழடைந்து இடிந்து தகர்ந்த நிலையில் அவர்களது 30 வீடுகளும் காணப்படுகின்றன. கூடவே அவர்கள் பாவித்த மலசலகூடங்களும் தகர்ந்த நிலையில் காணப்படுகின்றன. அதாவது அந்த மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் நிறையவேயுள்ளன. 2000 வருடங்களுக்கு முன் வாழ்ந்ததாக தடயங்களைக் கூறுகின்ற தொல்பொருளியலாளர்களுக்கு ஆக 28 வருடங்களுக்கு முன் இங்கு மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்று கூறுவதற்கு நேரமெடுக்காது.

இதுவரை பாராளுமன்ற உறுப்பினர் தொடக்கம் அரசியல்வாதிகள் சமுகசேவையாளர்கள் எனப்பலரும் வந்து கலந்துரையாடி பல உறுதிமொழிகளைம் அளித்துள்ளார்கள். வனத்துறை உயரதிகாரியும் இக்காணியை மீளளிக்க உறுதி கூறியுள்ள நிலையிலும் போராட்டம் தொடர்கிறது.

நாம் பூர்வீகமாக வாழ்ந்துவந்த காணியையே கோருகின்றோம். தவிர மாற்றான் காணியை அல்ல.

"இரண்டரை ஏக்கர் காணிக்குப் பதிலாக கால் ஏக்கர் காணியைத் தருகிறார்களாம். அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம்" என்று

தொடர்ச்சி... (பக்கம் -20 )

# முறைகேடுகள் குறித்த நடவடிக்கைக்கு கோரிக்கை

வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள ஊழியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும், நிதி மோசடி குறித்து விசாரிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகமவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சிவக்கொழுந்து ஜெயராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக புதன்கிழமை 22.08.2018 ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு கிழக்கு மாகாண கல்வித்துறை சார்ந்த அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டியங்கும், பாரிய நிதி சார்ந்த அமைப்பாக வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள ஊழியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் உள்ளது.

திருகோணமலையில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டு இயங்கும் இந்நிறுவனம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வழிநடாத்தலில் சேமிப்பு, கடன் வழங்குதல், மரணாதாரக் கொடுப்பனவு, புலமைப்பரிசில் வழங்குதல் போன்ற இன்னும் பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

நீண்டகாலமாக இலாபத்தில் இயங்கி வந்த இச்சங்கமானது, 2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் நஷ்டத்தில் இயங்கி வருகின்றது.

இவ்விடயம் சம்பந்தமாக கூட்டுறவு அபிவிருத்தி முன்னாள் ஆணையாளர் திவாகர சர்மாவிடம் கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஆணையாளரினால் நிதிப் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் விளைவாக, நிதிக் கையாள்கை, நிதி மோசடி, ஆவணங்களை மறைத்தல் அல்லது அழித்தல் போன்ற செயற்பாடுகள் நிரூபணமானது.

ஆசிரியர்களின் உழைப்பிலான சேமிப்புப் பணத்தை அவர்களது அனுமதி பெறாமல் மாதிரிக் கையொப்பமிட்டு பணத்தைச் சூறையாடியமை இந்த விசாரணையில் நிரூபணமாகியது.

மேலும் கடன் விண்ணப்பத்திலும் ஆசிரியர்களின் பெயரில் மோசடிக் கையொப்பத்தை இட்டு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது.

இன்னும் விழா முற்பணங்கள் மோசடியாகப் பெறப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆனாலும் அது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இவை குறித்து சங்கத்தின் கருத்தை உடனடியாக பெறமுடியவில்லை. அது கிடைக்கும்பட்சத்தில் அதற்கு உரிய முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்படும்.



# ஊரின் மீதான அன்பே "சிவம்"!





பாவற்கொடிச்சேனைக்கான பயணம் கொஞ்சம் கடினமானதுதான். குறிஞ்சாமுனைச் சந்தியிலிருந்து கொங்கிறீட் பாதை போட்டிருந்தாலும், இறுதியில் இருந்த கிறவல் தரையில் வாகனத்தை கொண்டுபோவது மிகவும் கடினம். உச்சி பிளக்கும் வெயில்.

வெயில் மட்டக்களப்புக்கு புதியதல்ல. ஆனால், சுமார் இருபது வருடங்கள் குளிர்நாடு



ஒன்றில்(பிரித்தானியா) இருந்துவிட்டு வந்த, ஐம்பதைக் கடந்த எனக்கு, அதனைத் தாங்குவது மிகவும் சிரமம்.

ஆனால், பாவற்கொடிச்சேனையை சென்றடைந்தபோது, நான் கண்ட காட்சி, என் நிலை பரவாயில்லை என்று நினைக்கத் தோன்றியது. என்னைவிட மோசமான குளிர்நாடான, கனடாவில் (கிட்டத்தட்ட வடதுருவம்) இருந்து வந்த நண்பர் சிவம் வேலுப்பிள்ளை, என்னிலும் வயது மூத்தவர், அங்கிருந்து வெயிலில் வெந்துகொண்டிருந்தார்.

சிவம் வேலுப்பிள்ளை ஒன்றும் பெருக்கப் படித்த கல்விமான் அல்ல. எங்களைப் போன்று விபுலானந்தர் குறித்த ஆவணப்படம் எடுத்த இன்னுமொரு குழுவில் பங்கேற்றவர்.

ஆனால், இவை எல்லாவற்றையும்விட தான் எடுத்த அல்லது, தான் தூண்டிய காரியத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற காரணத்துக்காக இந்த வெயிலில் அவர் கருகிக்கொண்டிருக்கிறார். இவை அனைத்துக்கும் ஒரே காரணம் தான் பிறந்த மண்ணின் மீது அவருக்கு இருக்கும் பற்று.

கனடாவின் தமிழர் மனித நேய அமைப்பினால், கிராமத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாவில் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, அதன் பலனை அந்தப் பகுதி மக்கள் அடைய வழி செய்துவிட வேண்டும் என்பதுதான் சிவம் வேலுப்பிள்ளையின் தற்போதைய ஒரே குறிக்கோள்.

## பூபாலரட்ணம் சீவகன்

இதற்கு முன்பாக கனடா தமிழ் காங்கிரஸ் போன்ற அமைப்புக்கள் அந்தக் கிராமத்தில் சில அபிவிருத்தி திட்டங்களை செய்யவும் இவரும் இவரது நண்பர்களும் காரணமாக இருந்திருக்கிறார்.

குடிநீருக்காக குளாய்க்கிணறுகளை அமைத்தல், கிராமப் பெண்களை மனதில் வைத்து மலசல கூடங்களை அமைத்துக்கொடுத்தல், பாலர் பாடசாலையை நடத்தல் போன்ற பல விசயங்களை சிறிதாகவும், பெரிதாகவும்



அங்கு கனடா வாழ் புலம்பெயர் தமிழர்கள் செய்திருக்கிறார்கள்.

இதன் அடுத்த கட்டமாகத்தான், அங்கு ஒரு பலநோக்கு வசதிகளுக்கான ஒரு கட்டிடத்தை அமைக்கும் திட்டத்தை அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

அதாவது, அங்கு ஒரு மருத்துவர் தொடர்ச்சியாக வந்து தங்கி, சிகிச்சைகளை வழங்குவதற்கான கிளினிக், உள்ளூர் மூல வளங்களைக் கொண்டு செய்யக்கூடிய தொழில்களுக்கான பயிற்சிகள் போன்றவற்றை தொடர்ந்து நடத்துவதற்கான இடவசதி ஆகியவற்றை மனதில் கொண்டே இந்தக் கட்டிடம் நிர்மாணிக்கப்படுகின்றது.

இந்த ஏற்பாடுகளால், தமக்கு கிடைக்கக் கூடிய பலாபலன்களை அந்தப் பகுதியை சேர்ந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் ஓரளவு உணர்ந்துதான் இருக்கின்றது.

குறிப்பாக தொழிற்பயிற்சி வசதிகள் தமது மக்களுக்கு தொடர்ச்சியான நல்ல பலனைத் தரும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த முயற்சிகள் எழுதுவதற்கு மிக இலகுவானவை. ஆனால், இவற்றை எழுதும் போதே, பாவற்கொடிச்சேனையின் வெயிலின் அகோரம் என்னை சுட்டுப் பொசுக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், அதனையும் தாங்கிக் கொண்டு



சிவம் வேலுப்பிள்ளை அமைதியாக, சாந்தத்துடன் தனது பணியை செய்ய துடித்துக்கொண்டிருப்பது, புலம்பெயர்ந்தும் தம்மண்ணை நினைக்காமல் இருக்க நினைக்கும் தமிழர்களுக்கு ஒரு பாடம்.

அதேவேளை, இப்படி ஒரு பகீரதப் பிரயத்தனத்தின் மூலம் தனது ஊரின் மக்களுக்கு ஏதாவது ஒன்றை செய்துவிடத் துடிக்கும் புலம்பெயர்ந்த உறவுகளை கண்டும் காணாது இருப்பது இங்குள்ள உள்ளூர் தமிழர்களுக்கும் இழுக்குதான்.



சிவம் வேலுப்பிள்ளை

சிவம் வேலுப்பிள்ளைக்கு ஒரு குறிப்பு. வாழ்த்துக்கள் நண்பரே! உடலையும் பார்த்துக்கொள்ளுங்கள்.

# முல்லையிலும், பொத்துவிலிலும் மக்களுக்கு ஆறுதல் வார்த்தை போதாது

மகாவலி கங்கைத்திட்டத்தின் மூலம் சிங்கள குடியேற்றம் வரலாம் என்ற அச்சம், சிங்கள மீனவர்களின் கட்டுப்பாட்டை மீறிய மீன் பிடி முறைகள், போன்றவை காரணமாக இறுதி யுத்தத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவில் நிலத்தை பாதுகாப்பதற்கான போராட்டம் ஒன்று சில நாட்களுக்கு முன்னதாக நடத்தப்பட்டது.

மகாவலித் திட்டம் வருமா, இல்லையா என்பது குறித்து உறுதியாக இதுவரை தெரியாவிட்டாலும், முல்லைத்தீவு மக்களின் நில உரிமை என்பது கடந்த சில ஆண்டுகளாகவே அச்சுறுத்தலுக்கு உள்ளான நிலையிலேயே இருந்து வந்துள்ளது.

## பூபாலரட்ணம் சீவகன்

அதற்காக அந்த மக்கள் நடத்திய போராட்டத்தில் அனைத்து தமிழ் கட்சிகளும் பெரும் ஆரவாரத்துடன் கலந்துகொண்டன. ஆனால், இந்தப் பிரச்சினை போர் முடிவுக்கு வந்த காலம் முதலே இருந்து வருகிறது. இதுவரை இந்தக் கட்சிகள் இது குறித்து ஆக்கபூர்வமாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளன? அப்படி எடுத்திருந்தால் ஏன் இன்று போர் முடிந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு பின்னர் இப்படியான போராட்டம் தேவைப்படுகின்றது? இதற்கு சரியான பதில் இல்லை.

பொத்துவில்:

அடுத்ததாக, கிழக்கில் அம்பாறையில் பொத்துவில் கனகர் கிராம மக்களும் தமது குடியிருப்புகளை போரில் இழந்து விட்டு அதனை திரும்பத்தருமாறு கோரி போராடுகிறார்கள். கனகரட்ணம் எம்பியால் அவர்களுக்கு வழங்கப்பட்டது அந்த குடியிருப்புகள். அரசினால், வழங்கப்பட்ட போதிலும், ஏன் இன்னமும் அங்கு மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை? அவர்களது வீடுகள் உடைந்துபோய் ஆதாரமாகக் கிடக்கின்ற போதிலும் அந்த அனுமதி ஏன் கிடைக்கவில்லை?

இதற்கு ஆட்சியிலிருப்போரும், அவர்களுக்கு அனுசரணையாகச் செயற்படுவோரும் ஏன் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை? எல்லோரும் போய் அவர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்து என்ன பயன்?

போராட்டம் நடத்தித்தான் தமது வீடுகளுக்கு அவர்கள் செல்ல வேண்டுமாயின், நல்லிணக்கம் என்பதில் அவர்களுக்கு எப்படி நம்பிக்கை வரும். நிலைமை சங்கடமானது.

மக்களுக்குத் தேவை வெறும் ஆறுதல் வார்த்தையல்ல. அவர்களின் பிரதிநிதிகளும் ஏனையோரும் ஆக்கபூர்வமான தீர்வை பெற்றுத்தர வேண்டும். அதற்காக இறுதித்தீர்வு வரை மக்கள் தெருவில் நிற்கவும் முடியாது.

# ஓரணியில் தேர்தலை எதிர்கொள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு மறுத்தால் அடுத்த வழி என்ன?



கடந்த 22.08.2018 அன்று மட்டக்களப்பில் கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரிடத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய நிகழ்வு, கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான த.கோபாலகிருஸ்ணண் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அது சம்பந்தமாக அவருடனான நேர்காணல்.

01. கேள்வி : கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரிடத்தில் சந்திக்க வைத்த வரலாற்று நிகழ்வொன்றினைக் கிழக்குத்தமிழர் ஒன்றியம் சாதித்துள்ளது. இச்சந்திப்பின் நோக்கம் என்ன?

பதில்: எதிர்வரும் கிழக்குமாகாணசபைத் தேர்தலில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு பொதுச்சின்னத்தின் கீழ் ஒரே அணியாகப் போட்டியிடுவது சம்மந்தமாக ஏற்கனவே அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரிடத்தில் சந்திக்க வைத்து, திறந்த கலந்துரையாடலை மேற்கொண்டு, மக்களுக்கு உகந்ததான ஒருமித்த முடிவொன்றை எடுப்பதற்கான அதாவது முரண்பாடுகளுக்குள்ளும் ஓர் உடன்பாட்டைக் காணுவதற்கான முயற்சியே இது.

02. கேள்வி : இது சாத்தியமாகுமா?

பதில்: கொள்கைகள் - கோட்பாடுகள் - சித்தாந்தங்கள் - கட்சிகள் - சின்னங்கள் எல்லாமே மக்களுக்காகத்தான் என்பதை மனம் கொண்டால் முரண்பாடுகளுக்குள்ளும் உடன்பாடு காணமுடியும். அத்தகைய மனப்பக்குவம் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைமைப்பீடங்களுக்கு ஏற்படவேண்டும்.

03. கேள்வி : கட்சிகள் ஒன்றிணைவதாயின் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது?

பதில்: பொதுச்சின்னத்தின் கீழ் ஒன்றிணையச் சம்மதிக்கின்ற கட்சிகளையெல்லாம் ஒரு கூட்டு அணியாக ஒன்றிணைத்து, அந்தக் கூட்டு அணியை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்து, ஒரு பொதுச்சின்னம் ஒன்றினைப் பெற்று, செயற்படமுடியும். அப்பொதுச் சின்னம் தற்போதுள்ள தனிப்பட்ட கட்சியொன்றின் சின்னமாக இருக்க முடியாது.

04. கேள்வி : இதனால் இணைந்த வடக்கு கிழக்கு எனும் தமிழர்களின் கொள்கை பாதிப்படையாதா?

பதில் : இல்லை. கிழக்குத் தமிழர் ஒன்றியம் தனது அரசியல் நிலைப்பாட்டினைத் தனது வேலைத்திட்டத்தில் தெளிவாகக் கூறியுள்ளது. அது இதுதான்.

இப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வாக அதிகுறைந்த பட்சம் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்து ஒரே அலகாக அமைந்த - நிர்ணய உரிமையுடன் கூடிய - போதிய அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பெற்ற ஒற்றை மொழிவாரி மாநில சுயாட்சி அலகையே கிழக்குத் தமிழர் ஒன்றியம் ஆதரிக்கும். ஆனால் அத்தகைய தீர்வு எட்டப்படும் வரை, வடமாகாணத்துக்குரிய அரசியல் சமன்பாடு

கிழக்கு மாகாணத்திற்குப் பொருந்தாத களநிலையைக் கருத்தில் கொண்டு, கிழக்குத் தமிழர்கள் எதிர்நோக்கும் தனித்துவமான சமூக, பொருளாதார பிரச்சினைகளைக் கையாளும் வகையில் பொருத்தமான "அரசியல் வியூகம்" களைக் கிழக்குத் தமிழர் ஒன்றியம் வகுத்து அதனை வினைத்திறனுடன் செயற்படுத்தும். இந்த விடயம் உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பெறும்.

06. கேள்வி : இத்தகைய கூட்டு அணிக்குத் தலைமைவகிப்பது யார்?

பதில் : பொதுச் சின்னத்தின் கீழ் ஒன்றிணையும் கட்சிகளின் குறிப்பிட்ட எண்ணிக்கையான பிரதிநிதிகளும் கிழக்குத்தமிழர் ஒன்றியப்பிரதிநிதிகளும் புரிந்துணர்வுடன் கூடிய கலந்துரையாடலை மேற்கொண்டு, உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்த விதிகளுக்கமையத் தலைவரைப் பின்னர் தேர்ந்தெடுப்பர். அதையிட்டு இப்போது அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

07. கேள்வி : இதன் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

பதில் : கிழக்குத் தமிழர் ஒன்றியம் ஏற்கனவே அதன் சமூக பொருளாதார அரசியல் வேலைத்திட்ட வரைவை வெளியிட்டுள்ளது. அதில் அரசியல் ஒரு அங்கம் மட்டுமே. எனினும் பொதுச்சின்னத்தின் கீழ் ஒன்றிணையும் கட்சிகளுக்கான பொது வேலைத்திட்டம் பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பெற்று மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பெறும்.

08. கேள்வி : தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் கோரிக்கைக்கும் நிலைப்பாட்டிற்கும் ஆதரவளிக்க முன்வந்துள்ளன என்றே அறிக்கைக் கிடைக்கிறது. பொதுச்சின்னத்தின் கீழ் ஒன்றிணைவதற்குத்தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்வராது விட்டால் கிழக்குத்



கோபாலகிருஸ்ணன் பதிலளிக்கிறார்

தமிழர் ஒன்றியம் என்ன நிலைப்பாட்டை எடுக்கும்?

பதில்: சிக்கலான, ஆனால் தேவையான கேள்வி. இப்போது உள்ள தமிழ் அரசியல் கட்சிகளுக்குள்ளே மிகப்பழையது அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் 1944 இல் ஆரம்பித்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகும். அதன் சின்னம் "சைக்கிள்" ஆகும். அக்கட்சியிலிருந்து பிரிந்துவந்த அமரர்.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) 1949 இல் ஆரம்பித்ததே இலங்கைத் தமிழரசுக்கட்சி. அதன் சின்னம் "வீடு". சுமார் கால்நூற்றாண்டு காலம் இவ்விரு கட்சிகளும் கீரியும் பாம்பும் போலவே அரசியல் செய்தன. ஆனால் 1972 ஆம் ஆண்டு பிரதமர் அமரர்.சிறிமாவோ பண்டாரநாயகா தலைமையிலான அரசாங்கம் கொணர்ந்த தமிழர்களின் அடிமை சாசனம் என வர்ணிக்கப்பெற்ற குடியரசு அரசியலமைப்பைத் தொடர்ந்து தமிழ் மக்களின் ஐக்கியம் கருதியும் அரசியல் தேவை கருதியும் இரண்டு கட்சிகளும் இணைந்து பொதுவான "தமிழர் விடுதலைக் கூட்டணி" என்ற அரசியல்கூட்டமைப்பும் அதன் பொதுவான சின்னமான "உதய சூரியன் சின்னமும் 1976இல் உருவாகின. இவ்விரு தலைவர்களும் தத்தம் கட்சிகளையும் சின்னங்களையும் தூக்கிப்பிடிக்காமல் பொதுச்சின்னத்தின் கீழ் ஒன்றிணைந்தனர். அமரர் எஸ்.ஜெ.வி.செல்வநாயகம் அவர்கள் அதுவரை கடைப்பிடித்த சமஸ்டிக்கொள்கையையும் அமரர். ஜி.ஜி.பொன்னம்பலம் அதுவரை கடைப்பிடித்த ஒற்றையாட்சி கொள்கையையும் கைவிட்டுத்தான் புதிய தமிழீழத் தனி நாட்டுக் கொள்கையினை ஏற்றுக்கொன்டிருந்தனர். இவ் அரசியல் நிகழ்வு தற்போதுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் மனம் கொள்ள வேண்டியதொரு முன்னுதாரணமாகும். எனவே இன்றைய கிழக்கு மாகாணத்தின் அரசியல் களநிலையைக் கருத்தில் கொண்டு சம கால அரசியல் தேவை கருதி தத்தம் அரசியல் கட்சிகளின் கருத்தினால் முரண்பாடுகளையும் கட்சிகளில் உள்ள தனிநபர் முரண்பாடுகளையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உருவாக இருக்கிற சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்த கூட்டணியின் பொதுச் சின்னத்தின் கீழ் எதிர்வரும் கிழக்கு மாகாண சபை தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் முன்வரவேண்டும். இந்த இலக்கினை அடைவதற்கு கிழக்கு மாகாண தமிழர்கள் அனைவரும் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தில் திரளுகின்ற போது, தலைவர்களும் கட்சிகளும் மனம் மாறுவார்கள்.

கட்சிகளும் சின்னங்களும் மக்களுக் கானவையே தவிர கட்சிகளுக்கும் சின்னங்களுக்கும் மக்கள் அடிமைப்படமுடியாது. எனவே கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் மத்தியிலுள்ள பொது அமைப்புகளும், ஆன்மீகவாதிகளும், கல்விமான்களும், புத்திஜீவிகளும், துறைசார் நிபுணர்களும், தொழில்வான்மையாளர்களும், கலை - இலக்கிய – சமூக – அரசியல் செயற்பாட்டாளர்களும் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தொழிலாளர் சமூகங்களும், வர்த்தக நடவடிக்கையாளர்களும் எனச் சமூகத்தின் அத்தனை தரப்புக்களும் கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உருவாகவுள்ள அரசியல் கூட்டு அணியின் கீழும், அக் கூட்டு அணியின் பொதுச் சின்னத்தின் கீழும் ஒன்றிணையும்படி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளினதும் தலைமைப் பீடங்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். அப்படியொரு நிலையில் மக்களின் அபிலாஷையைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் புறந்தள்ள முடியாது. எனவே இறுதிக்கட்டத்திலாவது யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு பொதுச்சின்னத்தின் கீழ் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இணைந்து கொள்ளும் எனக் கிழக்குத்தமிழர் ஒன்றியம் நம்பிக்கை கொண்டுள்ளது.

09. கேள்வி : அப்படியான நிலையிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மனம் மாறவில்லையானால் கிழக்கு தமிழர் ஒன்றியம் என்ன நிலைப்பாட்டை எடுக்கும்?

பதில்: அப்படியான நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பானது கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் இலக்கிற்கு குறுக்கே நில்லாது. 2008இல் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலில் போட்டியிடாமல் விலகி நின்றது போல் விலகி வழிவிட வேண்டும் என்பதே கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் நியாயமான எதிர்பார்ப்பாக இருக்கும். தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த விடயத்தில் உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை உவத்திரம் தராமலாவது இருக்கலாமல்லவா?

10. கேள்வி: அப்படியும் தமிழ் தேசிய கூட்டமைப்பு வழிக்கு வரவில்லையாயின்.....?

பதில் : விடமாட்டீர்கள் போலிருக்கின்றது. அப்படியாயின் பொதுச்சின்னத்தின் கீழ் ஒன்றிணைய முன்வருகின்ற கட்சிகளுடன் கலந்துரையாடி, தீர்க்கமான முடிவொன்றினை கிழக்கு தமிழர் ஒன்றியம் எடுக்கும். அம்முடிவினை மக்களிடம் கொண்டு செல்வோம். மக்கள் முடிவெடுப்பார்கள். இது தவிர்க்கமுடியாததாகும். தீராத நோய் ஒன்றை குணப்படுத்த அறுவை சிகிச்சைதான் ஒரே ஒரு வழி என்றாகிவிட்டால் அதனை மேற்கொள்வதுதானே விஞ்ஞானபூர்வமான செயற்பாடாகும். அரசியல் என்பது ஓர் சமூக விஞ்ஞானமாகும். அதில் பரிசோதனை முயற்சிகள் அவசியமானதும் தவிர்க்கமுடியாததுமாகும்.



## படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்

# நெல் விற்பனையும் ஒரு போராட்டமே!



"கடன்பட்டு, கஸ்டபட்டு வேளாண்மை செய்தாலும் உரிய நெல்லினை உரிய விலைக்கு கொடுக்க முடியுதுமில்லை, அரசாங்கமும் நாம் அறுவடை செய்யும் காலத்தில் நெல்லினை கொள்வனவு செய்வதுமில்லை" என மார்கண்டும், சிவலிங்கமும் வவுணதீவு சந்தியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப்பகுதியில் அதிகளவாக வேளாண்மை செய்கையே மேற்கொள்ளப்படுகின்றன. இப்பகுதியில் உள்ள மக்கள் வசதிபடைத்தவர்களாக



இல்லாவிட்டாலும், வேளாண்மை செய்வதில் அக்கறையானவர்கள், இதனால் வருடாந்தம், தம்மிடம் உள்ள தங்க நகைகளை அடகு வைத்தும், வங்கியில் அல்லது தனியாரிடமிருந்து பணத்தினை கடன்பெற்றும் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுகின்றமை வழமையானதொன்றே. வேளாண்மைச் செய்கையின் போது, இலாபம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் வேளாண்மை செய்ய வேண்டும், சோற்றுக்கு நெல் வேண்டும் என்ற நிலையில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுகின்றனர். இதன்மூலம் இலாபத்தினை ஈட்டமுடியாவிட்டாலும், வீட்டிலே உணவுக்கு நெல் இருந்தால் போதும் என்ற மனநிலையை கொண்டவர்களாவும் இப்பகுதி விவசாயிகள் உள்ளனர். வரட்சி, வெள்ளம், நோய்த்தாக்கம் போன்றவற்றினால் வருடாந்தம் வேளாண்மை செய்கையின் போது, மக்கள் நட்டத்தினை எதிர்கொள்கின்றமையும் கடந்த காலங்களில் இடம்பெற்றதொன்றே. கடந்த காலங்களில் வெள்ளமேற்பட்டு வேளாண்மைச் செய்கை முற்றாக அழிவடைந்து, ஒரு மூடை, இருமூடை நெற்களுடனும், வெறுமையாகவும் வீடு சேர்ந்த வரலாறுகளும் இருக்கின்றன. இதனால் வாங்கிய கடன்களை அடைக்க முடியாது, பல விவசாயிகள் தவித்த காலங்களும் உள்ளன" என்று மார்க்கண்டு சிவலிங்கத்திடம் கூறிக்கொண்டிருந்தான்.

இயற்கையும் சிலவேளைகளில் விவசாயிகளுக்கு சீற்றத்தினை



கொடுத்து நிற்கின்ற அதேவேளை, நாட்டினது அரசாங்கமும் வசதிகளையும், வாய்ப்புக்களையும், சலுகைகளையும் உரிய காலப்பகுதியில் வழங்குவதுமில்லை. 2018ம் ஆண்டிற்கான சிறுபோகச்செய்கை வேளாண்மை அறுவடை மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறைவுபெற்றுவிட்டது. ஆனால் நெல்லினை உரிய விலையில் விற்கமுடியாத விவசாயிகளாக, வெறும் புறுபுறு வார்த்தைகளுடனே உலாவிக்கொண்டிருக்கின்றனர்.

**படுவான் பாலகன்**

இதனைப்பார்த்த போதுதான், விவசாயிகளின் மனநிலையும், அவர்கள் அனுபவிக்கின்ற வேதனைகளையும் தன்னால் உணரமுடிந்ததாக கூறிய மார்க்கண்டு, விவசாயிகளின் எண்ணப்பாட்டினையும் சிவலிங்கத்திடம் மேலும், கூற ஆரம்பித்தான்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், சிறுபோகச் செய்கையினை குளங்களில் உள்ள நீரினையும், மழைநீரினையும் எதிர்பார்த்து வேளாண்மை செய்கையில் ஈடுபடுவதுண்டு, இப்பகுதியில் உள்ள குளங்களில் பெரும்பாலானவை சிறியளவிலான குளங்களாவே அமைந்துள்ளன. அதேவேளை வயல்வெளிப்பகுதிகள் விரைவாக நீர்வற்றும் பகுதிகளாகும், வருடாந்த குடிநீர், குளிநீருக்காக போராடுகின்ற நிலைமைகளும் காணப்படுகின்றன.

ஜீன் மாதப்பிற்பகுதியிலிருந்தே குடிநீர், குளிநீருக்கான பிரச்சினை ஆரம்பித்துவிடும். இதனால்தான் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை போன்ற பகுதிகளுக்கு முன்னதாகவே இப்பகுதியில் சிறுபோக செய்கைக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஜீலை மாத இறுதிக்கு முன்பே அறுவடைகள் இடம்பெற்று நிறைவுபெற்றுவிடும். நெல் அறுவடை இடம்பெறும் சமகாலங்களில், அரசாங்கத்தினால் நெல்கொள்வனவு செய்யப்படுவதில்லை. இதனால் நெல்லுக்கான நிர்ணயவிலையை தீர்மானிப்பவர்களாக, மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வெளியிலிருந்து வருகைதருகின்ற நெல்கொள்வனவு வர்த்தகர்களே உள்ளனர்.

கஸ்டங்களை அனுபவித்து அறுவடை செய்தாலும், அறுவடை செய்யும் நெல்லுக்கான விலையை நிர்ணயிக்க முடியாதவர்களாக விவசாயிகள் உள்ளனர். இதனால் நெல் அறுவடை செய்தவுடன், நெல் அறுவடை செய்த இயந்திரகாரர்களும், கடன்கொடுத்தவர்களும் தம்மை நெருக்கிக்கொள்ள, விவசாயிகளும் நெல்லினை கொள்வனவு செய்ய வருகின்ற வர்த்தகர்கள்; எவ்விலைக்கு நெல்லினை வினவுகின்றனரோ?, அவ்விலைக்கே நெல்லை விற்கின்ற நிலையே இன்றுவரை இருந்து வருகின்றது. இதனால் விரக்தியுற்ற படுவான்கரைப்பகுதி விவசாயிகள் இலங்கை அரசாங்கம் உரமானியம் வழங்குவதிலும், நெல்லைக் கொள்வனவு செய்வதிலும் தம்மை புறந்தள்ளி வைக்கின்றது. என்ற ஆதங்கத்தினைகூட விவசாய ஆரம்பகூட்டத்தில் கூறியிருந்தனர். அப்போது, ஏனைய பகுதியில் இடம்பெறும் விவசாய காலப்பகுதிக்கு ஏற்ப, மட்டக்களப்பு விவசாயிகள் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடவில்லையென்ற கருத்தினையும் அதிகாரிகள் கூறியிருந்தனர். ஆனாலும் தமது நிலைப்பாட்டினை அதிகாரிகள் உயர்மட்டத்தில் எடுத்துக்கூறவில்லையா? என்ற வினாவையும் விவசாயிகள் தொடுத்திருந்தனர் எனவும் மார்க்கண்டு குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் இவ்வருட சிறுபோகச் செய்கைக்கான, நெல்அறுவடை ஆரம்பித்தவுடன், உடனடியாக நெல்கொள்வனவு செய்யுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர நெல்சந்தைப்படுத்தல் சபைக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். இதற்கமைய இந்த மாவட்டத்தில் நெல்கொள்வனவு பணிகள் ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி காலை 10.00மணிக்கு அம்பாறை மாவட்டத்தில் உஹனவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கூறப்பட்டு, நெல்கொள்வனவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் அதற்கு முன்னதாக ஓரிரு மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பித்தும் நெல்கொள்வனவு அப்போது நடைபெறவில்லை. இதனால் விவசாயிகள் நெல்லினை குறைவிலைக்கு விற்று விரக்தியுற்றமையே நடந்தேறிய உண்மை. என்று கூறிய மார்க்கண்டு. மீண்டும் பெரும்போக வேளாண்மைச் செய்கைக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், பெரும்போகச்செய்கைக்கான ஆரம்பத்திகதிகளை தீர்மானிப்பதுபோல, நெல்அறுவடையின் போது நெல்லினை நியாய விலையில் கொள்வனவு செய்வதற்கேற்ற நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டுமென கூறிவிட்டு மார்க்கண்டும் அவ்விடத்தினைவிட்டு அகன்றார்.

# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 16

## மர ஆலையில் பீனிக்ஸ் பறவையாகத் தோன்றிய மக்கள் விடுதலை முன்னணி

ரஸஞானி

தென்னிலங்கையில் தோன்றிய அரசியல் கட்சிகள் பற்றி புதிதாக எதுவும் சொல்ல வேண்டியதில்லை. அவற்றுக்கு நீண்ட வரலாறு இருக்கிறது. இலங்கை சுதந்திரம் பெற்றதும் தொடங்கிய ஐக்கிய தேசியக்கட்சியின் நிறம் பச்சை. அதன் தேர்தல் சின்னம் யானை.

அதிலிருந்து எஸ்.டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா பிரிந்துவந்து தொடக்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிறம் நீலம். அதன் தேர்தல் சின்னம் கை.

இவை இரண்டினதும் தலைமைக் காரியாலயங்கள் கொழும்பில் மருதானை டார்லி ரோட்டிலும் (ஸ்ரீல.சு.கட்சி) கொள்ளுப்பிட்டியில் காலி வீதியிலும் (ஐ.தே.க. ஸ்ரீகோத்தா) அமைந்துள்ளன. லங்கா சமசமாஜக்கட்சியின் காரியாலயம் யூனியன் பிளேஸிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினது (மாஸ்கோ சார்பு) பொரளை கொட்டாவீதியிலும் ( இன்று கலாநிதி என். எம். பெரேரா வீதி) அமைந்துள்ளன.

இவை இவ்விதமிருக்க, ஸ்ரீல.சு.க.வுடன் பிரிந்து தனது மனைவி சந்திரிக்காவுடன் சேர்ந்து விஜயகுமாரணதுங்காவும் மக்கள் கட்சி என்ற ஒரு அரசியல் இயக்கத்தை தொடக்கி, கொழும்பில் தெமட்டகொடையில் அதன் காரியாலயத்தை அமைத்தார். அவர் கொல்லப்பட்ட பின்னர் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களினால் அவரது மக்கள் கட்சி மீண்டும் ஸ்ரீல.சு.கவுடன் இணைந்துவிட்டது.



இந்தப்பின்னணிகளுடன் மக்கள் விடுதலை முன்னணியை பார்த்தால் இந்தக்கட்சி



விஜேவீரா குடும்பம்

முதலில் 1971 இல் ஆயுதம் ஏந்தி கிளர்ச்சி செய்தமையால் தடைசெய்யப்பட்டு, மீண்டும் 1977 இல் பொது மன்னிப்பின் கீழ், அதன் தலைவர்கள் விடுதலையாகி, மீண்டும் பீனிக்ஸ் பறவையைப்போன்று எழுந்து பறந்து தங்களுக்கென ஒரு தனித்துவமான அடையாளத்தை தக்கவைத்துக்கொண்டது.

இவர்களின் பார்வையில் பச்சை, நீலக்கட்சிகள் முதலாளித்துவக்கட்சிகள் எனவும் சிவப்புக்கட்சிகளாக விளங்கிய கம்யூனிஸ்ட், சமசமாஜக்கட்சிகள் சந்தர்ப்பவாதக்கட்சிகள் எனவும் சொல்லப்பட்டது.

இலங்கையிலிருக்கும் அரசியல் கட்சிகள் அனைத்திற்கும் வரலாறு இருப்பதுபோன்று ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணிக்கும் சுமார் அரை நூற்றாண்டு கால வரலாறு இருக்கிறது.

1943 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்திருக்கும் ரோகண விஜேவீரா குழந்தையாக இருந்த சமயத்தில் அவரது தாயாரினால் மருத்துவத்தேவைகளுக்காக அப்பகுதியில் கிளினிக் நடத்திவந்த டொக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்காவிடம் தான் அழைத்துச்செல்லப்பட்டவர்.

விக்கிரமசிங்கா இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கோ சார்பு) தலைவராக இருந்தவர். மத்திய தர குடும்பத்தைச்சேர்ந்த விஜேவீரா முதலில் குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளராகவே இருந்தார். அதனால் ரஷ்யாவில் லுமும்பா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படிக்கச்சென்று, அதனை பாதியில் நிறுத்திவிட்டுத்திரும்பி, சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். அங்கும் அதிருப்தியுற்று தொழிலாளர்கள், விவசாயிகள், பாட்டாளிகள் மற்றும் வேலையில்லாத திண்டாட்டத்தினால் பாதிப்புற்றிருந்த பட்டதாரி இளைஞர்களை அணிதிரட்டிக்கொண்டு மக்கள் விடுதலை முன்னணி என்ற இயக்கத்தை உருவாக்கி, அவர்கள் மத்தியில் ஐந்து வகுப்புகளை நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

மிகவும் துணிச்சல் மிக்க விஜேவீரா பேச்சாற்றலும் நிரம்பப்பெற்றவர். மாறி மாறி பதவிக்கு வரும் பச்சை - நீலம் கட்சிகளும் அவற்றுக்குத் துணைசெல்லும் சிவப்புக்கட்சிகளும் தேசத்தை அழிவுப்பாதையிலிருந்து மீட்காமல், ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசமாக நடந்து அடக்கு முறைக்கே பாதை காண்பிக்கும் எனச்சொல்லி தீவிரமான அரசியல் நிலைப்பாட்டினை எடுத்தார்.

அதன்விளைவாக அவர் 1971 இல் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டபோது, அதே ஆண்டு ஏப்ரல் மாதம் தென்னிலங்கையில் சில பொலிஸ் நிலையங்களை அவரது கட்சியினர் தாக்கி கிளர்ச்சி செய்தனர்.

அதனால் தடைசெய்யப்பட்ட ம.வி.மு. உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். பொலிஸ் நிலையங்களின் பின்வளவுகளில் எரிக்கப்பட்டனர்.

பலரது உடல்கள் களனி கங்கையிலும் வீசப்பட்டன. களனி கங்கையில் மூங்கில்கள் படகுகள் மாத்திரமல்ல இளைஞர்களின் சடலங்களும் 1971 காலப்பகுதியில் மிதந்து வந்த காட்சியை பலரும் மறந்திருக்கமாட்டார்கள்.

கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்கள் யாழ்ப்பாணம், கண்டி போகம்பரை, கொழும்பு வெலிக்கடை, மகசீன், அநுராதபுரம், நீர்கொழும்பு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக குற்றவியல் ஆணைக்குழு அமைக்கப்பட்டு நீதியரசர் அலஸ் முன்னிலையில் விசாரணையும் நடந்தது. அதில் தோன்றிய விஜேவீரா லயனல் போப்பகே உட்பட மற்றும் பலருக்கு நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நீதியரசர் அலஸ் எழுதிய நூலில் மேலும் தகவல்களை அறியமுடியும்.

1977 இல் பதவிக்குவந்த ஜே.ஆர். ஜெயவர்தனாவின் அரசு சிறையிலிருந்த தனது கட்சி ஆதரவாளர்களையும் விடுவிக்கவேண்டியிருந்தமையால் தனது அதிகாரத்தை பயன்படுத்தி குற்றவியல் ஆணைக்குழுவை இரத்துச்செய்தார். அதனால் ரோகண விஜேவீரா, லயனல் போப்பகே உட்பட அனைத்து மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் வெளியே வந்ததும் மீண்டும் தங்கள் இயக்கத்தை வளர்ப்பதில் தீவிரம் காண்பித்தனர். அழிக்கப்பட்ட ஒரு அரசியல் இயக்கத்தை மீண்டும் கட்டி எழுப்பி வளர்ப்பதற்கு அவர்களிடம் நிதியிருக்கவில்லை. போதிய வளங்களும் இல்லை. சிறையில் அவர்கள் இருந்தபோது இயற்றிப்பாடிய விடுதலைக்கீதங்களை மேடைகள் அமைத்து பாடினர். உண்டியல் குலுக்கினர். துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டனர். வண்ண வண்ண சுவரொட்டிகளில் தங்கள் கொள்கைகளை பதிவு செய்தனர். தாம் ஜனநாயகப்பாதையில் மக்களிடம் வந்திருப்பதாகச் சொல்லி தங்கள் கட்சியையும் பதிவுசெய்தனர்.

அவர்களுக்கு ஒரு அலுவலகம் தேவைப்பட்டபோது அதற்கு உதவு வதற்கு ஒரு சிங்கள இளைஞர் முன்வந்தார். அவரிடத்தில் கொழும்பு ஆமர் வீதியும் புளுமெண்டால் வீதியும் சந்திக்கும் முச்சந்தியில் ஒரு மர ஆலை இருந்தது.

அங்கு பெரிய மரங்களை அரிந்துவிற்கும் தொழிற்சாலை இயங்கியது.

அந்தக்கட்டிடத்தின் மேல் தளத்தில் ஒரு அறையில் மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி அலுவலகம் இயங்கியது. நாடேங்கும் தங்கள் கட்சியின் பிரசாரக்கூட்டங்களை நடத்தினார்கள்.

லுமும்பா பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு மருத்துவராக வெளியே வந்திருக்கவேண்டிய ரோகண விஜேவீரா கட்சியின் தலைவராகவும் பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு பொறியிலாளரக வந்திருக்கவேண்டிய லயனல் போப்பகே கட்சியின் பொதுச்செயலாளராகவும் இயங்கி மக்கள் விடுதலை முன்னணியை அரும்பாடுபட்டு வளர்த்தெடுத்தார்கள்.




பஸ்களிலும் ரயில்களிலும் பயணித்து கூட்டங்களில் பேசி வந்திருக்கும் இக்கட்சியின் தலைவர்களும் உறுப்பினர்களும் எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழ்ந்தனர். குறிப்பிட்ட மர ஆலையில் அமைந்த கட்சிக்காரியாலயத்தில் செங்கொடிகளை தரையில் விரித்து உறங்கியும் சாப்பாட்டுக்கடையிலிருந்தும் கட்சி தோழர்களின் வீடுகளிலிருந்தும் பார்சல் உணவு வாங்கி பகிர்ந்துண்டு வாழ்க்கையை சுதந்திரமாகத்தொடர்ந்தனர்.

களனி கங்கையோரத்தில் கொகில வத்தை என்ற பிரதேசத்தில் அச்சகம் அமைத்து, இங்கிருந்து, நியமுவா, செஞ்சக்தி, ரது பலய, Red Power முதலான பத்திரிகைகளையும் வெளியிட்டனர்.

விடுதலைக்கீதம் என்ற தலைப்பில் நாடெங்கும் இசை நிகழ்ச்சிகளை நடத்தி மக்களின் ஆதரவு திரட்டினர். கட்சி ஆதரவாளர்களின் வீடுகளில் தினமும் மதியம் உணவு சமைக்கும்போது ஒரு சுண்டு அரிசியை வேறாக எடுத்துவைத்து, சேமித்து தருமாறும் கோரிக்கை விடுத்து அடிமட்டத்திலிருந்து கட்சியை வளர்த்தெடுத்தனர். வண்ண வண்ண சுவரொட்டிகளின் மூலம் மக்களை கவர்ந்தனர்.

இதனைப்பார்த்த ஸ்ரீமாவோ அம்மையார் அவர்களை "தாப்ப விப்லவ காரயோ " என வர்ணித்து ஏளனம் செய்தார். அதன் தமிழ் அர்த்தம் மதில் புரட்சியாளர்கள். ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்பியிருந்த இக்கட்சி உள்ளுராட்சி மற்றும் மாவட்ட சபைத்தேர்தல்களில் போட்டியிட்டு மக்களின் ஆதரவை கணிசமானளவு பெற்றது. பின்னர் 1982 ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் இக்கட்சியின் வேட்பாளராக ரோகண விஜேவீர போட்டியிட்டு 275,000 வாக்குகளைப் பெற்றார். அதாவது இலங்கை அரசியலில் மூன்றாவது இடத்திற்கு இக்கட்சி வந்தது.

1983 மே மாதம் கொழும்பு நகர மண்டபத்திடலில் நடந்த ம.வி. முன்னணியின் மாபெரும் மேதினக்கூட்டமும் அதற்கு முன்னர் நிகழ்ந்த மாபெரும் ஊர்வலமும் அன்றைய ஜே.ஆரின் ஆட்சிக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதனை மீண்டும் அடக்குவதற்கு அவர் தருணத்திற்காக காத்திருந்தார். அந்த ஆண்டு ஜுலை கலவரம் வந்தது. அதனை ஒரு சாட்டாக வைத்து மக்கள் விடுதலை முன்னணி உட்பட இதர இடதுசாரிக்கட்சிகள் மீதும் தடைவிதித்தார்.

எனினும் கம்யூனிஸ்ட் கட்சி, வாசுதேவ நாணயக்காரவின் நவ சமசாமஜக்கட்சிகளின் மீதான தடை தளர்த்தப்பட்டது. ரோகண விஜேவீரா உட்பட அவரது கட்சி உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கில் தலைமறைவானார்கள்.

தொடர்ச்சி... (பக்கம் -23 )



# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்)

## பகுதி 16

1994ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் நிறுத்திய சுயேற்சைக்குழு தோல்வியுற்றிருந்தாலும் மாவை சேனாதிராசாவின் வெற்றியைத் தடுத்தமை தமிழர் அரசியல் தலைமையின் யாழ் மேலாதிக்கத்திற்குக் கிடைத்த தோல்வியும் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் கௌரவத்திற்கு கிடைத்த வெற்றியுமாகும். அந்த வகையில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கச் சுயேற்சைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய இப்பத்தி எழுத்தாளரின் பங்களிப்பு அம்பாறை மாவட்டத் தமிழர்களின் அரசியல் வெட்டு முகத்தில் ஒரு முக்கியமான பதிவு ஆகும்.

இந்த இடத்தில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் ஏனைய செயற்பாடுகளையும் பதிவு செய்து விட்டு 1994ம் ஆண்டுக்கு அப்பால் செல்வது உசிதமாகும்.



தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்

மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட மங்களமுனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வெளியே 1990.'.92 காலப்பகுதியில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸிற்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அக்காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தையும் சங்கத்தலைவர் அமரர்.குனரட்ணம் அவர்களின் தலைமையிலே கொழும்பில் கூட்டாகச் சந்தித்து அம்பாறை மாவட்டத் தமிழர்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார பிரச்சனைகளை விளக்கி அது சம்மந்தமான மகஜர்களையும் எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளிடமும் நேரில் கையளித்தது மட்டுமல்ல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேசி எத்தகைய இறுதி உடன்படிக்கைக்கும் வருவதற்கு முன்னர் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்துடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்று வேண்டுகோளும் விடுத்திருந்தது. இக்கூட்டுச் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பங்குபற்றியது.

மேலும் மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தேர்வுக் குழுவுக்கு அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கமும் 16.12.1990ல் ஓர் அறிக்கை அனுப்பியது. அவ் அறிக்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் எவ்வாறு உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை விளங்கியும், அதிகாரப்பகிர்வு அலகாக வடகிழக்கு இணைந்த அலகை வலியுறுத்தியும் தயாரிக்கப்பட்டிருந்தது. இவ் அறிக்கையினை இப்பத்தி எழுத்தாளரே தயாரித்திருந்தார். இந்த அறிக்கையின் பிரதிகள் சகல தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால் இவற்றையெல்லாம் மறந்துவிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி 1994ம் ஆண்டு தேர்தலின் போது தன்னிச்சையாக நடந்து கொண்டமை அம்பாறை மாவட்டத் தமிழர்களை அவமானப்படுத்திய செயலாகும்.

1994 வரை அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் செயற்பாடுகள் சிறப்பாயிருந்தன. ஆனால் 1994 ம் ஆண்டு பாராளுமன்ற பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் சங்கம் போட்டிக்கு நிறுத்திய சுயேற்சைக்குழு தோல்வியடைந்ததினால் அதன் செயற்பாடுகளில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டது.

எனினும் 1996 முற்பகுதியில் சங்கம் புனரமைக்கப்பட்டு கே.ஏ.ஜோர்ஜ் தலைமையில் புதிய நிருவாகம் ஒன்றும் தெரிவானது. இப்புதிய நிருவாகத்தின் செயற்பாடுகள் மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைவாக இருக்கவில்லை. இந்த நிருவாகம் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் மாவை சேனாதிபதியினதும் சார்பாகச் செயற்படும் போக்கைக் கொண்டிருப்பதாகக் குறைகள் தெரிவிக்கப்பட்டன. முக்கியமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் முன்வைக்கப்பட்ட தென்கிழக்குப் பிராந்தியம் சம்பந்தமாக சங்கம் மௌனம் சாதித்தமை மக்களைச் சங்கத்தின் மீது அதிருப்தி கொள்ளச் செய்தது.

இந் நிலையில் கட்சி அரசியலுக்கு அப்பால் அம்பாறை மாவட்டத் தமிழர்களை ஐக்கியப்படுத்தும் வகையில் சில நலன்விரும்பிகள் முன்வந்து, கட்சி அரசியல் சாராத புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, பிரதேச மட்டத்தில் கிளைகளைத் தாபித்து, அக்கிளைச்சங்கங்களிலிருந்து யாப்பின் படி தெரிவு செய்யப்பெற்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் வருடாந்த மாவட்டப் பொதுக்கூட்டத்தை 14.05.1998ல் கல்முனையில் நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்தனர்.

இந்தக் கூட்டத்தில் கல்முனையைச் சேர்ந்த சுப்பிரமணியம் (ஓய்வுநிலை அதிபர்) தலைவராகவும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த அமரர்.சிவஞானசெல்வக்குருக்கள் செயலாளராகவும் தெரிவாகினர். அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் மாவட்ட இணைப்பாளர் எனும் புதிய பதவிக்கு இப்பத்தி எழுத்தாளரான தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1994 இலிருந்து 2000ம் ஆண்டுவரையிலான காலப்பகுதி அம்பாறை மாவட்டத் தமிழர்கள் மீண்டும் அரசியல் அனாதைகளாகின்ற காலப்பகுதியாகும். 1989ம் ஆண்டுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்திலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் தலைவரான எம்.எச்.எம்.அஸ்ரப் மட்டுமே நேரடியாகத் தெரிவுசெய்யப்பெற்ற ஒரேயொரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர். 1994ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர்களுடைய ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பறிபோனதால் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதாவது அஸ்ரப் அவர்களும் சம்மாந்துறையைச் சேர்ந்த யூ.எல்.எம். முகைதீன் அவர்களும் தெரிவாகியிருந்தனர். இந்த அனுபவம் தந்த பாடம் என்னவெனில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களுக்குரிய ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இழக்கப்பெற்றால் அதனால் விளைகின்ற அனுகூலத்தை முஸ்லிம் காங்கிரசே பெற்றுக்கொள்ளும் என்பாகும்.

1994இல் பாராளுமன்ற உறுப்பினரான அஸ்ரப் அவர்கள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்தில் இணைந்து அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1994 ஆகஸ்ட் மாதம் பதவிக்குவந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக பலம் பெற்றது. அதனாலேயே அஸ்ரப் அமைச்சர் பதவியை பெற முடிந்தது. தமிழர்தம் அரசியலின் அறுவடை தமிழரசுக் கட்சிக் காலத்திலிருந்து இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலம் வரை இருந்ததையும் இழப்பதாகவே இருந்துவந்தது.

உத்தேச தென்கிழக்கு அலகு

---

1994 ஆகஸ்டில் ஆட்சிக்குவந்த பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பங்காளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருந்த நிலையிலும் அக்கட்சியின் தலைவர் எம்.எச்.எம்.அஸரப் அவர்கள் அரசின் அமைச்சரவையில் ஒருவராக (துறைமுகங்கள், கப்பல்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு) இருந்த நிலையிலும் இனப்பிரச்சினைத் தீர்வில் அதுவரை காலமும் வடக்கு கிழக்கு இணைந்த அதிகாரப்பகிர்வு அலகை நிபந்தனையோடு அதிகரிப்பதாகக் கூறிவந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந் நிலைப்பாட்டிலிருந்து முற்றாகவே மாறி வடக்கு கிழக்கு இணைந்த மாகாண அலகின் ஆளுகைக்கு உட்படாத தனியான முஸ்லிம்பெரும்பான்மை மாகாணமொன்றினை கிழக்கு மாகாணத்திலே அம்பாறை மாவட்டத்திலே பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய நிலப்பரப்பை அடிப்படையாக வைத்து ஏற்படுத்துவது என்று தனது கோரிக்கையை அரசியல் அரங்கிலே முன்வைத்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் 02.04.1995 அன்று கொழும்பிலே நடாத்திய தனது 13 வது தேசிய மாநாட்டினையொட்டி வெளியிட்ட மலரிலே மேற்படி கோரிக்கையின் அம்சங்கள் தெளிவாகக் கூறப்பட்டிருந்தன.

1994 ஆகஸ்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி பதவியேற்றத்தைத் தொடர்ந்தும் 1994 நவம்பரில் சந்திரிகா ஜனாதிபதியானதின் பின்பும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் மீண்டும் முடுக்கிவிடப்பெற்றன. அதன் ஒரு கட்டமாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பெற்றது. இத்தெரிவுக்குழுவிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் கட்சியினால் மேற்படி கோரிக்கை சமர்ப்பிக்கப்பெற்றது. 1995 ஆகஸ்ட் மாத முற்பகுதியில் அரசாங்கமானது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தனது அரசியல் ஆலோசனைகளை வெளியிட்ட பின்னர் இத்தனியான முஸ்லிம் மாகாணக் கோரிக்கை அரசியல் அரங்கிலே தென்கிழக்கு அலகு அல்லது தென்கிழக்கு மாகாணம் அல்லது தென்கிழக்கு பிராந்தியம் என வர்ணிக்கப்பெறலாயிற்று.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் பேசும் மக்கள் என்ற செற்றொடரை நிராகரித்து இலங்கை முஸ்லிம்கள் என்ற தனித்துவ இனக் குழுமத்தின் கோரிக்கையாகவே தமது யோசனைகளை முன்வைத்தது. தமிழரசுக் கட்சிக் காலத்திலிருந்தே தமிழ் அரசியல் தலைமையினால் பயன்படுத்தப்பெற்று வந்த தமிழ் பேசும் மக்கள் என்ற செற்பிரயோகத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிராகரித்திருந்தது என்பதும் அதுகாலவரை தமிழ் அரசியல் கட்சிகள் கோரிவந்த சுயாட்சியுடைய மொழிவாரி மாநிலம் என்ற கோட்பாட்டிற்கு மாறாக வடகிழக்கில் மத ரீதியான அரசியல் அலகு ஒன்றையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கையாக முன்வைத்திருந்தது என்பதையும் தமிழர் தம் தற்போதைய அரசியல் தலைமையான தமிழத் தேசிய கூட்டமைப்பு காலந்தாழ்த்தியாவது புரிந்துகொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கு இணைப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரித்து ஏற்றுக்கொள்ளும் என்ற எடுகோலில் இன்னும் ஸ்ரீலங்க முஸ்லிம் காங்ரஸ் கட்சித் தலைமையைத் தமிழ் தேசிய கூட்டமைப்பு நம்பி அதற்காக கிழக்குத்தமிழர்களின் குறிப்பாக அம்பாறை மாவட்டத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் நலன்களையெல்லாம் முஸ்லிம்களிடம் தாரைவார்த்துக்கொண்டிருப்பது அரசியல் முட்டாள் தனம் ஆகும்.

1976ம் ஆண்டு தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது பொத்துவில் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பெற்றதன் மூலம் 1977 தேர்தலில் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு ஒரு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் சுதந்திர இலங்கையில் முதன்முதலாக கிடைத்து. இம்மக்களின் சமூக பொருளாதார அரசியல் வாழ்வில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்ட போதும் அவையாவும் 1990 கலவர காலத்தில் முற்றாகவே அழிக்கப்பெற்றன. அந்த அழிவின் அவலங்களில் இருந்து உளவியல் ரீதியாக மெல்ல மெல்ல மீண்டுகொண்டிருக்கும் நிலையில்தான் தமிழர் விடுதலைக் கூட்ணியின் தனிச்சையான தான்தோன்றித்தனமான அரசியல் அரசியல் நடவடிக்கையினால் (மாவை சேனாதிராசாவைக் கொண்டுவந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை வேட்பாளராக அம்பாறை மாவட்டத்தில் நிறுத்தியது) மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல 1994ம் ஆண்டுத் தேர்தலில் தங்கள் ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநித்துவத்தையும் பறிகொடுத்து அம்பாறைமாவட்டத் தமிழர்கள் அரசியல் அனாதைகள் ஆனார்கள்.

இதையெல்லாம் கவனத்தில் கொள்ளாத தமிழர் விடுதலைக் கூட்டணி, அம்பாறைமாவட்டத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் இருப்பிற்கே வேட்டு வைக்கக்கூடிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தென்கிழக்கு முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை நிபந்தனையின்றி ஆதரிப்பதாக அறிக்கைவிட்டது.

-- தொடரும் --




## அரசியல் தீர்வா? அபிவிருத்தியா!?

இலங்கையில் இடம்பெற்ற, பெறுகின்ற அரசியல் நான்கு விதமானது. இவை;

01. உடன்பாட்டு அரசியல்
02. இணக்கப்பாட்டு அரசியல்
03. முரண்பாட்டு அரசியல்
04. தஞ்ச அரசியல்

இவ்வரசியல்கள் பற்றி சற்று ஆராய்வோம்.

### 01. உடன்பாட்டு அரசியல்

இலங்கையிலிருக்கும் தேசியக் கட்சிகளில் முக்கியமானவை ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுமாகும். இக்கட்சிகள் தேர்தல் காலத்தில் ஏனைய சிங்களக் கட்சிகளுடன் உடன்பாட்டுக்கு வந்து தொகுதி பங்கீடுகள் செய்து அத்தொகுதிகளில் வெற்றி பெறுகின்ற வேட்பாளர்களின் தொகைக்கு ஏற்றவாறு அமைச்சர்களையும், பிரதி அமைச்சர்களையும் வழங்க வேண்டுமென உடன்பாட்டுத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தேர்தலில் நிற்கின்றன. தேர்தல் முடிந்ததும் செய்துகொள்ளப்பெற்ற உடன்படிக்கையின் படி அமைச்சுகளும், பிரதி அமைச்சுகளும் பங்கீடு செய்யப்படுகின்றன. இது தேர்தலுக்கு முன்பே செய்து கொள்ளப்படும் உடன்பாட்டு அரசியலாகும்.

### 02. இணக்கப்பாட்டு அரசியல்

தேர்தல் நடைபெறுகின்ற வேளையில் தங்கள் கட்சியின் கொள்கைகளையும் பிரயோகித்து தேர்தலில் கணிசமான ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையைப் பெற விரும்பும் தேசியக் கட்சிகளுடன் பேரம்பேசி இணக்கப்பாட்டுக்குச் சென்று தங்களுக்கு தேவையான அமைச்சர்களையும், பிரதி அமைச்சர்களையும் பெற்று தங்கள் சமூகத்துக்கும் தொகுதிகளுக்கும் தேவையான அபிவிருத்திகளை மிக இலகுவாக செய்து கொள்கின்றனர். இது தேர்தல் முடிந்த பின் இணைந்து கொள்கின்ற அரசியல், இவ் அரசியலே முஸ்லிம் காங்ரசும், இலங்கை தோட்ட தொழிலாளர் காங்ரசும் செய்து வருகின்ற அரசியல் சாணக்கியமாகும். இது வரவேற்கத்தக்கது. தங்களின் கட்சியையோ அல்லது தங்கள் இனத்தையோ அடகு வைக்காமல் தன்னாதிக்கத்தோடு செயல்படும் முறையாகும். இதனால் முஸ்லிம் மக்கள் அந்தந்த கால கட்டத்தில் வெவ்வேறு அமைச்சுப் பதவிகளையும் கைப்பற்றி பெரும்பாலான அமைச்சுகளை பல சந்தர்ப்பங்களில் பெற்று சகல திணைக்களங்களிலும் வேலைவாய்ப்பைக் கொடுத்து தங்கள் சமூகத்தை மேம்பட வைத்துள்ளார்கள். பாராட்டத்தக்கது.

### 03. முரண்பாட்டு அரசியல்

தேர்தலில் நின்று வென்று ஐக்கியதேசிய கட்சி ஆட்சி அமைத்தாலும் சரி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியமைத்தாலும் சரி அவைகளோடு இணங்காமல் அமைக்கப்படும் எந்தக்கட்சியின் அரசாங்கத்தோடும் முரண்பட்டுக்கொண்டே அரசியல் நடத்துவதே வடகிழக்கிலுள்ள பெரும்பாலான கட்சிகளின் நிலைப்பாடாகும். இவ்வரசியலால் இதுவரை எந்தவித அரசியல் ரீதியான லாபத்தையும் தமிழ் மக்கள் நுகரவில்லை. கட்சிகள் பெற்றுக் கொடுக்கவுமில்லை. அடுத்து

### 04. தஞ்ச அரசியல்

தேசியக் கட்சிகளோடு இணைந்து அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டு தேசியக் கட்சிகளின் சின்னத்திலாவது அல்லது தங்கள் தங்கள் கட்சியின் சின்னத்திலாவது தேர்தலில் போட்டியிடுவதே தஞ்ச அரசியலாகும். இணக்கப்பாட்டு அரசியலையும் முரண்பாட்டு அரசியலையும் நடாத்தும் கட்சிகளின் வாக்குகளை சிதறடிப்பதே இவர்களின் நோக்கமாகும். இவ்வரசியல் தமிழ் மக்களை மேலும் அடிமையாக்கும் அரசியலாகும்.

இந்த நான்கு அரசியலையும் ஸ்ரீலங்கா மக்கள் உணராதவர்களில்லை.

முன்பு 1965ம் ஆண்டு தேர்தலில் சமஸ்டி ஆட்சியே எங்களுக்கு தேவையென தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்து, தேர்தலில் வடகிழக்கில் பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றி, சமஸ்டி கட்சியென அழைக்கப்படும் தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆட்சி அமைக்க முடியாத கையறு நிலை காணப்பட்டபோது ஐக்கிய தேசிய கட்சியுடன் இணக்கப்பாட்டுக்குச் சென்று, திரு.மு.திருச்செல்வத்தை உள்ளூராட்சி அமைச்சராக்கி தங்கள் இணக்கப்பாட்டை ஐக்கிய தேசிய கட்சிக்கு தெரிவித்துக்கொண்டது. அபிவிருத்தி தேவையென்று அன்று எஸ்.ஜே.வி ஏற்றுக்கொண்டார்.

இதேவேளை அபிவிருத்தி எங்களுக்கு முதன்மையான தேவையென்று மக்கள் ஏற்றுக் கொண்டார்களா? என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஆராய்வோம்.

முன்பு இணக்கப்பாட்டு அரசியலுக்கு சென்ற இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் கைத்தொழில் அமைச்சராகி செய்த அபிவிருத்தியின் எச்சங்கள் இன்னும் நம் கண்முன்னே இருக்கின்றன. அவைகளில் மிகவும் சுட்டிக்காட்டக்கூடியவை; வாழைச்சேனை காகித தொழிற்சாலை, காங்கேசன் சீமேந்து தெழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு. இவைகளைப் பெற்றும் மக்கள் அவரை அங்கிகரிக்கவில்லை.

இதுபோல் மட்டக்களப்பில் சுயேட்சையாக விளக்குச் சின்னத்தில் நின்று வெற்றி பெற்ற திரு.பி.ராஜன் செல்வநாயகம் இணக்கப்பாட்டு அரசியலுக்கு சென்று மாவட்ட அரசியல் அதிகாரியாகி செய்த சேவைகள் ஏராளமானவை. அவரையும் எங்களுக்கு அபிவிருத்தி தேவையில்லையென மறு தேர்தலில் கட்டுக்காசு இழக்குமளவுக்கு மக்களின் வாக்கு பதிவாகியது மறக்க முடியாது.

அடுத்து 1983ல் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் பகிரங்கமாக வைக்கப்பட்ட தேர்தல் பொக்கிஷம் "குட்டிமணி வேண்டுமா? அபிவிருத்தி வேண்டுமா?" என்பதே. மக்கள் அபிவிருத்தியை உதறித்தள்ளி அத் தேர்தலில் 19 வட்டாரங்களுக்குரிய மாநகர சபையின் ஆசனங்களில் 13 ஆசனங்களில் வெற்றியடையச் செய்து அபிவிருத்தி முக்கியமல்ல என்று எடுத்துக் காட்டியிருந்தார்கள்.

E.P.D.P கட்சி அபிவிருத்திக்கே முக்கியத்துவம் கொடுத்து அபிவிருத்தி அரசியலின் மூலம் தங்கள் இருப்பை உயர்த்திக் கொள்ள அபிவிருத்திக்காய் நகர்த்தலைச் செய்தார்கள். மக்கள் எதிர்பார்த்த அளவு வெற்றியைக் கொண்டிருக்கவில்லை. E.P.D.P க்கும் அபிவிருத்திக்கும் ஏற்பட்ட சறுக்கலாகுமிது. இவைகளிலிருந்து நாம் உணரக்கூடியது அரசியல் தீர்வும் அதனோடு கூடி அபிவிருத்தியும்தான் மக்கள் கேட்பது. இன்று அபிவிருத்திக்கு முதலிடம் கொடுத்து கூட்டமைப்பு ஜனாதிபதி செயலணி அமர்வுக்கு தன்னை ஆஜர் படுத்தியுள்ளது.


இதை எவ்வளவு தூரம் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

## பாணமை மன்னன்! பலம் வாய்ந்த தமிழரசுகள்!

### பால்டியசின் குறிப்புகளிலிருந்து 03

மைங்கணான் மகிழறிவன்

போனகிழமை போர்த்துக்கேயருக்கு எதிரான கண்டி அரசின் போரில், யாழ்ப்பாண அரசும், கண்டியின் திறை நாடுகளும் வழங்கிய உதவிகளின் பட்டியலைப் பார்த்திருந்தோம். இந்த எண்ணிக்கையில் எந்தளவு உண்மை இருக்கக்கூடும் என்று தெரியவில்லை. இவற்றில் மிகைப்படுத்தலோ, இட்டுக்கட்டல்களோ இருந்தாலும், அங்கு சொல்லப்படும் எண்ணிக்கைகளை, அந்தந்த சிற்றரசுகளின் வலிமையை ஒப்பிடுவதற்கு நாம் பயன்படுத்தலாம்.



எண்ணிக்கை அடிப்படையில் பாணமை அரசும் அதன் துணை அரசுகளும் கொடுத்திருந்த படையுதவியின் எண்ணிக்கை, அப்போதைய தனியரசுகளில் ஒன்றான யாழ்ப்பாண அரசு கொடுத்த படை உதவியை விட சுமார் மூன்று மடங்கு அதிகம். எனவே பாணமை அரசு பலம் வாய்ந்த ஒன்றாக இருந்திருக்கக்கூடும். கிழக்கில் இருந்த அரசுகளில் மட்டக்களப்பும், பழுகாமமும் பாணமை அரசனுக்கு சீதனமாக வழங்கப்பட்டிருந்தன என்ற தகவலும் கவனத்தை ஈர்க்கிறது. கண்டி அரசுக்குத் திறை செலுத்திய மட்டக்களப்பு அரசும், பழுகாம அரசும், பாணமை மன்னனை கொஞ்சகாலம் கண்டி அரசின் பிரதிநிதியாக ஏற்று இருந்திருக்கின்றன என்பது இதன் மூலம் தெரிகின்றது. போர்த்துக்கேயருக்கு எதிராக மிகப்பெரும்படையைத் திரட்டிய பாணமை அரசுக்கு மேலும் பல சிங்களச்சிற்றரசுகளின் ஆதரவும் கிடைத்திருக்கக்கூடும்.

பால்டியஸ் கிழக்குக்கரையில் இருந்த நான்கு அரசுகளைக் குறிப்பிட்டுள்ளார். கொட்டியாரம், மட்டக்களப்பு, பழுகாமம் மற்றும் பாணமை. பாணமை தவிர்ந்த மூன்று தமிழ் அரசுகளைப் பொறுத்தவரை அப்போதைய யாழ்ப்பாண அரசின் சுமார் அரைவாசிப் படைப்பலத்துடன் மட்டக்களப்பு அரசு இருந்திருக்கிறது. மட்டக்களப்பை அடுத்து பலம் வாய்ந்ததாக கொட்டியார அரசும், நான்காவதாக பழுகாம அரசும் விளங்கின. ஆனால், பிறகு (நாம் போனகிழமைக்கு முதற்கிழமை பார்த்த வரிகளில் ) போரைதீவு அரசு பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு சொல்லப்படும் 'மட்டக்களப்பு' என்பது, அப்போதைய தலைமை அரசிருக்கையான சம்மாந்துறைப் பகுதி என்று கொள்வதே பொருத்தமானது என்று முன்பு சொல்லியிருந்தோம். விமலதர்மன் காலத்தைய 1594 போர்த்துக்கேயப் போரில் குறிப்பிடப்படாத போரைதீவு அரசு, செனரத் மன்னன் காலத்தில் (1610கள்) சொல்லப்படுகிறது. பழுகாமத்துக்கும், போரைதீவுக்கும் இடையில் அத்தனை பெரிய தூரமுமில்லை. இதை எப்படிப் புரிந்து கொள்வது? அதற்கு இப்படி விடை காணலாம். போரைதீவு அரசின் தோற்றத்துடனேயே சகோதரச் சண்டைகள் பற்றிய குறிப்புகள் கிடைப்பதால், பழைய வடமட்டக்களப்பில் நிலவிய பழுகாம அரசு இரண்டாகப் பிரிக்கப்பட்டு, போரைதீவு அரசு உருவாகியிருக்கக்கூடும். ஏறாவூர் வரை நீண்டிருந்த மட்டக்களப்பு வாவிக்கு "பழுகாமஆறு" என்றும் ஒரு பெயர் இருந்ததையும், "பழுகாம ஆற்றை இரண்டாகப்பிரித்து போரைதீவும், பழுகாமமும் வரிவசூலிப்பதில் சிக்கல்கள் உருவாகியிருக்கின்றன" என்று செனரத்தைச் சென்று சேர்ந்த செய்தியையும் வைத்து நாம் இந்த முடிவுக்கு வரலாம். இப்படி நிலம் பிரிக்கப்பட்ட காலத்தில் ஏற்பட்ட முரண்பாட்டிலேயே நாம் இத்தொடரின் முதலாம் அத்தியாயத்தில் பார்த்தது போல, தன் மூத்த தமையனை பழுகாம அரசன் செல்லப்பண்டாரம் கொன்றிருக்கக்கூடும். பால்டியசுக்கு மிகக்குறுகிய காலத்திலேயே இந்த மூன்று அரசுகள் மேலும் பிரிந்து பற்றுக்களாகக் குறுகி, கோரளைப்பற்று

தொடர்ச்சி... (பக்கம் -10 )





# பட்டறிவு




## சிங்கள சமூக அமைப்பில் கன்னிப் பரிசோதனை சடங்கு (பகுதி -2)

என்.சரவணன்

சிங்கள சமூக அமைப்பில் நிலவிய கன்னித்தன்மையை பரிசோதிக்கும் இந்த சம்பிரதாயம் இலங்கையில் சில பிரதேசங்களில் முஸ்லிம்களிடமும் பரவி புழக்கத்தில் இருந்தது என்கிறார் வினோதினி டி சில்வா (Cultural Rhapsody: Ceremonial food and Rituals of Sri Lanka, Vinodini De Silva, 2000). இந்தப் பழக்கம் சிலவேளை அரபு நாடுகளில் இருந்து 17 நூற்றாண்டில் வந்து சேர்ந்திருக்கலாம் என்றும் பேசப்படுகிறது. அரபு தேசங்கள் சிலவற்றில் இந்தப் பழக்கம் இருந்திருக்கிறது என்கிற கதையாடல்களையும் காண முடிகிறது. முஸ்லிம் சமூகத்தில் இது எவ்வாறு இருந்திருக்கிறது என்பது பற்றி "இரு உலகங்களுக்கு இடையில்" என்ற தலைப்பில் "முஸ்லிம் பெண்கள் ஆய்வு நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கையொன்றில் விளக்கப்பட்டுள்ளது. (Between Two Worlds, published by the Muslim Women|s Research and Action Forum in 1999). அதில் இப்படி குறிப்பிடப்படுகிறது.

"முதலிரவின் போது படுக்கையில் விரிப்பதற்காக மணப்பெண்ணிடம் ஒரு வெள்ளைத்துணி கொடுக்கப்படும். மணமக்கள் பொதுவாக மணப்பெண்ணின் வீட்டில் தான் முதலிரவைக் கழிப்பார்கள். அதற்கடுத்த நாள் மணமகன் வீட்டார் கொழும்பிலுள்ள மணமகளின் வீட்டுக்கு காலை உணவுக்கு அழைக்கப்பட்டார்கள். சிகப்புப் பூக்களும் மஞ்சளும் மணமகனின் வீட்டுக்கு அனுப்பப்பட்டன. மணமகள் "கற்புள்ளவள்" என்பதே அதன் பொருள். அம்பாறை போன்ற பிரதேசங்களில் "கற்புத்தன்மை" நிரூபிக்கப்பட்டதன் குறியீடாக மணமகளுக்கு தங்க நகைகள் பரிசளிக்கப்படும்."

இப்படி திருமணத்தின்போது கன்னித்தன்மை நிரூபிக்கப்படுகையில் தாளம் இசைத்து கொண்டாடுவது மொரோக்கோ, துருக்கி, அசர்பைஜான் என பல நாடுகளிலும் இருந்திருக்கிறது (Encyclopedia of Islam, 1934). உலகப் பிரசித்திபெற்ற அரபுக் கதைகளின் தொகுப்பான "ஆயிரத்தொரு இரவுகள்" என்கிற இலக்கியத்திலும் இது பற்றி மறைமுகமாக குறிப்பிடப்படுகிறது. மணமகளின் தாயார் தனது மகள் கற்புள்ளவர் என்பதை தெரிவிக்க அந்த இரத்தக் கரைகளை அங்கு வந்திருக்கும் பெண் விருந்தினர்களுக்கு கொண்டு சென்று காட்டுவது அந்த நாடுகளில் சம்பிரதாயமாகவும் இருந்திருக்கிறது. பண்டைய யூதர்களிடமும் இப்படி வழக்கம் இருந்திருப்பதை வேதாகம "பழைய ஏற்பாட்டின்" மூலம் அறிய முடிகிறது. இது தண்டனை வழங்கக் கூடிய ஒன்று என்றும் அறிய முடிகிறது.

பைபிள் - உபாகமம், அதிகாரம் 22

15. அந்த ஸ்திரீயின் தகப்பனும் அவள் தாயும் அவளுடைய கன்னிமையின் அடையாளத்தைப் பட்டணத்து வாசலிலுள்ள மூப்பரிடத்தில் கொண்டுவரக்கடவர்கள்.

17. நான் உன் மகளிடத்தில் கன்னிமையைக் காணவில்லையென்று ஆவலாதியான விசேஷங்களை அவள்மேல் சாற்றுகிறான்; என் மகளுடைய கன்னிமையின் அடையாளம் இங்கே இருக்கிறது என்று மூப்பரிடத்தில் சொல்வானாக; பின்பு பட்டணத்து மூப்பருக்கு முன்பாக அந்த வஸ்திரத்தை விரிக்கக்கடவர்கள்.

20. அந்தப் பெண்ணிடத்தில் கன்னிமை காணப்படவில்லையென்னும் சங்கதி மெய்ப்பட்டதேயானால்,

21. அந்தப் பெண்ணை அவள் தகப்பனுடைய வீட்டுவாசலுக்கு முன்பாகக் கொண்டுவந்து, அவள் இஸ்ரவேலில் மதிகெட்ட காரியத்தைச் செய்து, தன் தகப்பன் வீட்டிலே வேசித்தனம் பண்ணினபடியினாலே, அவளுடைய பட்டணத்து மனிதர் அவளைக் கல்லெறிந்து கொல்லக்கடவர்கள்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்.

இது நீண்ட கால மரபாக சிங்கள சமூகத்தில் நிலவியிருக்கிறதா அல்லது இடைக்காலத்தில் புழக்கத்துக்கு வந்த பழக்கமா என்பது பற்றிய கேள்விகளும் எழுப்பப்படுகின்றன. 17 ஆம் நூற்றாண்டின் இலங்கையின் சமூக பண்பாடு குறித்து அறிய ரொபர்ட் நொக்ஸ்ஸின் நூலைப் பயன்படுத்துவது வழக்கம். அவரது நூலில் இத்தகையை சம்பிரதாயங்கள் பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. அதேவேளை அவரது நூலில் இதற்கு எதிர்மாறான விபரங்கள் காணக்கிடைக்கின்றன. அதாவது திருமணம் செய்துகொள்ளும் பெண்ணானவள்; அதற்கு முன் இன்னொருவரின் துணைவியாக இருந்தாரா இல்லையா என்பது முக்கியமான ஒன்றல்ல என்று ரொபர்ட் நொக்ஸ் பதிவிட்டிருக்கிறார்.

சிங்கள திருமண விளம்பரங்களைப் பார்க்கையில் பெரும்பாலான விளம்பரங்கள் தமது "தூய்மையான", "கன்னித்தன்மையுள்ள மகளுக்கு" போன்ற விடயங்கள் மணமகன் தேவை விளம்பரங்களின் போது மணமகள் தரப்பு விளம்பரங்களில் காணலாம். ஆனால் மணமகள் கோரி விடுக்கப்படும் விளம்பரங்களில் மணமகன் கற்பொழுக்கமுள்ளவன் என்று குறிப்பிடப்படுவதில்லை. அதேவேளை, அதே விளம்பரத்தில் கற்புள்ள பெண் கோரப்படும்.

அது போல சிங்கள சஞ்சிகைகள் பத்திரிகைகள் என்பவற்றில் மருத்துவ மற்றும் பாலியல் குறித்த பிரச்சினைகளை வாசகர்கள் மத்தியில் இருந்து கேள்வி பதில் பகுதிக்கு கிடைக்கப்பெறுபவற்றில் பெருமளவானவை மணமாகாத பெண்களிடமிருந்து என்பதும், அவர்களிடமிருந்து அதிகம் எழுப்பப்படும் கேள்வி கன்னித்தன்மையுடன் தொடர்புடையவை என்றும் டொக்டர். சிறியாணி பஸ்நாயக்க குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

"கன்னி" என வழக்கில் உள்ள அர்த்தப்படுத்தப்பட்டுள்ள கருத்து:- திருமணமாகாத இளம்பெண், கன்னிகழியாத பெண், திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்பவள் போன்றன. ஆனால் இதை விட இன்னொன்றும் மேற்படி நிலைமைகளின்படி தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அது தான் "முதலாவது பாலுறவின் போது இரத்தம் வெளியேறும் பெண்ணே கன்னித்தன்மையுடையவள்" என்பது.

எனவேதான் திருமணத்திற்கு முன் இளம் பெண்கள் மத்தியில் கன்னித்தன்மை பரிசோதனையில் தாம் தோற்றுவிடுவோமோ என்கிற அச்சமும், பீதியுமாக கடும் உளச்சிக்கலுக்கு ஆட்பட்டு வாழநேரிட்டுள்ளது. குறிப்பாக கன்னிச்சவ்வு பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்கிற அவர்களின் அச்சம் அப்பெண்களுக்கு தொற்றிகொண்டிருக்கும். இது விளையாட்டின் போது அல்லது சைக்கிள் ஓட்டும் போது, கடினமான வேலைகளின் போது, அல்லது ஏதாவது ஒரு வழியில் ஏற்பட்ட காயங்களின் விளைவாக இது ஏற்பட வாய்ப்புண்டு. இப்படியான சந்தர்ப்பங்களால் தான் சம்பந்தப்பட்ட பெண்ணோ அல்லது பெற்றோர்களோ இது இன்ன காரணத்தினால் ஏற்பட்டது எனும் மருத்துவ சான்றிதழைப் பெற முனைகிறார்கள். சிறியாணி பஸ்நாயக்க தனது கட்டுரையில் இப்படிக் குறிப்பிடுகிறார்.

"ஒரு நாள் தாயொருத்தி தனது மூன்று வயதுடைய மகளை என்னிடம் கொண்டு வந்து மகளின் கன்னித்தன்மை அழிந்து விட்டதா எனப்பரிசோதித்தப் பார்க்கும்படி அழுதவாறு கெஞ்சினாள். தாய் சமயலறையில் கீழே உட்கார்ந்திருந்து கத்தியால் காலால் அழுத்தியபடி கீரை அரிந்திருக்கிறாள். சிறுமி அவ்வழியாக ஓடும் போது கத்தியின் மெல் விழுந்து பிட்டத்தை வெட்டிக் கொண்டாள். காயத்தினால் குழந்தையின் எதிர்காலத்திற்கு எதுவித தீங்கும் நேராது என நான் கூறியபோது அந்தத் தாயின் முகத்தில் ஏற்பட்ட ஆறுதலையும், மகிழ்ச்சியையும் அதைப் பார்த்த ஒருவரால் தான்நம்பமுடியும். அதன் பின்னர் தனது குழந்தை கன்னி தான் என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் தரமுடியுமா என்று கேட்டாள். இவ்வாறான கன்னித்தன்மை சான்றிதழ்கள் இருப்பதாக எனக்கு தெரியாது. என்றாலும் இவ்வாறான சான்றிதழ் கோரப்படாமல் எனக்கு ஒரு வாரம் கழிவது அபூர்வமானது." என்கிறார்.

இலங்கையில் நிலவும் பல்வேறு கொடிய பிரச்சினைகளுக்கு முன்னாள் இத்தகைய மோசமான சம்பிரதாயங்களும் நடைமுறையில் நிலவத்தானே செய்கிறது. புனிதம், தூய்மை, தீட்டு, துடக்கு போன்ற ஐதீகங்களும், மூடநம்பிக்கைகளும் புனைவுகளாக ஆக்கி அவற்றுக்கு நிறுவன வடிவம் கொடுத்து அதன் தொடர்ச்சியைப் பேணுவதில் வெற்றி கண்டு வந்துள்ள ஆணாதிக்க சமூக அமைப்பை வெறும் வர்க்க சமூக அமைப்பால் தலைகீழாக புரட்டிவிடமுடியாது. அதற்கு போதிய சித்தாந்த பலம்பொருந்திய பண்பாட்டுப் புரட்சியும் அவசியமானது.

இறுதியாக சிறியாணி பஸ்நாயக்க கூறிய கூற்றோடு முடிக்கலாம். "ஆய்வுகளின்படி 76வீதமான ஆண்கள் கன்னிப் பெண்களையே திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். திருமணத்தின் போது இந்த அத்தனை ஆண்களுக்கும் கன்னிப்பரிசோதனை நடாத்தப்பட்டால் எத்தனை பேர் சித்தியடைவார்கள்?"

விளம்பரம்



தொடர்ச்சி...

# பாணமை மன்னன்! பலம் வாய்ந்த தமிழரசுகள்!

முதல் அக்கரைப்பற்று வரையான பழைய மட்டக்களப்புத் தேசம் வளர்ச்சி கண்டிருக்கிறது என்பதைக் காணலாம்.

பாணமை அரசன் கண்டி இளவரசி ஹந்தானஅதகாசியை மணந்திருக்கிறான். அவனுக்குச் சீதனமாக மட்டக்களப்பு மற்றும் பழுகாம அரசுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவன் இறக்கும் போது, அவனது இறுதி ஆசை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவனுக்கு இராஜமரியாதையோடே இறுதிக்கிரியைகள் இடம்பெறுகின்றன என்பனவெல்லாம், அவன் கண்டியின் அரசவம்சத்தில் வந்த ஒருவன் என்பதைக்காட்டுகின்றது.

பாணமை மன்னன் ஏன் செனரத்துக் கெதிராக போர்த்துக்கேயருடன் சேரவேண்டும்? ஒரே காரணம் அவன் கண்டி அரசகுலம் என்பதே. செனரத் மன்னன் முறைப்படி கண்டி அரசுக்கு உரிமையானவனல்ல என்பதை பல ஆய்வாளர்கள் கூறியிருக்கிறார்கள். அவன்தன் ஆட்சியுரிமையை உறுதிப்படுத்த முந்தைய மன்னன் முதலாம் விமலதர்மசூரியனின் மனைவி தோனாகதரீனாவை மாத்திரமன்றி, தனக்கு மகள் முறையான இளவரசிகளையும் மணந்துகொண்டு கடுமையாக விமர்சிக்கப்பட்டான் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. பாணமை மன்னன் மணந்திருந்த ஹந்தானஅதகாசி, கண்டி இளவரசி என்பதால், அவனுக்கு கண்டிச் சிம்மாசனத்தில் கூடிய உரிமை இருந்திருக்கக்கூடும். அவனுக்கு ஏனைய கண்டிச் சிற்றரசுகளின் ஆதரவும் இருந்திருக்கிறது என்பது, போர்த்துக்கேயருக்கெதிரான 1594ஆண்டு போரில் அவன் விமலதர்மனுக்கு ஆதரவாக வழங்கிய படையுதவியைப் பார்க்கும்போது தெளிவாகிறது. இக்காரணங்களை உளவறிந்திருந்த போர்த்துக்கேயர், விமலதர்மன் இறந்து, செனரத் மன்னனான பின்னர் பாணமை அரசனை துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி கண்டியைக் கைப்பற்ற முனைந்திருக்கலாம். அதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

கண்டி அரசின் நீதிவிசாரணை ஆரம்பகாலத்தில் எப்படி நிகழ்ந்தது என்பதும் பால்டியசின் குறிப்பிலிருந்து நமக்குத் தெரியவருகிறது. நீதி விசாரணைகளை தனியே மன்னன் நிகழ்த்தவில்லை. பால்டியஸ் “50 பிரபுகள்” என்று சொல்லும், ஐம்பது மூத்தவர்கள் ஆராய்ந்தே நீதி வழங்கினார்கள் என்பது அங்கு சொல்லப்பட்டுள்ளது. மன்னராட்சி என்பது தனியே மன்னன் கைகளில் மாத்திரம் அதிகாரங்களை அள்ளிவைக்கவில்லை. குறிப்பிடத்தக்க அளவு அதிகாரங்கள் குல மூத்தார்கையிலும் இருந்தன என்பதை இதன் மூலம் நாம் அறிந்துகொள்கிறோம். அரசைப் பிடிப்பதற்காக போர்த்துக்கேயருடன் இணைந்து சூழ்ச்சியில் இறங்கினாலும், பாணமை அரசனின் இறுதிக் கணங்கள் விவரிக்கப்படும் போது அவன் மீது பரிதாபமே ஏற்படுகிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம் இறந்துவிடுவோம் என்று அறிகின்ற ஒருவன், அதிலும் வாழ்க்கையில் எந்தக் கஷ்டத்தையுமே அறியாத ஒருவன், உல்லாசவாழ்க்கையை அனுபவித்த மன்னர் வம்சாவளியில் வந்த ஒருவன் எத்தனை வேதனைப்படுவான் என்பதை பால்டியசின் வரிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஏதோ காரணத்தால் அவனை வெறுத்ததாலோ, அல்லது அவனது தவறுக்காக தாங்கள் தண்டனை அனுபவிக்கக்கூடாது என்பதற்காகவோ, பாணமை மக்கள் கண்டி அரசிடம் சரணடைந்து தங்கள் நாட்டைக் காப்பாற்றியிருக்கிறார்கள். இத்தனைக்கும் பாணமை மன்னன் பெருவீரன் என்பதும், ஏனைய சிங்கள அரசுகளின் ஆதரவும் அவனுக்கு இருந்தன என்பதும் விமலதர்மனுக்கு அவன் செய்த உதவிகள் மூலம் தெரியவருகிறது.

பரிதாபத்துக்குரிய இன்னொரு விடயம் என்ன வென்றால், இந்தப் பாணமை மன்னனின் பெயர் என்னவென்றே தெரியவில்லை. அவனை மணமுடித்த கண்டி இளவரசி ஹந்தானஅதகாசியிலிருந்து, அவனை அடுத்து பாணமையில் ஆட்சிபீடமேறிய சமவாகு வரை, சரித்திரம் அவனோடு தொடர்புடையவர்களின் பெயர்களை ஆவணப்படுத்தி வைத்திருக்கிறது. என்னதான் இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்கவன் என்றாலும், என்னதான் ராஜமரியாதையோடு அடக்கம் செய்யப்பட்டாலும், வரலாற்றில் பெருஞ்சுழியில் பெயரும் அடையாளமும் இல்லாத ஒருவனாக பரிதாபகரமாக மறைந்துபோகிறான் அவன். உண்மைதான். வரலாறு என்பதற்கு பெரும்பாலும் இரக்கமே இருப்பதில்லை.









## குறுக்கெழுத்துப்போட்டி இல:–11

அரங்கம் இரா. தவராஜா.





### இடமிருந்து வலம்:

01. தமிழர்கள் சந்தித்ததும் கூறும் மொழிப் பண்பாடு.
05. எதையும் நிறைவு செய்ய சூழ் உரைப்பது.
06. அதிரடியாக தீங்கு விளைவிப்பது. (குழம்பிக் கிடக்கிறது)
08. பெரும்பாலான தமிழ்ப் பெண்கள் நெற்றியிலிடும் திலகமா. (குழம்பிக்கிடக்கிறது)
10. தத்தளித்தல் - குத்தல் போன்ற சொற்களின் ஒத்தக்கருத்து. (குழம்பிக் கிடக்கிறது)
11. தாய்
14. ஊட்டச்சத்துக்களில் ஒன்று.
15. செவ்வாய்க்கு பின், வியாழனுக்கு முன்.

### மேலிருந்து கீழ்:

01. கிழக்குப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள ஊர். (குழம்பிக் கிடக்கிறது)
02. வருத்துதல்.
03. இந்துக்களின் விழா வைபவங்களில் வாசலில் வைப்பது. (குழம்பிக் கிடக்கிறது)
04. ராசிகளில் ஒன்று. (குழம்பிக் கிடக்கிறது)
07. தரித்தல்.
09. இது இதைக் கெடுக்குமாம்.
12. பாயும் மிருகம் தலை கீழாக பாய்ந்து விட்டது.
13. பார்.

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 10.09.2018க்கு முன்னர்

அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.
அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல:–07 இன் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ரு | 3 வி | | 4 மு | ரு | 5 கு |
| 6 ர | சி | த் | 7 த | ல் | | ற |
| சு | | 8 த | வ | லை | | வ |
| | 9 ர | க | ளை | | 10 தே | ர் |
| 11 க | வி | ன் | | 12 நா | ரை | |
| றை | | | 13 அ | ரி | ய | ம் |
| | 14 அ | ரி | வை | ய | ர் | |

சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலி:~

மகேஸ்வரி இராஜேந்திரன் (காரைதீவு - 01)

-- இவருக்குரிய பரிசுப் பணம் அனுப்பிவைக்கப்படும்.

-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.





# நகைச்சுவை நடிகர்கள்



நகைச்சுவை நடிகர்கள் யார்? இவர்களை கட்டியக்காரன், கோமாளி, தொம்பங்கூத்தாடி, விதூஷகன், விகடகவி, ஹாஸ்ய நடிகர், (ப/பூன் - சிரிப்பை உண்டாக்கக் கூடியவன்) என்றெல்லாம் குறிப்பிட்டு அழைப்பார்கள். இவர்களை இந்தக் காலகட்டத்தில் ஹாஸ்ய நடிகர்கள் என்று சொல்கின்றார்கள். அதிக நாகரீகம் வந்துவிட்டபடியால் இவர்களின் நடிப்பை நகைச்சுவை நடிப்பு என்று வழங்குகிறார்கள்.

நகைச்சுவை நடிப்பு என்பது சாதாரணமான நடிப்பு அல்ல. அந்த நடிப்பை நடிக்க அதிக திறமையும் நல்ல பயிற்சியும் தேவை. அல்லது அது கூடப்பிறந்ததாக இருத்தல் வேண்டும். அனுபவமும் அதிகம் வேண்டும்.

இவர்களது பாத்திரத்தின் பணி என்ன?

அரங்கம் ஆயத்தமாகும் முன் சபையோரை அமைதியாக இருக்க செய்வதே முதற்பணியாக கருதப்படுகிறது. அதற்கு கோமாளி ஆட்டமோ, பாட்டோ, கேளிக்கைகளோ செய்து சந்தேசப்படுத்த வேண்டும். இது மிக கஸ்ரமான வேலை ஆகவேதான் திறமையுள்ள கோமாளியின் உதவி தேவைப்பட்டது.

இப்படியான நடிகர்கள் பழங்காலம் முதலே இருந்து வருகின்றார்கள். நம் நாட்டில் மட்டுமல்ல எல்லா தேசங்களிலும் இருந்து வருகிறார்கள். கிரேக்கத்தில் உரோமர்களுக்கு முன்பிருந்தே இவர்களின் பங்களிப்பு இருந்து வருகின்றது. ஒவ்வொரு அரச தர்பாரிலும் ஒருவன் இருப்பான். அவன் தெனாலிராமன் போன்று விவேகமும் சமயோசித புத்தியும் நிறைந்தவனாக இருப்பான்.





இவன் அரசனையும் சபையோர்களையும் தன் விகட பேச்சுக்களாலும் செய்கைகளாலும் சந்தோசப்படுத்திக்கொன்டிருக்க வேண்டும். அதே நேரம் அரசனின் கோபத்துக்கு ஆளாகாமலும் இருக்கவேண்டும்.

ஆதிகாலத்தில் மேல் நாட்டினர் தாம் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு கொடிய காட்டு மிருகங்களான சிங்கம், புலி, கரடி என்பவைகளை பிடித்துவந்து அம்மிருகங்களை தனித்தனியாக கூண்டில் அடைத்து உணவு கொடுக்காது பட்டினியாய் இருக்கும்படி செய்து சில நாட்களின் பின் மிருகத்தில் ஒன்றையும் அடிமை ஒருவரையும் ஒரு இரும்புக்கூட்டினுள் அடைத்து வைத்து சண்டை செய்ய விடுவார்களாம். அக்கூட்டினுள் நடக்கும் பயங்கர தாக்குதலையும் ஜீவ போராட்டத்தையும் அடிமைக்கொலை செய்யும் காட்சியையும் பார்த்து மகிழ்ந்து சிரிப்பார்களாம். பின் காலப்போக்கில் மாண்டி சீமா அரண்மனையில் கூனர்களையும் அவலட்சனமானவர்களையும் விகடர்களாக உபபோகித்தார்கள்.

5ஆம் நூற்றாண்டில் இராஜசபை விகடர்களுக்கு தனிப்பட்ட ஆடை கிடையாது. கண்ட கண்ட உடைகளை அவர்கள் தரித்திருப்பார்கள். நாடகம் போகப்போக ஒருவித சீர்திருத்தம் வந்தது. தலையை மொட்டையடிப்பதுடன் மேல் சட்டை பிடித்தமாகவும் கால்கள் பல நிறமுடையவையாகவும் இருக்கும். சந்நியாசி தலையிலும் கழுத்திலும் அணியும் உறையைப் போல் இவர்கள் அணிவார்கள். அது தோள்களின் மீது படர்ந்திருக்கும் கழுதைகளின் காதுகளைப்போல் பாதுகளை தலையில் அணிவார்கள். அதன்மேல் வளைந்த சீப்பையும் செருகுவார்கள். உடைகளின் அநேக பாகங்களில் மணிகளை தைத்துக்கொள்வார்கள். இவர்கள் ஆடும்போது சத்தம் உண்டாகும். கையில் பரிகாச சித்திரங்களை கொண்ட சிறிய கைத்தடி ஒன்றையும் வைத்திருந்தனர். சில வேளைகளில் பெண்களின் நீள ரவிக்கைகளையும் போட்டுக்கொள்வார்கள்.

இந்த உடையை போட்டுக்கொண்டு சபையில் தோன்றி எஜமானை சந்தோசப்படுத்த வேண்டும். ராஜாங்க வேலைகளில் எஜமான் அலுத்திருக்கும் போதும் சாப்பிடும் போதும் அந்த இடத்துக்கு தக்கவாறு விகட நடிப்புக்கள் செய்ய வேண்டும். ஐரோப்பா கண்டத்தில் சில தேசங்களை சேர்ந்த பழைய காலத்து சிறந்த அரண்மனை விகடர்களின் சிறந்த நடிப்புக்களைப் பற்றி, குறித்து அரண்மனையில் ஆவணங்களை வைத்திருந் தார்கள். இங்கிலாந்தில் ஒரு பெரிய பட்டியல் எமன்ட் ஐரன்கை காலத்தில் விகடன் “ஹட்டார்டு“ தொடங்கி முதலாம் சார்ல்ஸின் அரண்மனையை சேர்ந்த விகடனான “மக்கள் ஜான்“ வரையில் பெயர் கொண்டது. மக்கள் ஜான்தான் கடைசியில் இருந்த அரண்மனை விகடன் என்று தெரிகிறது. அதற்கு பிறகு வந்தவர்களைப்பற்றி வரலாற்றில் சரியான தகவலை அறியமுடியாதிருக்கிறது. இறந்த விகடகவிகளில் “றிச்சர்ட் டார்ட்டன்“ என்பவரை மறக்க முடியாது. இவர் மிகச்சிறந்த நடிகர். 1611ஆம் ஆண்டில் இவரது விகட நடிப்பை பற்றி ஒரு புத்தகமே வெளியிட்டார்கள். அதன் பெயர் நரகத்திலிருந்து செய்தி. அதை 1844ஆம் ஆண்டில் சேக்ஸ்பியர் சொசைட்டிக்காக ஹாலிபெல் என்பவர் இரண்டாம்முறை அச்சிட்டார். ஆர்ச்சி ஆல்ம்ஸ்டார் என்ற நடிகர் அளவுக்கு மிஞ்சி குடித்ததால் அரண்மனையில் இருந்தும் தேசத்தில் இருந்தும் விரட்டிவிட்டார்கள்.

பிரான்சு தேச நடிகர்கள் அளவுக்கு மிஞ்சியே நடித்தார்களாம்.

16ம் நூற்றாண்டில் விகடர்களுடைய சிறந்த நடிப்பைப்பற்றிய புத்தகம் வெளிவந்தது. அது லிஸாட்டிலிஸ்ஸிம் அஸ்டூஸி-டோ-பெர்ட்டோல்டோ என்னும் புத்தகம். அதை எழுதியவர் பொலாக்ரா தேசத்தைச் சேர்ந்த கியூலியோ ஷெஷாரேஸே என்பவர். அவர் சங்கீதத்தில் சிறந்தவர். எளிய அவலட்சணமான ஒருவன் கிராமவாசி லம்பார்டுகளின் அரசனான “அலிபாயின்“ அரண்மனையில் தோன்றி சிறந்த விகட நடிப்பால் எல்லோரையும் களிக்கச் செய்தது பற்றிய கதையது. அந்தப் புத்தகம் இத்தாலி தேசத்தில் அநேக ஆண்டுகள் சிறந்த புத்தகமாக விளங்கியதாக அறியக்கூடியதாக இருக்கிறது.

ராஜசபை விகடர்கள் இல்லாமல் தனிப்பட்ட முறையில் நடித்த விகடர்கள் 18ம் நூற்றாண்டு வரையில் இருந்தார்கள். ஆங்கிலப் பிரபு ச.ஃபக்கின் அரண்மனை விகடன் டிக்கி பியாஸ், முதல் எலிஸபத்து ராணி காலம் வரை இருந்தான். அவன் புகழ்பெறும் காலத்தில் காலமாகிவிட்டான். அவனது மறைவுக்குப் பிறகும் அவனுடைய புகழ் அழியாமல் இருந்தது. நாம் மிக அறிந்த விகடகவி தென்னாலி ராமன். அவனுடைய விகடங்களைப்பற்றி நாம் படித்திருக்கின்றோம். அக்பர் பாதூஷா காலத்து பீர்பாலும் சிறந்த விகடகவியாகவே தன்னை நிலை நிறுத்தியிருக்கிறார். அதேபோன்று அந்ரேயா என்னும் விகடனும் இலங்கையில் அரண்மனை விகடனாக இருந்திருக்கின்றான். விகடகவிகள் புத்தியை சமயோசிதமாக உபயோகிக்க வேண்டும். ராஜசபையில் இல்லாமல் தனிப்பட்ட முறையில் நடிப்பவர்களை நாம் நாடகங்களிலும் திரைப்படங்களிலும் காணலாம்.

கூத்துகள், நாடகம் என்று இருவகையுண்டு. கிராமங்களில் தெருக்களில் நடக்கும் கூத்து தெருக்கூத்து என்றும், மண்டபங்கள் கொட்டகைகளில் நடத்தும் ஆட்டம் நாடகம் அல்லது “டிராமா“ எனப்படும். அதேவேளை கோமாளித்தனமான உடைகளை அணிந்து தன் உயரத்தைக் கூட்டுவதற்காக கம்புகளை காலில் கட்டி, சாதாரண மனிதனின் உயரத்தை விட இரண்டு மடங்கு உயரமாகி விகடத்தனமாக சேஷ்டைகளைச் செய்து மக்களைச் சிரிக்க வைப்பதும் உண்டு. இவ்விகடனை “கம்பங்கூத்தாடி“ என்று அழைப்பர். கம்பங்கூத்தாடியாகி விகடங்களைச் செய்ய பயிற்சியும், சாதூரியமும் மிகத்தேவைப்படும். இது தற்போது மறைந்துவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அறுவடைக் காலத்தில் அறுவடைக்குப் பிறகு கிராமவாசிகள் சந்தோஷமாக இருக்கும்போது கூத்தாடிகள் கிராமம் கிராமமாகச் சென்று கூத்தாடி பரிசு பெறுவார்கள்.

அதேவேளை இலங்கையில் கிழக்குப்பகுதிகளில் ஆடப்படும் ஆட்டம் நாட்டுக்கூத்து அல்லது கிராமிய நாடகம் என அழைக்கப்படுகின்றது.

கூத்துக்களில் நடிக்கும் விகடனுக்கு கட்டியக்காரன் என்று பெயர். மேடைக்கு அவன் வரும் முன்பே திரைக்குள் இருந்த கட்டியக்காரன் “கட்டியக்காரன் வந்தானே!“ என்று பாடிக்கொண்டே வருவான். சபையோருக்கு அவனது நடிப்பு அதிக சிரிப்பை உண்டாக்கும். அவனுடை நடிப்பு மட்டரகமாக இராது. அவனது வருகையை பெரியோர் முதல் சிறியோர் வரை எதிர்பார்த்த வண்ணமே இருப்பர். சபையின் பேச்சும் சத்தமும் கட்டியக்காரன் வந்தவுடன் முற்றும் அடங்கிவிடும். ஆட்டம் ஆரம்பிக்கும் முன்பும் ஆட்டம் நடந்து கொண்டிருக்கும் போது அமைதி குறையும் நேரங்களிலும் இந்த கட்டியக்காரன் தரிசனமாகி சபையை அமைதியாக்கி வைப்பான். இதனால் குழுவின் முக்கியமான அங்கத்தவனாக இவனை கருதுவார்கள்.

இந்தியாவில் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுக்காலத்தெருக்கூத்தில் கட்டியக்காரர்களாக வந்தவர்களில் செங்கல்பட்டை அண்மித்த கிராமங்களில் நடித்த முனிசாமி என்பவரும், வைத்தியநாத ஐயர் பழனி ராமண்ணா, இவர்களுக்குப்பின் திரைப்படங்களில் நடித்த நகைச்சுவை நடிகர்களான காளிரத்தினம், என்.எஸ். கிருஸ்ணன், சந்திரபாபு, வி.கே.ராமசாமி, பாலையா, நாகேஷ், சோ, எஸ்.எஸ்.சந்திரன், எ.கருணாநிதி, சுருளிராஜன், தங்கவேல், கவுண்டமணி, செந்தில், வடிவேல், விவேக் என்று பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

இலங்கையில் சிங்களத்திரைப்பட நகைச்சுவை நடிகர்களில் அனஸ்லியஸ், போ்டி சில்வா, போ்டி குணதிலக, சமியேயால் ரொற்றிகோ, நிஹால் சில்வா (சார்ஜன் நல்லதம்பி), எடி ஜயமன்ன,கெமுனு விஜயசூரிய, பந்து சமரசிங்க, கே.டி.சிறிபால (கோப்பிக்கடே), டெனிசன் கூரே போன்றவர்களோடு இன்னும் பலரும் ஆவர்.

இலங்கைத் தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர்களில் மரைக்கார் ராமதாஸ், ராஜகோபால், செல்வசேகரம், எஸ்.எஸ்.கணேசப்பிள்ளை, பி.எச்.அப்துல்ஹமீட் இன்னும் சிலரும் ஹாலிவூட்டில் சார்லிசப்ளினும் புகழ் பூத்தவர்களாக மிளிர்கின்றார்கள்.

மட்டுநகர் நாடக அரங்குகளில் 60க்கு

**கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா**

பின்பு தேனமுத இலக்கிய மன்றத்தைச் சேர்ந்த எஸ்.ஜி.எஸ்.இருதயராஜ், சக்திதாசன், ஏ.ஜே.மங்களராஜ் ஆகியோரும் தமிழ்க்கலா மன்றத்தைச் சேர்ந்த மாலா ராமச்சந்திரன், நண்டு நவரெத்தினம், மதியொளி கலைக் கழகத்தைச் சேர்ந்த த.யோசப், பொன். தவராசா, சி.சிவலிங்கம், ஆரையம்பதி நாமகள் நவகலா மன்றத்தைச் சேர்ந்த எம். மோனசுந்தரம், கலை வட்டத்தைச் சேர்ந்த கே.கே.மதிவதனன், எச்.எம்.ராஜேந்திரம், முனைக்காட்டைச் செர்ந்த பா.புவனேசசிங்கம், வெண்ணிலா கலைக்கழகத்தைச் சேர்ந்த ச.அன்ரனி மகேசன், இரா.தவராஜா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இன்னும் இதுபோன்ற தமது விகட நடிப்பாலும், சமயோசித வசனங்களினாலும் தங்களை மட்டுநகரில் சிறந்த நகைச்சுவை நடிகர்கள் என நிரூபித்து, காலத்துக்கு காலம் இடம்பிடித்தவர் பலர்.

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY



**Are you 18+ and have GCSEs or work experience?**

**Do you have A levels but missed your place at university?**

- Foundation Degree Business (London Metropolitan University)
- Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
- HND Business (Pearson)
- HND Hospitality Management (Pearson)
- BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
- BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)

Student Finance Available

Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

1st Floor, Commercial House,
406-410 Eastern Avenue, Essex IG2 6NQ
Tel: 0203 500 0239 / 0208 518 1154

1st Floor Olympic House
28-42 Clements Road, Ilford IG1 1BA
Tel: 0208 514 0033 / 0208 478 7695

EMAIL US
info@ncluk.co.uk
FIND OUT MORE
www.ncluk.co.uk

# HOW TO APPLY

NCL
NELSON COLLEGE LONDON

**Step 1:**
**Visit our Campuses or visit the College Website**
You are welcome to visit the College via a pre-booked appointment and meet with staff members and lecturers as well as receiving a tour of either of the campuses.
You can also visit the college website at www.nelsoncollege.ac.uk to find out more about the courses we deliver.

**Step 2:**
**Select a Course and Apply**
Apply online: visit our website sms.nelsoncollege.ac.uk/sms/index.php/login_controller/?l=1
Apply in writing: collect an application form from either of the main receptions or alternatively download it from: https://nelsoncollege.ac.uk/application-form. Completed forms must be sent to the College or submitted in person.

**Step 3:**
**Tests and Interviews**
Once your application has been submitted, you will be asked to come in and take an internal test. You will then be invited to attend an interview prior to receiving an offer.

**Step 4:**
**Enrolment and Induction**
Provided your interview is successful you will be asked to enrol onto the course and will be invited to our induction event to formally welcome you to our college.



# உருட்டிப் பழமாக இனித்த "மறுகா" நிகழ்வு













மலர்ச்செல்வன் மற்றும் அவரது நண்பர்கள் ஏற்பாட்டில் கடந்த வார இறுதியில் மட்டக்களப்பு தாழங்குடாவில் நடந்த இருநாள் பேசிப்பறைதல் நிகழ்வு உருட்டிப் பழமாகத்தான் இனித்தது.

நாம் நேரத்துக்கு நிகழ்வுக்கு போயிருந்தாலும், மட்டக்களப்பு பங்சுவாலிட்டியை முன்னிட்டு, அங்கு அப்போதும் நிகழ்ச்சி ஆரம்பமாகியிருக்கவில்லை. எல்லோரும் ஒருவகை உற்சாகமின்றியே இருந்தனர்.

மலர்ச்செல்வனும் ஒருவித பதற்றத்துடனேயே ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். ஆனால், எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனி∴பா அவர்கள் உருட்டிப் பழங்களுடன் வந்து சேர்ந்ததும் நிலைமையில் கொஞ்சம் மாற்றம்.

வந்ததும் வராததுமாக தனது துடுக்கான கருத்து வெளியீடுகளுடன், தான் எங்களுக்காக கொண்டுவந்த உருட்டிப் பழத்தை எல்லோருக்கும் பகிரத்தொடங்கினார், மக்கத்துச் சால்வை ஹனீ∴பா.

உருட்டிப்பழம் சும்மா சாப்பிட்டா கொஞ்சம் கசக்கும். ஆனால், அதனை நன்றாக உருட்டி சாப்பிட்டால், அதற்கேற்ப இனிக்கும்.

ஆனால், ஹனீ∴பா அவர்கள் கொண்டுவந்த உருட்டிப்பழம் உடனேயே இனிக்கத்தொடங்கிவிட்டது. அதுபோல "மறுகா" நிகழ்வும் முதலில் கசந்தது ஆனால், இனித்தது.

இலக்கிய கருத்துப் பகிர்வுகளில் கதை, கவிதை போன்ற நிகழ்வுகள் இரு நாளும் நடந்தன. சிலவற்றின், நான் இருக்கவில்லை. ஆனால், ஆய்வுகளும், கருத்து பகிர்வுகளும் ஆழமாக இருந்தன.

கவிஞர் ஜெயபாலன், கருணாகரன் போன்ற மட்டக்களப்புக்கு வெளியே இருந்து வந்து கலந்தவர்களும், இங்கேயே உள்ளவர்களும், நல்ல பங்களிப்பை செய்தனர். தமயந்தி எங்கும் நிறைந்திருந்தார்.

மலர்ச்செல்வனின் உபசாரம், உள்ளூர் உணவுகளும் உட்பட, வித்தியாசமாக இருந்தன.

காலதாமத ஆரம்பம், ஒலியமைப்பில் குறைபாடு, மண்டபத்தெரிவு போன்ற சில குறைபாடுகள் உண்டுதான், ஆனால், ஆய்வரங்குகள் சிறப்பாக நடந்தன. அதுதானே மையம்.

நாட்டுக்கூத்து நிகழ்வை நான் தவறவிட்டுவிட்டேன். எனது தப்பு. ஆனால், ஆவணப்படம் குறித்த ஆய்வுக்கு உரிய இடம் கிடைக்கவில்லையோ என்று எண்ணத்தோன்றுகின்றது. கவிதை, கதை போன்றவை குறித்த ஆய்வுகள் சிறப்புத்தான். பாய்வா அவர்களின் இசை நிகழ்வை ஒலியமைப்பு சங்கடப்படுத்திவிட்டது.

உண்மைதான், கொஞ்சம் கசந்தாலும், உருட்ட இனித்தது "மறுகா" நிகழ்வு.

## மரண அறிவித்தல்

மனம் மகிழ
13
09
1961



மனம் நெகிழ
25
08
2018

கல்முனை மணல்சேனையை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு சின்ன உப்போடையினை வசிப்பிடமாகக் கொண்ட

**அமரர் திருமதி. ஜோசப்பின் நளினி எட்மண்ட்**
(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர்)
அவர்கள் 25.08.2018ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

[illegible]

தகவல்: ஆனந்தா ஜோசப்
(0652222635)

அரங்கம் பத்திரிகை மட்டுநகரில் கிடைக்கும் இடம்

EAST LINK AGENCY
POST OFFICE
196, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

-தபால் அலுவலகம்
-தபால் முத்திரை
-Photo copy
-Phone card

உங்கள் பத்திரிகை பிரதிக்கு முந்துங்கள்
இது இலவசம்



1ST TIME IN BATTICALOA




Digital T- Shirt Printing
-SUBLIMATION & EMBROIDERY-



LADSHANA
STAMP & DIGITAL PRINTING
39A, Baily Road, Arasady, Batticaloa. Tel: 065 2224048.

# தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# திருக்குறள் இன்பம் - 4

*(உலகப் பொதுமறையாக விளங்குகின்ற ஒப்பற்ற அறிவு நூலும், தனித்துவம்மிக்க காதல் இலக்கியமுமான திருக்குறள் இலக்கணமிட்டுள்ள காமத்துப்பாலின் இனிய காட்சிகளின் இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.)*

மங்கையரின் முகத்திற்கு, வானத்து மதியை ஒப்பிடுவது சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழ் இலக்கியத்திலே ஒரு வழமைபோல இருந்து வருகிறது.

பண்டைய புலவர்கள் முதல் இன்றைய கவிஞர்கள் வரை எண்ணற்ற இலக்கியச் செல்வர்கள் பெண்களின் முகத்தை விண்ணில் உலாவும் நிலவுடன் ஒப்பிட்டு வண்ணத்தமிழ் மாலைகளைத் தொடுத்துள்ளார்கள்.

திரைப்படப் பாடலாசிரியர்கள் பலர் நிலவையும் பெண்ணையும் ஒப்பிட்டுப் பாடல்களை எழுதித் தள்ளியிருக்கிறார்கள். உதாரணமாக,



"யார் அந்த நிலவு?", "நிலவே என்னிடம் நெருங்காதே" என்றெல்லாம் கண்ணதாசனும், "எந்தனுயிர்க் காதலிக்கு வெண்ணிலாவே நீ இளையவளா மூத்தவளா வெண்ணிலாவே" என்று பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமும், "நிலவு ஒரு பெண்ணாகி உலவுகின்ற அழகோ" என்று வாலியும், பெண்ணை நிலவாக அழைத்துப் பாடியிருக்கிறார்கள்!

இவர்கெளுக்கெல்லாம் வழிகாட்டியான, தெய்வப் புலவர் திருவள்ளுவர், திருக்குறளில், நலம் புனைந்துரைத்தல் என்னும் அதிகாரத்திலே அந்த வேலையை அழகாகச் செய்திருக்கிறார். மங்கையின் முகவடிவினை மதியோடு ஒப்பிட்டுப் பெருமைப்படுத்தியிருக்கின்றார்.

விண்ணில் உலவும் நிலவா? மண்ணில் நிலவும் அவளா?

வானத்தில் நிலவு தண்ணொளியை வீசிக்கொண்டிருக்கின்றது. நட்சத்திரங்களும் வானத்திலேயே மின்னிக்கொண்டிருக்கின்றன. அந்த நட்சத்திரங்கள் நிலவைச் சுற்றி இருப்பவை போலவே தோன்றுகின்றன. அவையும், தாங்கள் நிலவைச் சுற்றவர இருப்பதாகவே எண்ணிக்கொண்டிருக்கின்றன. அதாவது தங்களின் இருப்பிடம் அதுதான் என்று நம்பிக்கொண்டு காலம்காலமாக ஒளிவீசிக்கொண்டு இருக்கின்றன. ஆனால், திடீரென்று அவை பூவுலகிலேயுள்ள என் காதலியைக் கண்டுகொண்டன. உடனே அந்த நட்சத்திரங்களுக்குப் பெரும் குழப்பம் வந்தது. தங்களது இருப்பிடம் பற்றிச் சந்தேகம் எழுந்தது. ஏனென்றால், அவற்றின் பார்வையில் பட்டுக்கொண்ட என் காதலியின் முகம் நிலவைப்போலவே அழகாக இருக்கிறது. முழு நிலவைப்போலவே அவளின் முகத்திலும் ஒளி வீசுகிறது. மொத்தத்தில் இன்னும் ஒரு நிலவு இங்கே இருப்பதுபோல அந்த நட்சத்திரங்களுக்குத் தோன்றியிருக்கிறது.

இதில் உண்மையான நிலவு எது, போலியான நிலவு எது என்று அவற்றால் வேறுபடுத்திப் பார்க்க முடியாதவாறு நிலவும், என்காதலியின் முகமும் ஒன்றையொன்று ஒத்திருந்தன. அதனால், தாம் இப்போது இருக்கும் இடம் வழக்கமான தங்களின் இருப்பிடம்தானா, அல்லது இடம்மாறி நகர்ந்துவிட்டோமா, ஒருவேளை, இப்போது போலியான நிலவுக்குப் பக்கத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றோமா என்று அந்த நட்சத்திரங்கள் ஐயப்பட்டுக் குழம்பின. இவ்வாறு, ஒரு தலைவன் தனது காதலியின் முகத்தின் அழகை நலம் புனைந்துரைக்கின்றான்.

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன் (1116)

வானத்தில் நிலவைச் சுற்றியுள்ள நட்சத்திரங்கள், பூமியிலே உள்ள எனது காதலியின் முகத்தைக் கண்டு அந்த நிலவுக்கும், அவளின் முகத்திற்கும் வித்தியாசம் காணமுடியாமல், தாங்கள் இப்போது தவறான இடத்தில் இருக்கிறோமோ என்று குழப்பம் அடைந்தன, என்பது இதன் நேரடிக்கருத்து.

------ ------ ------

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

மதியிலும் சிறந்தவள், என் மனதைக் கவர்ந்தவள்!

விண்ணில் உள்ள நிலவு எப்படிப்பட்டது? அழகானதுதான். ஆனால், அதன் உருவம் நிலையானதா? ஒவ்வொரு நாளும் தேய்வதும், பின்னர் வளர்வதும்தானே அதன் இயல்பு! ஆனால், மண்ணில் உள்ள மாதர்கள் அவ்வாறில்லையே. அவர்களிலும் என் நெஞ்சில் குடியிருக்கும் அன்புக்காதலி அப்படியில்லையே! அது மட்டுமா? நிலவில் கன்னங் கரேலென்று மறுவொன்றும் இருக்கிறதே! என் காதலியின் அழகிய முகத்தில் அப்படி எதுவும் இல்லையே. ஆகவே என் காதலியின் முகஅழகுக்கு நிகராகுமா அந்த நிலவு? நிகரில்லையென்றால், குறையொன்றுமில்லாத, நிறைந்த அழகுள்ளவளான என் மனங்கவர்ந்த காதலியின் முகம், ஒளிவீசும் நிலவைவிட அழகிலே உயர்ந்ததுதானே? என்று காதலன் ஒருவன் நெஞ்சார நினைத்து, நெஞ்சிடமே கேட்பதைப்போல இந்தக்குறள் அமைந்துள்ளது.

அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப் போல
மறு உண்டோ மாதர் முகத்து(1117)

ஒவ்வொரு நாளும் தேய்ந்து தேய்ந்து சிறுப்பதும், பின்னர் வளர்ந்து வளர்ந்து பெருப்பதுமான நிலவுக்குக் கறுப்பாக ஒரு மறுவும் இருக்கிறது. ஆனால், (என் மனங்கவர்ந்த) பெண்ணின் முகத்தில் அப்படியொரு கரும்புள்ளி இருக்கிறதா? (இல்லையே!) என்பது இதன் நேரடிக்கருத்து.

தீபம் ஆசிரியர் அமரர் நா. பார்த்தசாரதி அவர்கள் தனது, "குறிஞ்சி மலர்" என்ற நாவலில் எழுதிய ஒரு கவிதையிலும் வள்ளுவரைப் பின்பற்றியுள்ளார். அந்தக்கவிதையில்

"நிலவைப் பிடித்துச்
சிறுகறைகள் துடைத்துக் - குறு
முறுவல் பதித்த முகம்"

என்ற வரிகளின் மூலம், நிலவில் கறைகளாக உள்ள மறுக்களைத் துடைத்து இல்லாமல் செய்தபின்னர், புன்னகையையும் சேர்த்ததுபோல் உள்ளது தன் காதலியின் அழகுமுகம்" என்று தன் காதலியைக் கதாநாயகன் புகழ்கின்றான். இவ்வாறு, நிலவைவிடத் தன் காதலியின் முகம் அழகானது என்பதற்குச் சொல்லப்படும் காரணம் வள்ளுவரின் பாதிப்பு என்று நாம் கொள்ளலாம் அல்லவா?

------ ------ ------

யாரும் உன்னைக் காதலித்தால்,
நானும் உன்னை வாழ்த்தி நிற்பேன்!

இதோ பார்! வான்மதியே! நீ, தன்னந்தனியாக வானிலே நீந்திக்கொண்டிருக்கிறாய். சூழவர நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தாலும் அவை எல்லாம் உன்னை மணம் முடிக்கத் தகுந்தவை அல்ல. என்னதான் நீ தண்ணொளியை வீசிக்கொண்டிருந்தாலும் அது உனது சொந்தமல்லவே. கதிரவனிடமிருந்து நீ இரவலாகப் பெற்றுக்கொண்டதுதானே. ஆனால் எனது காதலியின் அழகோ உண்மையானது. அவளுக்கே உரித்தானது. அவளின் வனப்பான முகத்தில் வளமாக வீசுகின்ற ஒளி அவளுக்கே சொந்தமானது. அது போலியல்ல. இரவலாகப் பெற்றதுமல்ல. அதனால்தான் அவளை நான் காதலித்தேன். உன்னாலும் அவளைப்போல உண்மையாக, சுயமாக, சுதந்திரமாக, தனித்துவமாக ஒளிவீச முடியுமானால், அத்தகைய அழகு உனக்கு உண்டானால் உன்னையும் ஒருவன் காதலிப்பான். அவ்வாறு நடந்தால், அப்போது நான் உன்னை வந்து வாழ்த்துவேன். (இப்போது இங்கிருந்து போய்விடு. என் காதலி எனக்காகக் காத்திருப்பாள்) என்று நிலவைப் பார்த்து, தலைவன் எள்ளி நகைப்பதுபோல இந்தக் குறள் அமைந்திருக்கிறது.

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி (1118)

நிலவே! உனக்கு என் காதலியின் முகத்தைப்போல ஒளிவீச முடியுமானால், ஒருவன் உன்னைக் காதலிப்பான். அப்போது உன்னை நான் வாழ்த்துவேன்! என்பதுதான் நேரடியான பொருள்!

------ ------ ------

காதலனுக்கு மட்டுமே காட்டு!

ஆண்கள் சொந்தமனைவியுடன் மட்டுமன்றிப் பல பெண்களுடன் உறவுவைத்துக்கொள்வது சாதாரண வாழ்க்கை முறையாக சங்ககாலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கணிகையர் என்று சொல்லப்படும் விலைமாதர்களிடம் சென்று வருவது வசதிபடைத்த ஆண்களின் வழக்கமாக இருந்திருக்கிறது. சமுதாயத்தின் அந்த நிலையினைச் சீர்திருத்தி, ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்க நெறியை அறிவுறுத்துவதில் திருவள்ளுவரின் பங்கு மகத்தானது. காமத்துப் பாலில்கூட அத்தகைய கருத்துக்களை வலியுறுத்தியே அவரது குறள்கள் அமைந்துள்ளன.

காதலியின் அழகினைப் பார்ப்பதற்கும், இரசிப்பதற்கும், நுகர்வதற்கும் காதலன் மட்டுமே உரித்துடையவன் என்ற கருத்தை காதலியின் அழகிய முகத்தை நிலவோடு ஒப்பிடும் குறளில்கூட அவர் தூவியிருக்கின்றார். "நிலவே! எனது காதலி அழகானவள். அவளது முகம் உன்னைப்போல ஒளி வீசுகிறது. ஆனால் அவளுக்கு நீ சமமானவள் இல்லை. ஏன் தெரியுமா? அவள் என்னோடிருக்கிறாள். எனக்கு மட்டுமே உரியவளாக இருக்கிறாள். அவள் தனது அழகைப் பலர் பார்த்து இரசிக்கும்படி உன்னைப்போல வானத்தில் திரிவதில்லை. நீயும் எனது காதலியின் அழகிய முகத்திற்கு நிகராக வேண்டுமென்றால், பலர் பார்க்கும்படி விண்ணிலே பவனி வருவதை நிறுத்திவிடு. " என்று ஒருவன் நிலவைப்பார்த்து அறிவுறுத்துவது போல அடுத்த குறள் அமைந்துள்ளது. இது காதலின் சிறப்பையும், காதலியின் வனப்பையும் மட்டுமன்றி, மங்கையரின் மாண்பையும், வாழ்வின் மகத்துவத்தையும் கூட எடுத்து உணர்த்துவதன் மூலம், நம்மையெல்லாம் பொய்யாமொழிப் புலவர் பெருமானைப் போற்றிவணங்க வைக்கிறது.

மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி ஆயின்
பலர்காணத் தோன்றல் மதி(1119)

நிலவே! மலர் போன்ற கண்களைக்கொண்ட அழகிய முகத்தையுடைய எனது காதலியைப்போல நீயும் அழகான நிலையில் உள்ளவள் என்பது
உண்மையானால், எல்லோரும் உன்னைப் பார்க்கும்படியாக
வானத்தில் தோன்றாதே. ( அவ்வாறு தோன்றுவதை நிறுத்திக்கொள்!) என்று நிலவைப்பார்த்துத் தலைவன் அறிவுறுத்துவதுபோல இந்தக் குறளின் கருத்து அமைந்துள்ளது.

(தொடரும்)

**தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.**



# மலைகளைப் பேசவிடுங்கள்


## மனிதப்பண்டங்களான மலைகத்தமிழர்

(சிறிமா பண்டாரநாயக்காவின் அறிக்கை - தொடர்ச்சி )



கொழும்பு 7 கலாலயா நாட்டிய பள்ளி நிர்வாகிகள் மத்தியில் மகள் இந்தியாவுடன் நேரு

பிரதேச சபை சட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் சேர்க்கப்படாததன் பின்னணி வெற்றுக் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தமது மூதாதையர் வழிக்காணிகள் பறிக்கப்பட்டதன் காரணமாக, கண்டி குடியானவர்கள் (விவசாய பிரசைகள்) வாழ்வதற்கு மிக்க குறைந்தளவு காணிகளையே கொண்டிருந்ததோடு, அவர்கள்



தம் மூதாதை வழிக்காணிகளில் தொடர்ந்து பயிர் செய்யும் உரிமையும் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டது. அதன் விளைவாக எல்லாப்பக்கங்களிலும் பெருந்தோட்டங்களால் சூழப்பட்ட பள்ளத்தாக்குகளில் அவர்கள் வாழநிர்ப்பந்திக்கப்படனர். பள்ளத்தாக்குகளில் வாழும் கண்டியர்கள் தமது புராதன பழக்கவழக்கங்களை கடைபிடித்துவரும் அதேவேளை, தென்னிந்திய சமூகப் பாரம்பரியங்களை பின்பற்றிவரும் தென்னிந்திய தொழிலாளர்களைக் கொண்ட ஓர் அந்நிய மக்கள் இனத்தை இன்று நாம் கண்டிய மாவட்டங்களில் காண்கிறோம். மதம், மொழி, சமூக பழக்கவழக்கங்கள் மற்றும் தொழில்கள் என்பவற்றில் வேறுபாடுகளைக் கொண்டிருக்கும் இவ்விரு இனத்தவர்களிடையே எந்தக் கலப்பும் இருந்ததில்லை.

நீண்ட காலங்களாக பல்வேறு திணைக்களங்களாலும் தொகுக்கப் பெற்றுவந்த புள்ளிவிபரங்கள் இந்தியத் தொழிலாளரின் நிலையற்றத் தன்மையையும் இலங்கையில் தொழில் புரிவதற்கான வாய்ப்பு வசதிகளைப் பொறுத்து நேரடி விகிதாசாரத்தில் தளம்பலடையும் அவர்களது எண்ணிக்கையையும் எடுத்துக்காட்டுகின்றன.

இந்தியர்களுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் இடையே எவ்வித பொதுத்தன்மையுமில்லை என்ற காரணத்தை முன்னிறுத்தி கிராமிய குழுக்களுக்கான ( கம்சபா) வாக்குரிமையை இந்தியத் தொழிலாளர்களுக்கு விஸ்தரிப்பதற்கு எதிராக 1933 ஆம் ஆண்டில் கண்டியிலிருந்த இந்திய அரசாங்கத்தின் முகவரிடம் வாதிட்டார். நலம் நாடும் சமூகம் எதுவுமிராததால் அரசியல் உரிமைகள் மற்றும் பிரசாவுரிமைகளை பொறுத்தவரையில் இந்தியச் சுதேச மக்களுடன் சம அந்தஸ்தில் வைக்கக் கூடிய சலுகைகளை வழங்குவதில் இலங்கையானது எப்போதும் எச்சரிக்கையில் இருந்து வந்துள்ளது.

இலங்கையிலுள்ள இந்தியர் பிரச்சினையானது, ஆரம்பந்தொட்டே இலங்கைப் பிரச்சினையாக உள்ளீர்கப்படும் அளவிற்கு இந்நாட்டில் வசிக்கும் எத்தனை இந்தியர்கள் நிரந்தர குடியேற்ற வாசிகளாக கருதப்பட முடியும் என்பதையும், நாட்டின் நலன்களைப் பாதிக்காத வகையில் சுதேசிகளுக்கு இருப்பது போன்று



முழு அளவிலான அரசியல் மற்றும் குடி உரிமைகளுக்கான உத்தரவாதம் கொடுக்கப்படமுடியுமா என்பதையும் பற்றியதாகவே இருந்தது.

இலங்கையர் மத்தியில் அதிகரித்து வந்த வேலையில்லாப் பிரச்சினை கண்டியக் குடியானவர்களின் பரிதாபகரமான நிலை. இந்தியர்களிடையே காணப்பட்ட உறுதியான இனரீதியான பிணைப்புகள் மற்றும் கடந்த ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக சுதேச மக்களுடன் கலந்து வாழ்வதற்கான எந்த அறிகுறியும் இந்த மக்களிடத்தில் காணப்படாமை.

தமது தாய்நாட்டிற்கு இவர்கள் தொடர்ச்சியாக காட்டிவரும் விசுவாசம் மற்றும் அதன் நிமித்தம் ஏற்கனவேயுள்ள சிறுபான்மை இனங்களின் எண்ணிக்கைக்கு மேலும் ஒன்றைக் கூட்ட வேண்டிய நிலை, அதன் நிமித்தம் அவர்களின் இன எண்ணிக்கையானது மிகையான அரசியல் அதிகாரங்களுக்கு அவர்களை உரித்துடைய தாக்கும் ஏது நிலை, யார் யார் எல்லாம் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்ற கேள்வி ஆகிய விடயங்களே 1939

மல்லியப்புசந்தி திலகர்

இல் இருந்து இன்றுவரை இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடையே இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தின.

இந்நாட்டில் வாழும் இந்தியர் தொடர்பிலான குறிப்பிட்ட சில கேள்விகளுக்கு தீர்வொன்றினைக் காண இலங்கையின் அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த இந்திய தேசிய காங்கிரஸ் ஆனது 1939 ல் பண்டிதர் நேருவை ஒரு விஷேட தூதுவராக அனுப்பியதோடு,

இப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றிற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பமாயின எனக் குறிப்பிடலாம். அவ்வருகையானது அதிகாரபூர்வமற்றதொரு தன்மையைக் கொண்டிருந்தது.

முதலாவது முறைசார்ந்த மாநாடுகள் இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடையே 1940 நவம்பரில் புதுடில்லியில் நடைபெற்றது. இதனைத் தொடருமுகமாக இரு அரசாங்களினதும் தூதுக்குழுவினர் 1941ல் முதன்முறையாக சந்தித்துக்

கொண்டனர்.அந்தக் கலந்துரையாடல்களில் எந்த இணக்கப்பாடுகளும் எட்டப்படமுடியாது போயிற்று. அப்போது இடம்பெற்ற இரண்டாம் உலகப் போரின் தலையிட்டால் இப்பிரச்சினையானது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

(சினிமாவின் அறிக்கைத் தொடரும்)
இதுவரையான அறிக்கையில் இருந்து நாம் பெற்றுக்கொள்ள கூடிய சில முடிவுகள்.

--------------------------------------

மலையகத் தமிழ் மக்களை அந்நியர்களாக கருதுகின்றமை. (// தென்னிந்திய தொழிலாளர்களைக் கொண்ட ஓர் அந்நிய மக்கள் இனத்தை இன்று நாம் கண்டிய மாவட்டங்களில் காண்கிறோம்// )

உள்ளூராட்சி மன்றத்தில் ( அப்போதைய கம்சபா இப்போதைய பிரதேச சபை ) மலையக மக்களுக்கு அதிகாரத்தை வழங்குவதில் தயக்கம் காட்டிவந்துள்ளமை. எனவே பிரதேச சபைச் சட்டம் பெருந்தோட்டத்துறைசார் மக்களை சேர்த்துக்கொள்ள கொள்ளாமை இன்று நேற்று உருவான சிந்தனை அல்ல. (// அரசியல் உரிமைகள் மற்றும் பிரசாவுரிமைகளை பொறுத்தவரையில் இந்தியச் சுதேச மக்களுடன் சம அந்தஸ்தில் வைக்கக் கூடிய சலுகைகளை வழங்குவதில் இலங்கையானது எப்போதும் எச்சரிக்கையில் இருந்து வந்துள்ளது. // )

இலங்கையில் இன்னுமொரு இனமாக மலையகத் தமிழர்களை ஏற்றுக்கொள்வதில் காட்டப்பட்டுவரும் தயக்கம் இன்று உருவானதல்ல. (// சிறுபான்மை இனங்களின் எண்ணிக்கைக்கு மேலும் ஒன்றைக் கூட்ட வேண்டிய நிலை, அதன் நிமித்தம் அவர்களின் இன எண்ணிக்கையானது மிகையான அரசியல் அதிகாரங்களுக்கு அவர்களை உரித்துடையதாக்கும் ஏது நிலை.// )

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் சார்ந்த இந்தியாவின் தலையீட்டின் வகிபாகம். அன்று ( பிரதமராவதற்கு முன்னர்) நேரு மாத்திரமல்ல இன்று பிரதமர் மோடி வரை அந்த வகிபாகத்தின் அவசியம் குறித்த கவனம். (// இந்நாட்டில் வாழும் இந்தியர் தொடர்பிலான குறிப்பிட்ட சில கேள்விகளுக்கு தீர்வொன்றினைக் காண இலங்கையின் அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த இந்திய தேசிய காங்கிரஸ் ஆனது 1939 ல் பண்டிதர் நேருவை ஒரு விஷேட தூதுவராக அனுப்பியது// ) ( தொடரும்)

# ஊகத்தின் அடிப்படையில் கல்லெறியாதீர்!



ஒரு பிரதேசத்தின் நிலையைத் தீர்மானிப்பதில் பல விடயங்கள் உள்ளன. அதில் ஒன்று கல்விக்கான வசதி. இந்த விடயத்தில் மட்டக்களப்பும் யாழ்ப்பாணமும் ஓரளவிலாவது கொடுத்து வைத்தவை. தமிழர்கள் அதிகமாக வாழும் இரண்டு தமிழ் மாகாணங்களிலும் மருத்துவ பீடங்கள் இருக்கின்றது என்பது நாம் பெருமைப்படவேண்டிய விடயம்.

எத்தனையோ இடப்பெயர்வுகளுக்குப் பிறகும், மிகவும் குறைந்தளவான விரிவுரையாளர்களுடன் இழுத்துமூடப்படாமல் இயங்கிய யாழ்ப்பாண மருத்துவ பீடம் ஒரு அதிசயம்.

## எமக்கு கிடைத்த வரங்களை பாதுகாப்பதும் எமது பொறுப்பு

விரிவுரையாளர்கள் குறைவென்றாலும், கல்விக்கான தரத்தில் யாழ் மருத்துவ பீடம் எந்தவிதமான குறையையும் எங்களுக்கு வைத்ததில்லை.

இன்று உலகத்தின் எந்தப்பெரிய மருத்துவ பீடங்களில் படித்தவர்களோடும் போட்டிபோடும் வல்லமையோடுதான் எம்மை யாழ் மருத்துவ பீடம் உருவாக்கிவிட்டது.

அண்மையில் யாழ் மருத்துவபீட மாணவர்கள் உலகலாவிய ரீதியில் மலேசியாவில் நடைபெற்ற ஒரு போட்டியில் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளார்கள்.

அண்மையில்தான் ஆரம்பிக்கப்பட்டாலும், மட்டக்களப்பு மருத்துவ பீடமும் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றகரமாகவே இருக்கின்றது. மட்டக்களப்பு மருத்துவ பீடத்தின் முதல் அணியில் 33 வீதமானவர்கள் பட்டமேற்படிப்புப் பரீட்சையில் சித்தி பெற்று வைத்திய நிபுணராகும் பயிற்சியில் உள்ளார்கள் என அண்மையில்தான் கேள்விப்பட்டேன்.

இது ஒரு பெரும் சாதனையாகத்தான் கொண்டாடப்படவேண்டும். ஏற்கனவே அந்த அணியில் இருந்து இருவர் பயிற்சிகளை கிட்டத்தட்ட முடித்துவிட்டார்கள். வெகு விரைவில் அவர்கள் வைத்திய நிபுணர்களாகிவிடுவார்கள்.

பல அரசியல் போட்டிகளுக்கு மத்தியில் மிகவும் சிரமப்பட்டுத்தான் மட்டக்களப்பு, மருத்துவ பீடத்தைப் பெற்றுக்கொண்டது.

இவ்வாறு நாம் பெற்றுக்கொண்ட வளத்தின் பெயரை காப்பாற்றிக்கொள்ளவது நம் கடமை.

ஒரு மருத்துவ பீடத்தின் தரப்படுத்தல் நிர்ணயிக்கப்படும்போது, அதில் இருக்கும் ஆளணி, கட்டட தொழில்நுட்ப வசதி,

சிவச்சந்திரன் சிவஞானம்

மாணவர்களின் பெறுபேறுகள் என்பவை கருத்தில் கொள்ளப்படும். அந்த வகையில் தரப்படுத்தலில் நம்முடைய இரண்டு பீடங்களும் இன்னும் பின்னுக்குத்தான் உள்ளது. அதாவது, புனித மிக்கேல் கல்லூரியையும், கொழும்பு ரோயல் கல்லூரியையும் ஒப்பிடும்போது தரப்படுத்தலில் கொழும்பு ரோயல் கல்லூரிதான் முன்னுக்கு வரும் அதற்காக புனித மிக்கேல் கல்லூரி ஒன்றும் குறைந்ததில்லைதானே?

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அண்மைக்காலமாக வைத்தியத்துறையினர் மீதான சிலருக்கிருக்கும் கசப்புணர்வு, இந்த இரு மருத்துவ பீடங்களின் மீதும் திரும்பியுள்ளது.

மருத்துவபீட மாணவர்களை அசிங்கப்படுத்த எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் எனப் பலர் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒருவர் உண்மையாக தவறு செய்யும்போது யாராக இருந்தாலும் நிச்சயமாக தண்டிக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் ஊகத்தின் அடிப்படையிலும் வதந்திகளை நம்பியும் நம்மூரில் இருக்கும் மருத்துவ பீடத்தின் மாணவர்கள் மீது அவதூறு பேசி மருத்துவ

## எமது மருத்துவ பீடங்கள் சளைத்தவையில்லை

பீடத்தினைத் தரக்குறைவாக பேசுவது நம் மீதே நாம் காறித்துப்புவதற்கு ஒப்பானது.

அதைவிட முக்கியமான விடயம், நீங்கள் மருத்துவர்கள் மீது அவதூறுகளை வீசும்போது, அதை ஓரளவுக்கு அவர்கள் எதிர்கொள்ளும் பக்குவ நிலையில் இருப்பார்கள். ஆனால் மருத்துவ மாணவர்களின் மீதான அவதூறு அவர்களின் கல்வியையும் பெறுபேறுகளையும் மோசமாகப் பாதிக்கலாம்.
அது நம்மை இன்னும் பின்னோக்கித் தள்ளலாம்.

இரண்டு மருத்துவ பீடமும் நமக்குக் கிடைத்த வரம். அதன் தரம் கெடாமல் பார்த்துக்கொள்வதில் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமையுள்ளது.

# லண்டனில் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின், தமிழ் நாவலின் சிங்கள மொழிபெயர்ப்பு வெளியீடு



இலங்கையைச் சேர்ந்த பெண் எழுத்தாளரும் லண்டனில் வாழும் திருமதி இராஜேஸ்வரியின் சாகித்திய அக்கடமி பரிசு பெற்ற "பனிபெய்யும் இரவுகள்" என்ற தமிழ் நாவல் சிங்கள எழுத்தாளரான மதுலகிரிய விஜயரத்தின அவர்களால் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, 2016ம் ஆண்டு கொழும்புப் பொது நூலகத்தில் சிங்கள் தமிழ் எழுத்தாளர்கள் அறிஞர்கள் கூடிய மண்டபத்தில் விமரிசையாகக் வெளியிடப்பட்டது.

அதன் நீட்சியாக லண்டனிலும் அந்தப் புத்தகத்தின் வெளியீடு கடந்த 10.8.18ல் இலங்கைத் தூதுவராலயத்தில் மிக விமரிசையாக நடந்தது. லண்டனுக்கான இலங்கைத்தற்காலிகத் தூதுவர் சுகீஸ்வரா குணவர்த்தனா அவர்களின் உதவியுடன் இலங்கைப் பத்திரிகையாளர் அழகப்பெருமாவின் ஒருங்கிணைப்புடன் இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

லண்டன் இலங்கைத் தூதரகத்தில் நடந்த இந்த நூல் வெளியீட்டு வைபவம், தூதராலயத்தின் சரித்திரத்தில் நடந்த முதலாவது மொழிபெயர்ப்பு
நூல் வெளியீடாகும். அதுவும் ஒரு தமிழ் எழுத்தாளரின் படைப்பு இலங்கைத் தூதராலயத்தில் வெளியிடப்பட்ட வரலாறு இதுவரை எங்கும் நடந்ததில்லை.

இலங்கைத்தற்காலிகத் தூதுவர் சுகிஸ்வரா குணவர்த்தனா தனது உரையில், திருமதி இராஜேஸ்வரியின் சிங்கள மொழி பெயர்ப்பு புத்தகத்தை இந்தத் தூதுவராயலயத்தில் ஒழுங்கு செய்வதால் இலங்கையிற் பிறந்து லண்டனில் வாழ்ந்து கொண்டும் தனது நாட்டு மக்களின் அமைதியிலும் ஒற்றுமையிலும் மிகவும் ஆழ்ந்த பற்றுள்ள இராஜேஸ்வரியை லண்டனிலுள்ள சிங்கள வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதால் பெருமையடைகிறேன் என்றார்.

கூட்டத்தை ஒழுங்கு செய்த அழகப்பெருமா அவர்கள் தனது உரையில், தன்னலம் பாராது சாதி, மத, இன, மொழி, பிராந்திய பேதமற்று ஒட்டுமொத்த மக்களின் நன்மைகளுக்காக, முக்கியமாக இலங்கை மக்களின் ஒற்றுமைக்கும், அமைதிக்கும் அவர் எவ்வளவு தூரம் தன்னை அர்ப்பணித்திருக்கிறார் என்பதை அவரின் பற்பல பணிகள் மூலம் நான் நீண்டகாலமாக அறிவேன். இலக்கியம் மட்டுமல்ல, மனித உரிமைப்போராட்டங்கள், பெண்கள் சமத்துரிமைக் கருத்துக்கள், அத்துடன் பன்முக அறிவுகளை வெளிப்படுத்தும் அவரின் படைப்புக்களை பலரும் அறிய வேண்டும் என்பதனால், அவரைக் கௌரப்படுத்த இவ்விழாவை ஒழுங்கு செய்தேன் என்று கூறினார்.

விழாவின் சிறப்பு விருந்தினரான ஹோர்ன்சி-வுட்கிறின் தொகுதிப்; பாராளுமன்றப் பிரதிநியான திருமதி கதரின் வெஸ்ட் வந்திருந்தார். அவர் தன் உரையில், இராஜேஸ்வரியின் மனித உரிமைப் பணிகளைத்தான் மெச்சுவதாகவும், இலக்கியவாதியான அவரது மறுமுகத்தை இன்று காணுவதாகவும் இராஜெஸ்வரியைப் பாராட்டும் நிகழ்வில் தன்னையழைத்தற்கு மிகவும் சந்தோசப் படுவதாகவும் தனது தொகுதியில் இராஜேஸ்வரி ஈடுபட்டு உழைக்கும் பல பொது நல பொது விடயங்களையம் பாராட்டி இராஜேஸ்வரியைப் புகழ்ந்து பேசினார்.

சிங்கள வாசகர்களும் புத்திஜீவிகளுமட்டுல்லாமல் இராஜேஸ்வரியுடன் பலகாலமாகப் பல துறைகளில் ஒன்றாகச் சமுக நல வேலைகளில் ஈடுபட்ட- இன்று வரை ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஆங்கில தமிழ், சிங்கள நண்பர்களும் மண்டபத்தை நிறைத்திருந்தார்கள்.

இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்கள் மட்டக்களப்பு கோளாவில்லை பிறப்பிடமாக கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**காணி**
**விற்பனைக்கு உண்டு**

திருப்பெருந்துறை கண்ணகி அம்மன் கோவில் பிரதான வீதியில் காணி விற்பனைக்குண்டு. 36பேச் காணியை மொத்தமாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் பின் காணும் தொலைபேசி இலக்கத்துடன்

தொடர்பு கொள்ளவும்.
0716165785



மட்டக்களப்பைப் புரிந்து கொள்வதற்கும், மட்டக்களப்பில் இன்று காணப்படும் சமூக அமைப்பைப் புரிந்து கொள்வதற்கும், மட்டக்களப்பில் இன்று காணப்படும் பல சமூகப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கும், மட்டக்களப்பின் வரலாற்றைப் புரிந்து கொள்வது அவசியமாகும் எனக் குறிப்பிட்டிருக்கிறார் த.சிவராம். "மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்" எனும் நூலிற்கு எழுதிய "வரலாற்று அறிமுகக் குறிப்புரை" யிலேயே இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். இதற்கப்பாலும் பலவழிகளில் வரலாறு முக்கியத்துவமுடையதொன்றே. வரலாறு முக்கியமானதே!

ஆயினும், மட்டக்களப்பின் வரலாற்றை



உறுதிப்படுத்தப்பட்டுள்ளது." என்கிறார் ஜ1999; பக்:75ஸ. எனவே, இலங்கைத்தீவில் இற்றைக்கு 31000 வருடங்களின் முன்னர் அதாவது கி.மு. 29000 ஆண்டளவில் மக்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பது உறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது எனலாம்.

இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாடு கி.மு 800 ஆம் ஆண்டளவில் தொடங்குகிறது என்கிறார் செ.கிருஷ்ணராசா ஜ1999; பக் : 81ஸ. இக்கால எல்லையை ஏற்றுக்கொண்டு, இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலம் கி,மு. 29000 ஆண்டிலிருந்து கி.மு. 800 ஆம் ஆண்டுவரை நிலவியது எனக்கருதலாம்.

# வரலாற்றுக்கு முற்பட்ட (கற்கால) கால மட்டக்களப்பு

அறியும், எழுதும் முயற்சிகள் மிகப்பிற்பட்ட காலத்திலேயே ஆரம்பிக்கத்தொடங்கின. கிழக்கு மாகாண அரசாங்க அதிபராகக் கடைமையாற்றிய ஆர்.ஏ.ஜி. ∴பீல்டிங் அவர்கள், "மட்டக்களப்பு மாவட்டம் அதன் வரலாற்றுப் பொழிப்பை எழுதிவைக்கக்கூடிய ஓர் அரசாங்க அதிபரையோ மாவட்ட நீதிபதியையோ பெறத்தவறிவிட்டது" என "The Monograph of Betticaloa District" எனும் கையேட்டிற்கு 1918 ஆம் ஆண்டில் எழுதிய முகவுரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு வரலாற்றை அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தினைப் புரிந்து கொண்ட சிலர், மட்டக்களப்பின் வரலாற்றை அறிவதற்கும் பதிந்துவைப்பதற்குமான முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினர். எனினும் அவர்கள் எதிர்நோக்கிய பெரும் சவால், மட்டக்களப்பு வரலாற்றை அறிந்து கொள்வதற்கான "வரலாற்று மூலாதாரங்கள்" கிடைக்காமையாகும். மட்டக்களப்பின் நவீன கால வரலாற்றைக் கூட அறிந்து கொள்வதற்கான திட்டவட்டமான வரலாற்று மூலாதாரங்கள் கிடைக்கவில்லை என்பது பெரும் சவாலானதே. மட்டக்களப்பைப் பொறுத்தவரை சோழர் காலத்துக்கு முற்பட்ட திட்டவட்டமான வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இதுவரை கிடைத்தில எனச் சிவராம் 2005 இல் எழுதியிருக்கிறார்.

மட்டக்களப்பு வரலாறு, "கட்டுக்கதைகள் - ஐதீகங்கள்" என்ற வகையில் "மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்" என ஏடுகளில் எழுதி வைக்கப்பட்டிருந்தன என்பதனை, இவ்வேடுகளின் அச்சுப்பதிப்புகளாக வெளிவந்த மட்டக்களப்பு மாண்மியம், மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் எனும் நூல்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிந்தது. இவ்வேடுகளில் மட்டக்களப்பின் பண்டைய வரலாறு கூறப்பட்டுள்ளது. ஆனால், இவை திட்டவட்டமான வரலாற்று ஆவணங்களாக கருதப்படாத நிலையே இன்றுவரை இருந்து வருகிறது.

இவ் ஏடுகளைத் தவிர்த்தால் சோழர் காலத்திற்குரியதெனக் கருதப்படும் இரண்டு திருக்கோயில் கல்வெட்டுக்கள், வீரமுனைச் கல்வெட்டு என்பவையே திட்டவட்டமான வரலாற்று ஆதாரங்களாக அறியப்பட்டனவாகும். இதனால் மட்டக்களப்பின் வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றை தெளிவாக அறிந்து கொள்ள முடியாத நிலை காணப்பட்டு வந்தது.

வரலாற்றுக்கு முற்பட்ட கால சமூக. பொருளாதார, பண்பாட்டு முறைகள் பற்றி அறிவதற்கு, தொல்லியல் சான்றுகளே முக்கியமான ஆதாரங்களாக விளங்குகின்றன; தொல்லியல் சான்றுகளே நம்பகரமான தகவல்களாகவும் அமைகின்றன, தொல்லியல் ஆய்வுமுறை அடிப்படையிலேயே வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்கள் குழுமங்கள் பற்றி விஞ்ஞானபூர்வமாகவும் நிருபிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய தொல்லியல் சான்றாக நீண்டகலாமாக அறியப்பட்டு வந்தது கதிரவெளி தொல்லியல் சான்று மட்டுமே. இலங்கை வரலாற்றை எழுதிய, மட்டக்களப்பு வரலாற்றை எழுதிய பல்வேறு அறிஞர்களும் இத்தொல்லியல் சான்று பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

மட்டக்களப்பின் வடக்கேயமைந்துள்ள கதிரவெளியில், குரங்கு படையெடுத்த வேம்பு என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள்; மட்டக்களப்பு பிரதேசத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் வாழ்ந்தார்கள், மட்டக்களப்பில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் குடியிருப்பு ஒன்று இருந்தது என்பதனை உறுதியான முறையில் நிருபித்திருக்கிறது எனக்கூறமுடியும்.

எனினும் இன்று வரைக்கும் கதிரவெளியில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் பற்றித் தெளிவான தகவல்களைப் பெறமுடியாதவர்களாகவே இருக்கின்றோம். இதனால் கதிரவெளியில் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களைப் பற்றித் தெளிவான முடிவுகள் எதனையும் பெறமுடியாத நிலையிலேயே உள்ளோம். இந்த நிலைமை, மட்டக்களப்பின் தொடர்ச்சியான வரலாற்றை அறிந்து கொள்வதிலும் தடைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

கதிரவெளி தொல்லியல்கள் பற்றி ஆராய்வதற்கு முதலில், கதிரவெளிக் குடியிருப்பிற்கு முற்பட்டதாகக் கருத வேண்டிய, கிழக்கிலங்கையில் கண்டெடுக்கப்பட்ட இரு தொல்லியல் ஆதாரங்கள் பற்றி அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. இவ்விரண்டு தொல்லியல் ஆதாரங்களும், கிழக்கிலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்தில் மக்கள் வாழ்ந்தமையை அறியத்தரும் சான்றுகளாக அமைகின்றன.

செ.கிருஷ்ணராசா அவர்களின் இலங்கை வரலாறு பாகம் -1 எனும் நூலில் இவ்விரண்டு தொல்லியல் ஆதாரங்களும் காட்டப்பட்டுள்ளன. ஒன்று, கிழக்கு மாகாணத்தில் லெனம என்னும் இடத்திலுள்ள குகைளிற் பெறப்பட்ட கற்காலத்திற்குரிய சில கல்லினாலான கைவினைப் பொருட்கள். இப்பொருட்கள், இலங்கை நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டன எனக் குறிப்பிட்டிருக்கிறார். இரண்டாவது, கிழக்கு மாகாணத்தில் சியம்பக அண்டுவ என்னுமிடத்திற்கு அண்மையிலுள்ள மண்டு கல்கேயில் கண்டுபிடிக்கப்பட்ட கற்கால மனிதனால் வரையப்பட்ட யானை ஓவியங்கள். இது, கலாநிதி தெரணியாகல அவர்களினால் பிரதி செய்யப்பட்டன (பக்: 77) எனக் குறிப்பிடுகிறார். இவ்விரண்டு தொல்லியல் சான்றுகளும் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்திற்குரியவை. லெனக குகையில் கண்டெடுக்கப்பட்டது கற்கால கைவினைப் பொருள். மண்டுகல்கேயில் கண்டெடுக்கப்பட்டது கற்கால மனிதன் வரைந்த யானை ஓவியம்.

இலங்கைத்தீவில் மக்கள் வாழத்தொடங்கிய காலம் குறித்து, வரலாற்றறிஞரிடையே முரண்பட்ட கருத்துக்களே காணப்படுகின்றன. எனினும், அக்காலம் கி.மு. 29000 ஆண்டளவு என்பதே நிருபிக்கப்பட்ட ஒன்றாக அமைகிறது. இலங்கையில் இரத்தினபுரிப் பிரதேசத்திலும் பலாங்கொடை –பண்டாரவளைப் பிரதேசத்திலும் குகைளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் வழியாக, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இரத்தினபுரிப் பண்பாட்டு மக்கள் குழுமங்கள், பலாங்கொடைப் பண்பாட்டு மக்கள் குழுமங்கள் என இரு மக்கள் குழுமங்கள் வாழ்ந்தமை அறியப்பட்டது.

செ.கிருஷ்ணராசா, "இரத்தினபுரிப் பண்பாடு பழங்கற்காலப் பண்பாடு எனவும், பலாங்கொடைப் பண்பாடு புதிய கற்காலப் பண்பாடு எனவும் கருதப்பட்டு வந்தது. எனினும் அவை இரண்டுமே கி.மு. 29000 வருடங்கட்கு முந்திய இது, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலமே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலம் அறியப்படும் காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனப்படும் என்பதனால், இக்காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பர். "வரலாற்றுக்கு முற்பட்ட காலம் கற்காலமாகவே காணப்படுகின்றது. இதன் காலம் கி.மு. 125,000 – 1000 வரையிலான காலப்பகுதியாகும்." எனக்குறிப்பிடுவார் சி.க.சிற்றம்பலம் (1994, பக்:4) அவர்கள்.

கிரான் விஜய்

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்தில் வாழ்ந்த இம்மக்களின் பண்பாடு, தென்னிந்திய வரலாற்றுக்கு முற்பட்ட கற்கால மக்களின் பண்பாட்டை ஒத்துக்காணப்படுகின்றமை முக்கியமானதொரு விடயமாக அமைந்தது. செ.கிருஷ்ணராசா(1999;பக்:56). "குறுணிக்கற்காலப் பண்பாட்டிற்குரிய மணபடையடுக்குகளைக் கொண்ட இலங்கையின் இக்காலப்பரப்பானது தென்னிந்திய 'தேரி'ப் பண்பாட்டினைச் சிறப்பாக ஒத்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது என்கிறார்." சி.க.சிற்றம்பலம் அவர்கள்(1994; பக்:4), "இக்கால ஆயுதங்களுக்கும் தமிழகத்தில் கிடைத்துள்ள கற்கால ஆயுதங்களுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமையைக் கண்ட அறிஞர் இவற்றை ஆக்கிய மக்கள் தமிழகத்தில் இருந்து




குறுணிக்கற்காலப் பண்பாட்டுக்குரியவை என்பது சிரான் தெரணியாகல என்பவர் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் ஈழத்தினை அடைந்திருக்கலாமெனக்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# கணிதம் கடினமல்ல ...

## இது உங்கள் கணிதம்

இந்த வாரம் BIDMAS பற்றி நாம் கலந்துரையாடுவோம். இது கடந்தவார கணித புதிருடன் தொடர்புடையதுமாகும். BIDMAS என்பது கணித செய்கைகளை தீர்ப்பதற்காக பின்பற்றும் ஒழுங்கு முறையாகும்.

B - Bracket (அடைப்புக்குறி)
I - Indices (சுட்டி)
D - Division (பிரித்தல்)
M - Multiflication (பெருக்கல்)
A - Addition (கூட்டல்)
S - Substraction (கழித்தல்)

இந்த விதி இல்லாமல் நீங்கள் வித்தியாசமான பதில்களைப் பெறுவீர்கள், எனவே இந்த செயல்பாட்டு வரிசையை பின்பற்றுவது ஒன்றுக்கு மேற்பட்ட செயல்பாட்டைக் கொண்டிருக்கும் கணித்தல்களை கணக்கிடும் போது முக்கியமாகும். உங்கள் எண்ணின் முன் உள்ள அறிகுறியைப் பார்க்கவும் அந்த எண் எதிர்மறை அல்லது நேர்மறையானதா என்பதை அடையாளம் காண்பது முக்கியம். BIDMAS ஐ பயன்படுத்தி கீழே உள்ள இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பார்க்கலாம்.

| 9 − 4 + 3 | 9 − 4 + 3 |
|---|---|
| கூட்டல்கள் கழித்தலுக்கு முன்னதாக வரும்<br>4 + 3 = 7<br>9 − 7 = 2<br>இது தவறான பதில். பலருக்கு 2 பதில் வந்தால் அது தவறு | கூட்டல் கழித்தலுக்கு முன்னதாக வரும். அத்துடன் 4 மறை என்பதை நினைவில் கொள்ளவும் ✓<br>−4 + 3 = −1<br>9 − 1 = 8<br>இது சரியான செய்முறை.8 என்பது சரியானவிடை |

இவ்வார கருத்து:
உங்கள் கணித சிரமங்கள் குறித்து கவலை வேண்டாம். உங்கள் மனக்கணிதம் இன்னமும் சிறப்பானது என்று நான் சொல்வேன்.

- அல்பர்ட் ஐன்ஸ்டைன்

கடந்தவார விடையும் கணிப்பீடும்

பின்வரும் சமன்பாட்டை கொண்டு x ஐ கண்டுபிடிக்கவும்

$$x=38-5\times28\div4$$

ஆகவே முதலில் பிரித்தல் முதலில் செய்யவேண்டும்.

$$x= 38 - 5 \times7$$

அடுத்து பெருக்கல் வரவேண்டும். 5 மறை என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

$$-5 \times7= -35$$

ஆகவே x=3 இப்போது விடையை 30ஆல் பெருக்கவும்


$$x= 38-35$$

ஆகவே கடந்தவார விடை D : இவை எவையும் அல்ல

$$3 \times30=90$$
$$90\div6=15$$

இந்த வார கணிதப் புதிர்

இந்த பெருக்கல் பிரமிட்டை நிரப்புக.




# கல்வியின் திசை எது?

இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளின் கல்வி குறித்த சர்வதேச விமர்சனங்கள் இங்கு கல்வி முறைமை மாணவர்களை பொருளாதார சுயமுயற்சிகளில் தூண்டாமல், ஊக்கப்படுத்தாமல் அவர்களை முற்றிலும் அரசாங்க உதவிகளில், பணிகளில் தங்கியிருக்கச் செய்கின்றது என்று கூறுகின்றன.

மறுபுறமாக, இங்கு கல்வி முறைமை நகரங்களை நோக்கி குவிந்தவையாக, கிராமங்களுக்கு தனது புறமுதுகை காட்டியதாக இருப்பதாக பல கல்வியாளர்கள் கருதுகிறார்கள்.

குறிப்பாக நகரங்களில் இருக்கும் வசதியும், கிராமங்களில் இருக்கும் வசதியீனங்களும் ஆசிரியர்களை, கல்வித்துறை ஊழியர்களை நகரங்களை நோக்கி ஈர்ப்பதாகக் கூறுகிறார் முன்னாள் கல்விப்பணிப்பாளரான திருமதி. சுபா சக்கரவர்த்தி.

நகரங்களை நோக்கிய இந்த ஈர்ப்பு, கிராமங்களில் ஆசிரியர்கள் பொதுவில், அர்ப்பணிப்பற்ற போக்கில் செயற்படும் நிலைமைக்கு தள்ளிவிடுவதாகவும், அதனால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஒரு பிணைப்பு இல்லாத நிலை உருவாகிவிடுவதாகவும் அவர் கவலைப்படுகிறார்.

அதேவேளை கிராமங்களில் காணப்படுகின்ற வறுமையும் மாணவர்களை பெரிதும் பாதிப்பதாகவும் அவர் குறிப்பிடுகிறார். வீடுகளில் உள்ள வறுமை, தந்தையை தனது பிள்ளையைக் கூட பொருளீட்டலுக்கு ஈர்க்கும் நிலைக்கு தள்ளுவதாகவும், குறிப்பாக சில இடங்களில் விளைச்சல், அறுவடைக்காலங்களில் மாணவர்களின் வரத்துக் குறைவதை இலகுவாக அவதானிக்கக் கூடியதாக இருப்பதாகவும் சுபா சக்கரவர்த்தி கூறுகிறார்.

உண்மையில் மாணவர்களை கல்வி கற்க ஈர்ப்பதாயின் அவர்களுக்கு அதற்கான புறச்சூழலை உருவாக்க வேண்டும் என்பது கல்வியாளர்கள் கருத்து. அதாவது அவரது குடும்பம் வறுமையற்றதாக, தந்தை நல்ல தொழில் வாய்ப்பைப்பெற்றவராக இருக்கும் சூழலில் குடும்பமே மாணவர்களை கல்வியை நோக்கித் தள்ளும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இதனைக் கருத்தில் கொண்டு கிராம மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் திட்டங்களில், அவர்களுக்கான தொழில்வாய்ப்புத் திட்டங்களில் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட வேண்டும் என்றும், அவை நீடித்தவையாக இருப்பதை அவை உறுதி செய்ய வேண்டும் என்றும் கல்வியாளர்கள் கருதுகிறார்கள்.

இவை குறித்த தொடர்ச்சியான கருத்தாடல்களும், விமர்சனங்களும் கல்வித்துறை சார்ந்த வளர்ச்சிக்கு பெரும்பங்கை ஆற்ற முடியும் என்றும் அதற்கு ஊடகங்கள் நல்ல பங்களிப்பை செய்ய முடியும் என்றும் சுபா சக்கரவர்த்தி வலியுறுத்தினார்.

இந்த வகையில் இலங்கையில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறைக்கு அனுசரணையாக ஒரு பக்கத்தை ஒதுக்க அரங்கம் செய்திகள் பத்திரிகை திட்டமிட்டுள்ளது. இந்தப் பக்கம் மாணவர்களுக்கான பாடப் பயிற்சிப் பக்கமாகவும், அதேவேளை கல்விதுறை குறித்த கருத்துப் பகிர்வுப் பக்கமாகவும் திகழும்.

# உடலை முப்பரிமாணத்தில் பார்க்க ஒரு கண்ணாடி



அமெரிக்காவின் தொழில்நுட்ப நகரமான சிலிக்கான் வேலியை சேர்ந்த “நேக்கட் லேப்ஸ்“ என்னும் நிறுவனம், பயனர்களின் உடலை முப்பரிமாணத்தில் பதிவு செய்யும் “உலகின் முதலாவது முப்பரிமாண ஸ்கேனரை“(கண்ணாடியை?) அறிமுகப்படுத்தியுள்ளது.

கணினி சார்ந்த தொழில்நுட்பங்கள் வளரத் தொடங்கிய 1990களுக்கு முன்பு வரை உடற்கட்டு (பிட்னெஸ்) சார்ந்த விடயங்களை தெரிந்துகொள்வதற்கு, பதிவுசெய்து பாதுகாப்பதற்கு குறிப்பிடத்தக்க வழியேதும் இல்லை. அதன் பிறகு, கைபேசி, ஸ்மார்ட் வாட்ச் போன்ற தொழில்நுட்பங்கள் வளர்ந்தன.

இந்நிலையில், உங்களது உடலை பதினைந்தே நொடிகளில் ஸ்கேன் செய்து, முப்பரிமாண வடிவில் வழங்குவதுடன், உங்களது எடை, உடலிலுள்ள கொழுப்பின் சதவீதம், கொழுப்பற்ற பகுதியின் எடை போன்ற பல விதமான தகவல்களை அதற்கென உருவாக்கப்பட்டுள்ள கைபேசி செயலியில் உடனுக்குடன் தெரிந்துகொள்ளும் வசதியை இந்த கருவி அளிக்கிறது.

மேலும், இந்த கருவியை பயன்படுத்தி ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள தரவுகளை பகுப்பாய்வு செய்து, உங்களது உடலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்.:. பின்னேற்றத்தையும் இதன் மூலம் காண முடியும்.

இதுபோன்ற கருவியின் மூலம் பெறப்படும் உடலின் மின்னணு வடிவத்தை கொண்டு எதிர்காலத்தில் மருத்துவம், பேஷன், வீடியோ கேம் போன்ற பல்வேறு விடயங்களில் புதுமையை புகுத்த முடியுமென்று அந்நிறுவனத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சூரியனுக்கு போகும் நாசாவின் விண்கலம்



சுமார் ஆறு வருடங்கள் பயணம் செய்து, சூரியனுக்குள் நுழைந்து ஆய்வு செய்யும் உலகின் முதல் விண்கலத்தை இன்னும் சில தினங்களில் நாசா விண்ணில் ஏவவுள்ளது.

பூமியை போன்று மனிதன் வாழ்வதற்கு தகுதியுள்ள மற்ற கிரகங்களை ஆய்வுச் செய்யும் பணியில் அமெரிக்காவின் நாசா, ஐரோப்பிய விண்வெளி கழகம், இந்தியாவின் இஸ்ரோ போன்ற பல்வேறு விண்வெளி ஆய்வு நிறுவனங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

ஆனால், சூரிய மண்டலத்திலுள்ள அத்தனை கோள்களும் சுற்றி வரும் சூரியனை அதனுடைய உட்சபட்ச வெப்பநிலையின் காரணமாக எவராலும் இதுவரை நெருங்க முடியவில்லை.

இந்நிலையில், சுமார் 1,377 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை நிலவும் சூரியனின் சுற்றுப்பாதையை மணிக்கு 7,00,000 கிலோமீட்டர் வேகத்தில் சுற்றி வந்து ஆய்வு செய்யும் “பார்க்கர் சோலார் ப்ரோப்“ என்னும் விண்கலத்தை வரும் 23ஆம் திகதிக்குள் விண்ணில் செலுத்துவதற்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா திட்டமிட்டுள்ளது.

இதுவரை எந்த விண்கலமும் நெருங்க முடியாத கொரோனா என்னும் சூரியனின் வெளியடுக்கை இந்த விண்கலம் சுமார் ஆறாண்டுகளில், அதாவது 2024ஆம் ஆண்டு சென்றடைந்து, பூமியை தாக்கும் சூரியக் காற்று (ளுழடயச றுiனெ) எப்படி உருவாகிறது என்பதை கண்டறிவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

சூரியனின் மனைவி வெப்பம் தாங்காமல், சூரியனில் இருந்து பிரிந்து உலகத்துக்கு ஓடி வந்த பிறகு அங்கு செல்லும் முதலாவது ஆள் இந்த விண்கலந்தான் போலும்.

--- சாய்ராம் ஜெயராமன், பிபிசி ---



# விளையாட்டு

## செப்டம்பரில்.. கோல்டன் ஈகிளின் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

மட்டக்களப்பு கோல்டன் ஈகிள் விளையாட்டு கழகத்தின் 30வது ஆண்டினை சிறப்பிக்கும் முகமாகவும் மறைந்த கழக உறுப்பினரான அமரர் புவிராஜா அவர்களின் 14வது ஆண்டை நினைவு கூரும் முகமாகவும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை 2018 செப்டெம்பர் மாதத்தில் 22, 23, 24, 29, 30 திகதிகளில் நடாத்தவுள்ளது.

அணிக்கு 9 பேர் கொண்ட 10 ஓவர்கள் லீக் போட்டிகளாக இது நடைபெறவுள்ளது. போட்டிகள் அனைத்தும் கோல்டன் ஈகிள் மைதானத்தில் நடைபெறும். அனுமதி கட்டணமாக 4000 ரூபாய் அறவிடப்படவுள்ளது. முதல் இடத்தினை பெறும் அணிக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும் அமரர் புவிராஜ் சவால் கிண்ணமும், இரண்டாமிடம் பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 20,000 ரூபாய் பணப்பரிசும், மூன்றாமிடம் பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 10,000 ரூபாய் பணப்பரிசும் 4ம் இடத்தினை பெறும் அணிக்கு வெற்றிகிண்ணமும் 10,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்படுவதுடன் காலிறுதி போட்டிகளில் இருந்து ஆட்டநாயகன் விருதும் இன்னும் பல பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

மேலதிக தகவல்களுக்கு 0772100851 அல்லது 0763536047 என்கின்ற கையடக்க தொலைபேசியுடன் தொடர்பை ஏற்படுத்தி தங்கள் அணியும் கோல்டன் ஈகிள் வெற்றிக்கிண்ணத்தை பெற வாழ்த்துகின்றோம்.

இப்போட்டிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்த ஏ தரத்திலான அணிகள் மோதிக் கொண்டிருக்கின்றன. தற்போது அரையிறுதி போட்டிகளை நெருங்கியுள்ளதால் மிக விரைவில் இறுதிப்போட்டிகள் நடைபெறும் என இக்னேசியஸ் விளையாட்டு கழகத்தின் செயலாளர் டட்லீ லீன் ஜெகாட் தெரிவித்துள்ளார்.

ஜெயா

## இக்னேசியஸ் விளையாட்டு கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



புனித இன்னாசியாரின் பெருவிழாவை முன்னிட்டு டச்சுபார் இக்னேசியஸ் விளையாட்டு கழகம் “அணிக்கு பதினொருவர்” கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளத்தின் அனுசரணையில் நடாத்தி வருகின்றது.

இப்போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகள் கழகத்தின் தலைவர் மாவின் ராகலின் தலைமையில் இடம்பெற, அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி. சரவணபவான், அருட்தந்தை அன்ரனிராஜ், அருட்தந்தை நோட்டன் ஜோன்சன், மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்பரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதல் போட்டியாக இக்னேசியஸ் அணியினருக்கும் பாடுமீன் அணியினருக்குமான போட்டி நடைபெற்றது. இரு அணிகளும் ஒவ்வொரு கோல்களை புகுத்தியதால் போட்டி சமநிலையை அடைய, பெனால்டி உதை மூலம் பாடுமீன் அணியினர் 5க்கு 4 என்ற ரீதியில் வெற்றி பெற்றனர்.

## மின்னொளி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

மட்டக்களப்பு காந்தி ஸ்டார் விளையாட்டு கழகம் 5வது தடவையாக மின்னொளியில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியை 31.08.2018 அன்று ஆரம்பித்து தொடர்ச்சியாக 10 தினங்கள் நடாத்தவுள்ளது.

இப்போட்டியானது 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதுடன், அணிக்கு 7 பேரை கொண்ட போட்டியாகும். ஒரு நாளைக்கு 12 போட்டிகள் மாத்திரமே நடைபெறுவதுடன், தினமும் மாலை 6 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகி, நள்ளிரவு 12.30 வரை நடைபெறும். முன்பதிவுகளை மேற்கொள்ளும் 56 அணிகளுக்கு மாத்திரமே அனுமதியளிக்கப்படும். சகல போட்டிகளும் காந்தி ஸ்டார் மைதானத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்டுகின்றது.

## ஏ தரத்தை மீண்டும் தக்க வைத்தது கோட்டைமுனை விளையாட்டு கழகம்.....



இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கிரிக்கெட் சங்கம் நடாத்தும் 2017ம் ஆண்டிற்கான கழகங்களை தரப்படுத்தும் கடின பந்து கிரிக்கெட் போட்டியில் கோட்டைமுனை விளையாட்டு கழகம் ஏ தரத்தை மீண்டும் தக்கவைத்துள்ளது.

26.08.2018 அன்று சிவானந்தா மைதானத்தில் நடைபெற்ற கோட்டைமுனை விளையாட்டு கழகத்திற்கும் மைக்கல்மென் விளையாட்டு கழகத்திற்கும் இடையிலான போட்டியில் கோட்டைமுனை 116 ஓட்டங்களால் வெற்றி பெற்று ஏ தரத்தை தக்கவைத்துள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கோட்டைமுனை விளையாட்டு கழகம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 319 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் லஜிகுமார 80 ஓட்டங்களையும் அணித்தலைவர் தனுசன்; அதிரடியாக துடுப்பெடுத்தாடி 36 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும் டெனிக் 65 ஓட்டங்களையும் தேனுரதன் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரசன்னா, பிரணவன், கருணா, ரொக்சன், செந்தூரன் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றி இருந்தனர்.

பாரிய தொருஇலக்கை அடைய பதிலுக்கு துடுப்பெடுத்தாட களம் நுழைந்த மைக்கல்மென் விளையாட்டு கழகம் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஹரியை இழந்தது. அவரின் இடத்தை நிரப்ப களம் புகுந்த திசாந்தனும் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்க, 6 ஓட்டங்களை பெற்று ஒரு இக்கட்டான நிலையை அடைந்தது. ஆரம்ப துடுப்பட்ட வீரராக வந்த ஜெனிஸ்டனுடன் இணைந்த கோமகன் சிறப்பானதொரு இணைப்பாட்டத்தை வழங்கி ஓட்ட வேகத்தை அதிகரித்தனர். அணி 100 ஓட்டங்களை பெற்ற போது கோமகன் 41 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அதுவரை நிதானமாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ஜெனிஸ்டன் 60 ஓட்டங்களை பெற்று தனது விக்கெட்டையும் பறி கொடுத்தார். புதிதாக களம் புகுந்த புஸ்பாகரன் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 32 பந்துவீச்சில் 49

தொடர்ச்சி... (பக்கம் -23 )

## வடகிழக்கு பிறீமியர் லீக் உதைபந்து : NEPL சம்பியனானது ரில்க்கோ




26.08.2018 அன்று துரையப்பா மைதானத்தில் இடம்பெற்ற NEPL தொடரின் இறுதியாட்டத்தில் கிளியூர் கிங்ஸ் காற்பந்தாட்ட கழகமும் ரில்க்கோ காற்பந்தாட்ட கழகமும் மோதின. ஆட்ட நேரமுடிவில் ரில்க்கோ அணி 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று முதலாவது பருவகால NEPLசம்பியனானது.

ரில்கோ சார்பில் தனேஸ் இரு கோல்களை பெற்றுக்கொடுத்தார்.

சம்பியன் பட்டம் பெற்ற ரில்கோ காற்பந்தாட்டக் கழகத்திற்கு 50 இலட்சம் பணப்பரிசும், 2ஆம் இடத்தைப் பெற்ற கிளியூர் கிங்ஸ் காற்பந்தாட்ட கழகத்திற்கு 30 இலட்சம் பணப்பரிசும், 3ஆம் இடத்தைப் பெற்ற வல்வை காற்பந்தாட்ட கழகத்திற்கு 15 இலட்சம் பணப்பரிசும், 4ஆம் இடத்தை பெற்ற மன்னார் காற்பந்தாட்ட கழகத்திற்கு 5 இலட்சம் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

## லக்கி விளையாட்டு கழகம் 2 ஓட்டத்தால் திரில் வெற்றி



இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கிரிக்கெட் சங்கம் நடாத்திய 2017ம் ஆண்டிற்கான கழகங்களை தரப்படுத்தும், கடின பந்து கிரிக்கெட் போட்டியில் லக்கி விளையாட்டு கழகம் 2 ஓட்டத்தால் திரில் வெற்றியை சுவைத்துக் கொண்டது.

25.08.2018 அன்று சிவானந்தா மைதானத்தில் நடைபெற்ற லக்கி விளையாட்டு கழகத்திற்கும் சென்றலைட்

தொடர்ச்சி... (பக்கம் -21 )

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddmunai Sports Club- Baticaloa

## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# உலகம் சுற்றிவந்து ஏழையாய் மறைந்த பித்தன் கே.எம். ஷா

தமிழகத்தில் புதுமைப்பித்தன் சிறுகதை இலக்கியத்திற்கு பெரும் தொண்டாற்றியவர். தனது விருத்தாசலம் என்ற இயற்பெயரை புதுமைப்பித்தன் என மாற்றிக்கொண்டு சாகா வரம்பெற்ற பல கதைகளைப் படைத்தவர்.

அவரது எழுத்துக்கள் ஈழத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவரது கதைகளைப் படித்த ஈழத்து வாசகர் ஒருவர், புதுமைப்பித்தனின் பாதிப்பில் தனது இயற்பெயரை இலக்கிய உலகிற்காக பித்தன் என மாற்றிக்கொண்டு எழுத்துலகில் பிரவேசித்தார்.


பித்தன் கே.ஷா

அவரது இயற்பெயர்: முகம்மது மீரா சாய்பு. இவர்தான் ஈழத்து இலக்கிய உலகம் நன்கறிந்த பித்தன். கே. எம்.ஷா. மீன்பாடும் தேனாட்டின் கோட்டைமுனையில் 1921 ஆம் ஆண்டு பிறந்து 1994 ஆம் ஆண்டு மறைந்தார்.

பித்தன் ஷா குறிப்பிடத்தகுந்த பல கதைகளை எழுதியிருந்தாலும் எண்ணிக்கையில் குறைவாக எழுதியவர் என அறிந்திருந்தேன். இவரது மறைவுச்செய்தியை எனக்கு கடிதம் மூலம் தெரிவித்தவர் பேராசிரியர் செ. யோகராசா. அதில் அவர் குறிப்பிட்டிருந்த தகவல் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.


பித்தனை நன்கு தெரிந்திருந்த இரண்டு புகழ்பெற்ற அரசியல்வாதிகள் (அமைச்சர்களாகவும் இருந்தவர்கள்) பித்தனின் கதைகளை தொகுத்து வெளியிட்டுத்தருவதாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வாக்குறுதி வழங்கியிருந்தார்களாம். ஆனால், அரசியல்வாதிகளுக்கே உரியகுணம் கொடுத்த உறுதிமொழிகளை மறப்பது அல்லது கைவிடுவது.


பித்தன் கே.ஷா வின் கதைகள் தொகுக்கப்பட்டு மல்லிகை பந்தல் வெளியீடாக வந்தவேளையில் பித்தன் உயிரோடு இல்லை. மல்லிகை ஜீவா இல்லையென்றால் அந்தத்தொகுப்பும் வெளிவந்திருக்காது.

அந்த இரண்டு அரசியல்வாதிகளையும் மல்லிகை ஜீவாவுக்கும் நன்கு தெரியும். அரசியல்வாதிகளின் வாக்குறுதி நிறைவேறும் என்று ஜீவாவும் பித்தனும் காத்திருந்திருக்கவேண்டும். காத்திருந்து காத்திருந்து காலமெல்லாம் காத்திருந்து, இறுதியில் மல்லிகைப்பந்தல் அந்தத்தொகுப்பினை வெளியிட்டது.

எனினும் தனது இலக்கியக்குழந்தையான அந்தப்பிரசவத்தை காணாமலேயே பித்தன் ஷா கண்களை நிரந்தரமாக மூடிக்கொண்டார்.

தினகரன் வாரமஞ்சரியில் 1948 இல் தனது முதல் சிறுகதையான கலைஞனின் தாகம் எழுதி இலக்கிய உலகில் பிரவேசித்தவர்,




மறைந்த 1994 வரையில் குறைந்த எண்ணிக்கை கொண்ட கதைகளையே எழுதியிருப்பவர். எனினும் அவை நிறைவான கதைகள் என்பதுதான் இலக்கியத்திறனாய்வாளர்களின் கருத்து.

மட்டக்களப்பில் நீர்ப்பாசன திணைக்களத்தில் எழுதுவினைஞராக பணியாற்றியவர். இந்தியாவுக்குச் சென்று இராணுவத்திலும் இணைந்திருக்கிறார். அதனால், எகிப்து, பாலஸ்தீனம், ஈராக், ஈரான், பாக்கிஸ்தான் முதலான நாடுகளுக்கும் சென்று உலக அனுபவம் பெற்றவர்.

இவரைப்போன்று தமிழகத்திலும் ஒரு எழுத்தாளர் முன்னர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய இராணுவத்தில் இணைந்திருந்தார். அவர்தான் தமிழ்நாடு தமிழ்ப்புத்தகாலயத்தின் அதிபர் (அமரர்) கண. முத்தையா. அவர்தான் புகழ்பெற்ற இராகுல சங்கிருத்தியனின் வால்கா முதல் கங்கை வரையில் என்ற பிரசித்தி பெற்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தவர்.

ஆயுதம் ஏந்தியவர்கள் எழுத்தாயுதமும் ஏந்தியிருக்கின்றனர் என்பதற்கு தமிழகத்தில் கண. முத்தையாவும் இலங்கையில் பித்தன். கே. ஷாவும் சான்று!

வறுமையும் இயற்கை அனர்த்தமும், இனக்கலவரமும் அவரை அகதியாகவும் விரட்டியிருப்பதாக அறியமுடிகிறது.

மூத்த படைப்பாளி என்ற ரீதியில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

பொன்னாடை, பூமாலை புகழாரங்களை விட, அவரது நூலை அவர் வாழ்ந்த காலத்திலேயே வெளியிட்டு கௌரவித்திருந்தால் அந்த ஆன்மா அந்த மனநிறைவுடன் கண்களை மூடியிருக்கும்!

இது இவ்விதமிருக்க எமக்கு அண்மையில் கிடைத்துள்ள அமரர் பித்தன் பற்றிய செய்தியையும் இங்கு பதிவுசெய்கின்றோம்.

பித்தன் கே.எம். ஷா அவர்கள் ஈழத்தின் மறுமலர்ச்சி இலக்கிய காலகட்டத்தில் தோன்றிய ஒரு காத்திரமான படைப்பாளியாவார். மனித நேயத்தை அடிப்படை உணர்வாக கொண்ட அவரது சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுதியொன்று சிங்கள மொழியில் வெளிவரவுள்ளது.

இத் தொகுதியில் பாதிக் குழந்தை, தாம்பத்தியம், அமைதி மற்றும் இருட்டறை போன்ற அவரது முக்கியமான கதைகள் உள்ளடக்கப்படவுள்ளன.

இத்தொகுதியை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 4 ஆம் வருடத்தில் மும்மொழி கற்கை நெறியினை தொடரும் மாணவன் மபாஸ் சனூன் மொழிபெயர்க்கிறார்.

பித்தன் மறைந்த பின்னர் மட்டக்களப்பு வாசகர் வட்டம் பித்தன் நினைவு மலரை வெளியிட்டுள்ளது. இதில் பித்தன் என்றொரு சத்தியம் என்ற தலைப்பில் எஸ்.எல்.எம் ஹனிபா கட்டுரை எழுதியிருக்கிறார்.

தினகரனில் எம்.எச்.எம். ஷம்ஸ் மறைந்த காவியம் பித்தனின் அஸ்தமன நாட்கள் என்ற கட்டுரையை எழுதியிருக்கிறார்.

முஸ்லிம் கதை மலர் என்ற தொகுப்பிலும் பித்தனின் சிறுகதை இடம்பெற்றுள்ளது.

அவர் வாழ்ந்த காலத்தில் இந்துசமய கலாசார பிரதேச அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் நடந்த பிரதேச சாகித்தியவிழாவில் கிழக்கிலங்கையின்

மபாஸ் சனூன் ஏற்கனவே முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் ‘தேஷப்பிரேமயே கெடபத’ எனும் சிங்கள நூலை ‘ஒரு தேசபற்றாளனின் முழக்கம்’ எனும் தலைப்பில் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார்.

கே.எம். ஷா அவர்களின் சிறுகதைத் தொகுதி குறித்த இந்த வெளியீடு நாட்டின் நல்லிணக்கம், இன ஒற்றுமை என்பவற்றை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முருகபூபதி – அவுஸ்திரேலியா

இச்செய்திகளைப் பார்க்காமலேயே பித்தன் மறைந்துவிட்டார். அவரது மரணத்தின் பின்னர்தான் அவரது மகிமை வெளியே தெரியவருகிறது.

(தொடரும்)

---

தொடர்ச்சி...

## ‘நாம் வாழ்ந்த காணியையே கேட்கிறோம்’

அடித்துக்கூறுகின்றனர் பொத்துவில் கனகர்கிராம மக்கள்.

கடந்த 16 தினங்களாக காணி மீட்புப்போராட்டத்திலீடுபட்டுவரும் பொத்துவில் கனகர் கிராம மக்களிடம் அம்பாறை மாவட்ட வனத்துறை உயரதிகாரி முனசிங்க 30 வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்த 30 குடும்பங்களுக்கும் 40 பேர்ச்சஸ் வீதம் அதாவது கால் ஏக்கர் வீதம் விடுவித்து ஒப்படைக்கவிருப்பதாகக் கூறினார். அவற்றை இன்றே அளந்து தரத் தயாராகவிருப்பதாகவும் கூறினார்.

அதற்கு கனகர்கிராம மீள்குடியேற்ற சங்கத்தலைவி புஞ்சிமாத்தயா றங்கத்தனா இவ்வாறு கூறினார்.

‘முதலில் அதிகாரிகள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். நாம் ஒவ்வொருவரும் இரண்டரை ஏக்கர் நிலத்துடன் வாழந்துவந்தவர்கள். 2ஏக்கர் சேனைப்பயிர்ச்செய்கைக்கும் அரை ஏக்கர் வீட்டிற்குமாக தந்துதான் எம்மை முன்னாள் எம்.பி. எம்.சி.கனகரெத்தினம் ஐயா 30 நிரந்தர வீடுகளில் குடியேற்றினார்.

அப்படி வாழ்ந்துவந்த எங்களுக்கு கால் ஏக்கர் நிலமா? ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அப்படிப்பார்த்தால் 79 ஏக்கர் காணி இந்த 30 குடும்பங்களுக்குமாக விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் நாம் கேட்பது இந்த 79 ஏக்கரையல்ல. 1960களிலிருந்து இங்கு 278 குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. அவர்களில் எம்.சி. ஐயா 30 குடும்பங்களுக்கு மாத்திரமே முதற்கட்டமாக வீடுகளை அமைத்துத்தந்தார். மற்றவர்களுக்கு அமைப்பதற்கிடையில் அவர் காலமாகிவிட்டார்.

எனவே எமக்கு காணி தருவதாயின் 278 குடும்பங்களுக்கும் காணி தரவேண்டும். இல்லையென்றால் எவருக்கும் அந்தக் காணிதேவையில்லை. நீங்கள் அளக்கவும் வேண்டாம் தரவும் வேண்டாம்’ என்றார்.

அவர்கள் இரவு பகலாக அந்த காட்டுப்பகுதியின் வீதியோரத்தில் முகாமிட்டு தங்கியிருந்து போராட்டத்தை நடாத்தி வருகின்றனர். அந்த முகாம் தற்போது இரண்டாகியுள்ளது. அருகில் தண்ணீர் வவுசரொன்று நிறுத்தப்பட்டுள்ளது. அங்கேயே அடுப்புமூட்டி சமையல் செய்கின்றனர். இடையிடையே தேநீர் போடுகின்றனர்.

ஆர்ப்பாட்டத்திலீடுபட்டுவரும் மக்கள் கூறுகையில:;

மாவைபோன்ற தமிழ்த்தலைமைகள் வடக்கில் காணியை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றனரே தவிர பொத்துவில் காணியை விடுவிக்குமாறு கூறாதது கவலையளிக்கிறது.என்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுள் இதயவலி காரணமாக இ.நடேசபிள்ளை க.யோகேஸ்வரி க.சுபத்ரா ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 27

அழகிய மனைவி. பலாச்சுளை போல அழகிய குழந்தைகள் இருவர். படித்த ஓய்வூதியம் பெறும் மாமன்மாமி எண்டு எல்லாரும் கூட்டுத்தான்; அங்க மகிழ்ச்சி நிறைஞ்சிருக்குதா எண்டால் இல்லை எண்டுதான் சொல்லவேணும். காரணம் அந்த பாட்டுக்காறன்ர மனசில தாய்தேப்பன்ர எண்ணந்தான்.

கலைச்சுக் கொண்டு நிக்கும், அக்காதான் சமைக்ககொள்ள எங்கட ஊர் எவ்வளவு வடிவு எண்டு எதையாவது சொல்லி சொல்லி கவலப்படுவான் பாவி. பாக்க கவலையா இருக்கும். என்னவோ சொல்லுவினமே. எல்லாரையுஞ் சிரிக்கவைச்ச சிரிப்பு நடிகன் சந்திரபாபு தற்கொலை செய்து செத்துப் போனான் எண்டு. அப்பிடித்தானே சிலுக்கு சுமிதா சோபா எண்டு மற்றவைய சந்தோசமா வைக்கிற நடிகையளும் தற்கொலை செய்தவை. அது போலதான் இவனும் மேடையில ஏறினா, அவன் வாயில எழுத்துப்பிரதி இல்லாமலே கலகலண்டு பேசி எல்லாரையும் சிரிக்கவும் ரசிக்கவும் வைப்பான். ஆனா அவன்ர மனசில நிறைய கவலதான் பிள்ளையளக் கொஞ்சிற போதும் அதுகள் போனபிறகு சொல்லுவான் “இதுகள் என்ர அம்மாவுக்க கிடைக்காம போச்சே“ எண்டு.



“எங்கட ஊருமாதிரி இஞ்சயிருக்கா இல்லையே அதவிட நான் இயக்கத்தில் விரும்பித்தான் சேந்தனான் எண்டா அதுவுமில்ல,“ எண்டு அடிக்கடி சொல்லி கவலப்படுவான்.

எங்கட சேனையில இப்ப சோளன் கொலைக்கணக்கில விளஞ்சிருக்கும் போற வாறவனெல்லாம் புடுங்கி சுட்டுத்திம்பான். அம்மா எப்பவும் கிளி

“அட அப்ப ஏன்ராப்பா வந்தாய் எண்டு கேட்டா,

“ ஆரக்கா வந்தது அம்மாதான் கையில பிடிச்சபிடி விடாம இழுத்துக் கொண்டாந்து இயக்கத்திட்ட குடுத்தா. அவங்க வன்னிக்கு புறப்பட்டுட்டாங்க அப்ப கொண்டுவந்து. “ஐயா உங்களுக்கு புண்ணியமாப் போகும் இவனையும் ஓங்களோட கொண்டு போயிடுங்க எங்கசரி உயிரோட இருந்தா பெறவும் பாக்கலாம். இஞ்ச நிண்டா கொண்டுபோயிருவானுகள்.“ எண்டு கால்லவிழாத குறையா குழாறி குடுத்திட்டா என்ன செய்யிற“

மட்டக்களப்பாற்ற நெலமை அப்பிடி. அங்கால ஆமி. இஞ்சால மற்ற இயக்கங்கள் ஆள்பிடியில நிக்கிது. அவா எப்பிடித்தான் காப்பாத்த ஏலும், மனுசி பிள்ளையளக் கொணந்து நெருப்பில தள்ளிப்போட்டுது.

என்ன இயக்கமெண்டா சனம் வெளியால காணுற பொடியள வச்சுத்தானே மதிக்கிறது. மடிப்புக்கலையாத உடுப்பில்லாட்டியும் துவக்க கொழுவிக் கொண்டு இடுப்பில ஒரு குண்டோடயும் வாற பொடியள கண்டாலே சனம் மரியாதை குடுக்கும் நல்லது பொல்லாதது எல்லாத்துக்கும் அவங்கதான் முன்னுக்கு. ஊருக்க நடக்கிற கட்டப் பஞ்சாயத்துகளுக்கு நாட்டாமை பண்ணுவினம் நீதியும் அவங்கதான் தண்டனையும் அவைதான். ஆனா அதுக்கு

தமிழ்க்கவி

முதல் அவங்க எப்பிடிப்பட்ட நெருப்புக்கால வெளியால வாறாங்கள் எண்டத ஆருக்கும் தெரியாது. ஆனா “உலகத்திலயே ஆமிக்கோ இல்ல எந்த எதிரிக்குமோ பயப்பிடாத சீவன்கள் இவைதான், இவையோட போனா என்ர பிள்ளை உயிர் தப்பும்“ எண்டு நினைச்சே கனபேர் பிள்ளயள கொணந்து எண்ணைச்சட்டியால தூக்கி நெருப்பில போட்டமாதிரி இயக்கத்திட்ட குடுத்ததுதான். இவனும் அதத்தான் அடிக்கடி சொல்லிப்புலம்புவான். காரணமும் இருந்ததுதான் மட்டக்களப்பு போராளியள் வீரம், விவேகம், பயிற்சி, தந்திரம், துணிவு எல்லாம் இருந்தாலும் நடந்த அதிகமான சண்டையளின்ர வெற்றியில காரணமா நிண்டாலும், யாழ்ப்பாணத்தில ரெண்டாந்தரப்பிரசையள்தான். அத வெளியால விடாம அங்ஙின விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில கொஞ்சப்பேருக்கு பதில் கடமையள் குடுத்திருந்தவை அதுகும் வடக்கும் கிழக்குமா இயக்கம் பிரிஞ்ச பிறகு இன்னும் மோசமாப்போச்சு. ஒரு வானொலி அறிவிப்பாளரா இருந்தவன இப்ப சமையல்கூடத்துக்கு சாமான் வாங்கிப் போடுற பொறுப்பிலபோட்டினம். அதோட கூட்டங்கொமட்டியெண்டா அங்க தேவையான சிற்றுண்டி தேநீர் வழங்கிற சிப்பந்தியாவும் இவன் வேல செய்தான். எப்பவாகிலும் இந்த மட்டக்களப்பான் தமிழீழ இசைக்குழுவின்ர இசைக்குழு மேடையேறினா அறிவிப்பாளரா போவான். அவ்வளவுதான். ஒருகட்டத்தில இசைக்குழுக்காறர் ஊருக்கு திரும்பி போகேக்க இவன் குடும்பத்தை விட்டு போகமாட்டாம நிண்டிட்டான்.

சண்டை இறுகி முள்ளிவாய்க்காலுக்க வந்தபிறகு புலியள் எல்லாரையும் பதியச்சொல்லி இயக்கம் அறிவிச்ச நேரம், நான் அந்த பதிவு எங்க நடக்குதெண்டு தேடிப்போகேக்க, இவனக்கண்டன். “தம்பி ஏதோ பதியவாம் பொனநீயே“ எண்டு கேக்க, அந்த வெடிச்சிதறலுக்கயும் நிண்டு சிரிச்சுப்போட்டு “எங்கக்கா எல்லாம் எமாத்து, சரணடையிற நேரமா இது எல்லாரு போகவேண்டியதுதான் அப்பிடி ஒரு பதிவுமில்ல சும்மா சுத்துமாத்து“ எண்டான். ஆனா சண்டை முடிஞ்சபிறகு என்னவாயிருப்பான் எண்ட கவலை இன்னும் என்னை அரிக்குது.

---

கடுகுக் கதை

## எழசனுக்கு ஏன் பொங்கவில்லை?



பேராசிரியர் நல்லசிவம் நன்றியைப் பற்றி உரையாற்றிக் கொண்டிருந்தார். உசாத்துணைக்கு திருவள்ளுவரின் திருக்குறள் அடிகளையும் எடுத்துக்காட்டி அலட்டிக்கொள்ளாமல் வெழுத்துக்கட்டினார்.

““எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு“ என்பது பொய்யாமொழி. அதற்கொப்ப நாமும் வாழப்பழகிக்கொள்ள வேண்டும். அப்படி நன்றியைத் தெரிவிக்கும் விழாக்களில் முக்கியமானதுதான் நாம் கொண்டாடுகின்ற தைத்திருவிழா. அத்திருவிழாவின் யாதார்த்தத்தைப் பாருங்கள்.

நமக்கு உணவு தருகின்ற உழவருக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, உழவர் திருநாள் என்கின்றோம். உழவர்களோ தங்களின் பயிர் செழிக்க மழைக்குக் காரணமான சூரியனுக்கு நன்றி தெரிவிக்க சூரியப் பொங்கல் என்கின்றார்கள். பது நமக்கு பாலைத் தருகின்றது, காளை நிலத்தை உழுகிறது என்பதினால் மாட்டுப்பொங்கல் என்று மாடுகளுக்கு பொங்கி நன்றியைத் தெரிவிக்கின்றோம்’ என்று அடுக்கிக் கொண்டே போனார் பேராசிரியர் நல்லசிவம்.

சேர் என்று கையை உயர்த்தினான் மாணவர்களில் “குண்டக்க மண்டக்க“ என கேள்வி கேட்கும் குணசீலன்.

‘என்ன? குணசீலா கேள்’ என்றார் சேர்.

சேர் சூரியன் பகலில் வெளிச்சத்தை தருவதால் நன்றியோடு சூரிய நமஸ்க்காரம் பன்னுகிறோம். வருட முதல் மாதத்தில் பொங்கலும் வைத்து நன்றியை தெரிவிக்கிறோம். ஆனால் இந்த உலகின் இரவையே பகலாக்கிய மின்சாரத்தையும், வெளிச்சத்தையும் தந்த ”தோமஸ் அல்வா எடிசனை” நாம் நினைக்கிறோமா? இல்லையே! அதே நேரம் முட்டாள்களுக்கு ஒரு தினத்தை ஒதுக்கி ஏப்ரல் பூள் எனக் கொண்டாடுகிறோம். ஏன் இவரை நினைத்து நாம் ஒரு விழாவும் கொண்டாடுவதில்லை, அவரின் பிறந்த நாளையோ அல்லது இறந்தநாளையோ நினைக்காத காரணம் என்ன? இதிலிருந்து நாம் நன்றியில்லாதவர்கள் என்றல்லவா ஆகிவிடும். என்றானே பார்க்கலாம்.

பேராசிரியர் நல்லசிவம் மூக்கில் விரலை வைத்தார்.

கலாபூசணம் இரா.தவராஜா

*’நாவினால் கூறும் நன்றி பெரிதல்ல*

*பாரினை பகலாக்கியவரை நினைத்து*

*காரியமாற்றினால் நன்றிக்குரிய குறளுக்கு*

*நாம் செய்யும் கைமாறாகும்’*

தொடர்ச்சி...

## லக்கி விளையாட்டு கழகம் 2 ஓட்டத்தால் திரில் வெற்றி

விளையாட்டு கழகத்திற்கும் இடையிலான போட்டியில், லக்கி விளையாட்டு கழகம் 02 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்கி விளையாட்டு கழகம் 35 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் நிப்ராஸ் 58 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் தனுசாந் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றி இருந்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களம் நுழைந்த சென்றலைட் விளையாட்டு கழகம் 50 ஓவரில் 9 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 169 ஓட்டங்கள் மாத்திரம் பெற்று 2 ஓட்டங்களால் தோல்வியை தழுவிக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் டில்சான் 36 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க பந்து வீச்சில் மேனகாந் மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதன் அடிப்படையில் லக்கி விளையாட்டு கழகம் 2 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

# கட்டிளமைப் பருவ உளநலம்

## அடிமைப்படுத்தும் மதுபாவனை

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை



கட்டிளமைப்பருவம் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. இப்பருவ வயதிலேயே பொதுவாக குடிக்க, புகைக்க, போதைபொருள் பாவிக்க ஆரம்பிக்கின்றனர். பொதுவாக க.பொ. சாதாரண தரத்திற்கு பின்னர் இளைஞர்கள் ஒன்றாக கூடும் விளையாட்டு போட்டிகள், களியாட்ட நிகழ்வுகள், திருமண வீடுகள், மரணச்சடங்குகள் என்பவற்றில் பெரும்பாலும் பெரியவர்களின் உதவியுடன் முதல் அனுபவம் ஆரம்பமாகின்றது. கல்லூரி, பல்கலைக்கழகம், என்பன இளைஞர்கள் தொடர்ந்தும் மது, புகை பாவிப்பதற்கான சூழ்நிலைகளை கொடுக்கின்றன. குறிப்பாக பெற்றோர், உறவினரின் நேரடி கண்காணிப்பில் இருந்து விடுபட்டு, விடுதி, தனியான இருப்பிடங்களில் இருக்கும் போது தொடர்ந்து மது அருந்துவதற்கான சூழ்நிலை ஏற்படுகின்றது. பாடசாலைக் கல்வியை க.பொ.த சாதாரண தரத்திலோ அதற்கு முன்னாகவோ அல்லது உயர் தரத்தில் இடை நடுவிலோ கை விட்டுள்ள இளைஞர்கள் அதன் பின் ஏதேனும் ஒரு நாள் தொழிலை செய்யும் போது அவர்களிற்கு அவர்களின் வயதை விட அதிகமானவர்களுடன் நட்பு ஏற்படுகின்றது. இங்கு அவர்கள் தங்கிநின்று செய்கின்ற கட்டிட தொழில், மீன்பிடிப்பு, வீதி வேலைகளை செய்ய நிர்பந்திக்கும் போது அவர்களுடன் வேலை செய்கின்ற ஏனைய மூத்தோரிடம் உள்ள தீய பழக்கங்களான மது, புகை, போதைப்பொருள், வெற்றிலை என்பவற்றை பழக வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகின்றது. இங்கு இளையவர்களிற்கு சரியான வழிகாட்டிகள் கிடைப்பதில்லை. அவர்களது "Role Model" பிழைக்கின்றது.

மதுபாவனை ஏன் அடிமைப்படுத்துகின்றது?

குடிக்க தொடங்குகின்ற அனைவரும், மதுவிற்கு அடிமைப்பட்டவர்களாகவோ, நாளாந்தம் குடிக்கிறார்கள் என்றோ சொல்லுவதற்கில்லை. உதாரணமாக ஒரு இளைஞர் அணியில் நூறு பேர் மதுபாவிக்க ஆரம்பித்தால் அதில் பதினைந்து தொடக்கம் இருபது பேர் அளவிலேயே அடிமைப்பட்ட நிலைக்கு உட்படுகின்றனர். ஐம்பது வரையில் பெரும்பாலும் முதல் அனுபவத்துடன் விட்டுவிடுகின்றனர். ஏனைய முப்பது பேர் அவ்வவ்போது ஒன்று கூடல், களியாட்டங்கள், கோவில் பெருநாட்கள், விசேட தினங்களில் குழுவாக குறிப்பிட்ட அளவு மது அருந்துகின்றனர். மது இல்லாத போதும் அவர்களால் சந்தோசமாக இருக்க முடியும்.

சிலர் ஏன் அடிமைப்படுகின்றார் எனில் அவற்றை தீர்மானிப்பதில் பரம்பரை காரணிகள் (தந்தை குடிபழக்கம் உடையவர் எனில் பிள்ளைகளில் குடிகாரர் ஏற்பட வாய்ப்புள்ளது), நெருக்கீடுகள், பயனுடைய பொழுதுபோக்குகள் இன்மை, சேரும் நண்பர்கள், உடல், உள நலப்பிரச்சினைகள், தீர்க்கப்படாத பிரச்சினைகளால் ஏற்பட்ட விரக்தி, கூச்ச சுபாவம், குடி குறித்த போலி விளம்பரங்களின் கவர்ச்சி இது போன்றவை ஒருவரை குடிநோயாளியாக்க அல்லது தொடர்ந்தும் குடிக்க வழியேற்படுத்துகின்றது. அத்துடன் அவரிற்கு குடும்ப, சமூக, ஆன்மீக ஆதரவும் இல்லாமல் தனித்துவிடப்படும் போது இன்னும் அதிகமாக குடிக்க நேரிடுகின்றது. தொடர்ந்து மதுபாவிப்பவரில் குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் ஒன்று அல்லது இரண்டுபேரே புனர்வாழ்விற்கு உட்பட்டு அப்பழக்கத்தில் இருந்து முற்றாக விடுபடுகின்றனர். ஏனையோரை எவ்வாறு புனர்வாழ்விற்கு உட்படுத்துவது? நீங்களும், நாங்களும் செய்ய வேண்டியது யாது? விடைக்கான வேண்டிய சமூக பொறுப்பு எம்மிடம் உள்ளது.

மது பாவிக்க ஆரம்பிக்கின்ற யாவரும் பெரும்பாலும் "பியர்" டின் உடனேயே ஆரம்பிப்பர். முதல் அனுபவத்தில் அவர்களிற்குள் ஏற்பட்ட கிளர்ச்சிநிலை, அதிக சந்தோசம், உற்சாகம் எதையும் செய்யலாம் என்ற வீரமனநிலை, வானத்தில் அந்தரத்தில் பறப்பது போன்ற நிலை எல்லாம் அவர் தொடர்ந்து பாவிக்கும் ஒரு "டின் பியரிற்கு" ஏற்படாது. எனவே அவரிற்கு இப்போது அவ்வாறான சந்தோசத்தை ஏற்படுத்த இரண்டு "பியர் டின்கள்" தேவைப்படும். படிப்படியாக பியர் (மென்), பியர் (வன்), கால்போத்தல் சாராயம், அரை போத்தல், சாராயம் ஒரு போத்தல் வரை அவரது தேவை அதிகரிக்கும். ஒரு கட்டத்தில் நித்திரையால் கண்விழித்து, பாயில் இருந்து எழும்புவதற்கு முன் குடித்து விட்டே எழும்ப வேண்டிய நிலையை இது ஏற்படுத்தும். இந்த நிலையில் அவர் குடிக்கு முற்றாக அடிமைப்பட்டவராக அல்லது அது இல்லாமல் அவரால் வாழ முடியாத நிலை ஏற்படும். அவரது சிந்தனையிலும் உடல் இயக்கத்திலும் மதுவின் தேவையே நிறைந்திருக்கும்.



மதுபாவிக்கும் போது ஏற்படும் மனநிலைகள்

ஒரு மனிதனின் சமூக செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் மையங்கள் முன் மூளைப் பகுதியில் காணப்படுகின்றன. இப்பகுதியே எதை, எப்போது, எவ்வாறு, எங்கு செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கின்றது. நாங்கள் மற்றவர்களிற்கு முன் நடந்து கொள்ளும் விதம், செய்யக்கூடியது, செய்யக்கூடாதது போன்றவற்றை எமக்கு கட்டளையிட அதன்படி நாங்கள் எங்களது கலாச்சார, பண்பாட்டு, விழுமியங்கள், அந்தஸ்து என்பவற்றைக் பாதுகாக்கும் விதமாக நடந்து கொள்கிறோம். மதுவை உட்கொள்ளும் ஒருவரிற்கு இவ்வாறான சமூக நடத்தைகளில் பின்னூட்டல் ஏற்படுவதால், அதன்பின் அவர்களால் மற்றவர்கள், தங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்ற கவலை எல்லாம் போக அதுவரை கதைக்காதவர் முதலாவது "கிளாசுடன்" கதைக்க ஆரம்பிப்பார். இரண்டாவது கிளாசுடன், பாடதவர் பாடுவார், மூன்றாவது கிளாசுடன் ஆடாதவர் ஆடுவார், நான்காவது கிளாசிற்கு பழைய காதல் கதைகளை சொல்லி அழுவார். ஐந்தாவது கிளாசிற்கு பிறகு கோபப்படுவார், அடிப்பார், உடைப்பார், போத்தலை உடைத்து தனக்கோ மற்றவரிற்கு குத்துவார். மறுநாள் கண்விழிக்கும் போது வைத்தியசாலையிலோ அல்லது சிறைச்சாலையிலோ இருப்பார். முதல் நாள் நடந்தது ஒன்றும் அவரிற்கு ஞாபகத்தில் இருக்காது. இவ்வாறான சம்பவங்களை அன்றாடம் நாம் ஊடகங்கள் மூலம் அறிகின்றோம். யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு பகுதிகளில் நாளாந்தம் நடைபெறுகின்ற ஒன்றுகூடல் நிகழ்வுகளில் மதுவை முன்னிலைப்படுத்தியே நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இது மிகவும் வருந்தத்தக்கது. மாற்றம் ஒன்றே இன்று தேவைப்படுகின்றது. பூனைக்கு மணி கட்டுவது யார்? எங்கிருந்து, எவ்வாறு ஆரம்பிப்பது? யார், யாரெல்லாம் இவ்வேலைத்திட்டத்தில் இணையப் போகின்றனர்? இதைப்பற்றி இன்னும் நிறைய பயனுடைய கலந்துரையாடல்கள் தேவைப்படுகின்றது. இலங்கை மதுபாவனையில் முன்னிலையில் உள்ள நாடுகளில் இடம்பிடித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதம் ஒன்றிற்கு 42 கோடிக்கு மேல் மதுசார்ந்த பொருட்கள் விற்பனையாகின்றன, மறுதலையாக வறுமையிலும் முன்னிலை பெறுகின்றது. 3.1 மில்லியன் அமெரிக்கர்கள் (மொத்தசனத் தொகையில் 1.4 சதவீதம்) வருடாந்தம் மது பாவனையால் ஏற்படுகின்ற பிரச்சினைகளிற்கு சிகிச்சை பெறுகின்றனர். குறிப்பாக இவ் வயதெல்லை 20 - 35 இடையில் மிக அதிகம். அத்துடன் பெண்களை விட மூன்று மடங்கு அதிகமான ஆண்கள் மதுவிற்கு அமெரிக்காவில் அடிமைப்பட்டுள்ளார்கள்.

மதுவகையில் ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளனவா?

ஒரு குடும்பத்தின் மூன்று வேளை உணவுக்கான செலவிற்கு ஒத்த செலவை மது பாவிக்கும் ஒருவர் செலவிடுகின்றார். அதனால் தனது உடலிற்கு தேவையான என்னென்ன? ஊட்டச்சத்துக்களை பெற்றுக்கொள்கிறார்? சாதாரணமாக மனித உடல், இயக்க தேவைகளிற்கு மாப்பொருள், புரதம், கொழுப்பு, விற்றமின்கள், தாது பொருட்கள் என்பன தேவை. இவை வெவ்வேறு விகிதத்தில் தானியங்கள், பழங்கள், மீன், முட்டை, பால் என்பவற்றில் செறிந்துள்ளது. நிறையுணவு மனிதனின் ஆரோக்கியத்திற்கு தேவை. எந்தவொரு மதுபான வகையிலும் அதில் அடங்கியுள்ள "எதனோல்" இரசாயனத்தை தவிர எந்தவொரு பயனுடைய ஊட்டச்சத்துக்கும் இல்லை. மதுபான வகையில் உயர் "கலோரிப்" பெறுமானம் அடங்கியிருந்தாலும் அதனை உடல் பாவிப்பதில்லை. மது பாவிக்கும் ஒருவரின் செயல் "பொல்லை கொடுத்து அடிவாங்குவதற்கு ஒப்பாகும்"

# நாமும் செய்யலாமா?

## இயற்கை உணவும் உரமும்

சியாமளா ஆனந்தா

எந்த வேலைக்கும் வெளியாட்களை எதிர்பார்க்காமல், தானே, தன் வேலையை செய்பவன் தோல்வியடைய வாய்ப்புக்கள் இல்லை. ஏன் என்றால் வேலைகளை நாமே செய்யும் போது சில நுணுக்கங்களை நாம் தெரிந்து கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன. இப்படியாகத்தான் நான் எனது வீட்டுத் தோட்டத்தை செய்ய ஆரம்பித்தேன். அதில் நல்ல பலனும், நண்பர்களின் பாராட்டும் கிடைத்தது. அதனால்தான் என் சின்ன அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு அரங்கம் இதழ் ஒரு வாய்ப்பை தந்தது.

அதற்கு முதல் நன்றி சொல்லிக்கொண்டு நம் பயணத்திற்கு வருவோம். இன்று நம் மக்களிடையே பெருமளவில் பேசப்படும் உணவின் பெயர் 'ழுணூஞ்ச்ணடிஞ் ஊணிணிஞ்' அதாவது 'இயற்கை உற்பத்தி உணவுகள்'.

ஆம் ழுணூஞ்ச்ணடிஞ் ஊணிணிஞ் என்றதும் எமக்கு எல்லாம் 'அது என்ன' என்று ஒரு கேள்வி வருகிறதல்லவா? வாசகர்களே பயப்பட வேண்டாம். நான் முந்திய பக்கத்தில் சொன்னது போல நம் அம்மம்மா, அப்பப்பா செய்த 'தோட்டக்கலை' அதாவது இயற்கை தந்த பொருட்களை வைத்து இயற்கையாக விவசாயம் செய்தல். இயற்கை தந்த பொருட்களை மீள பயன்படுத்துதல்தான் அது.

இன்று எப்படி இயற்கை உரம் செய்வது என்பதை பார்ப்போம்.

ஒரு சிறிய தொட்டியில் முதலில் பெரிய கற்களை அடியில் போடவும். இரண்டாவதாக சிறிய கற்கள், பின் மணல், மணலின் மேல் மண், பின்பு இலை தழைகள் (வெட்டிய மரங்கள் சிறு துண்டுகளாக) கடைசியாக மிருகங்களின் எச்சங்கள் இதை ஒன்றிலிருந்து இரண்டு மாதங்களுக்கு உக்க விட்டீர்களானால் உங்களுக்கு சிறந்த இயற்கை உரம் கிடைத்துவிடும். இதை உங்கள் பயிர்களுக்கு பயன்படுத்துங்கள். இதிலிருந்து வரும் காய்கறிகள்தான் 'ழுணூஞ்ச்ணடிஞ் ஊணிணிஞ்' அதாவது நம் முன்னோர்களின் நோய் நொடி அற்ற வாழ்வின் ரகசியமான 'இயற்கை உணவுகள்'.

எங்கள் போட்டியில் பங்கு பற்றும் வாசகர்களே இதை நீங்கள் வீட்டில் செய்வதை நாங்கள் விரும்புகிறோம்.



தொடர்ச்சி...

# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 16

இறுதியில் 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி தனது 46 ஆவது வயதில் விஜேவீரா கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரையடுத்து உபதிஸ்ஸ கமநாயக்க, வாஸ் திலகரத்தின முதலான தலைவர்களும் கொல்லப்பட்டனர்.

மீண்டும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் அதன் ஆதரவாளர்களும் ஆயிரக்கணக்கில் கொன்றழிக்கப்பட்டனர்.

"அடக்குமுறை தீவிரவாதத்திற்கு அடிகோலும், அதேபோன்று தீவிரவாதமும் அடக்குமுறைக்கு வழிகோலும்" என்பார்கள்.

இவை இரண்டிலிருந்தும் பெற்ற பாடங்களை நன்கு கற்றுக்கொண்ட மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் பீனிக்ஸ் பறவையைப் போன்று தலைதூக்கி பறக்கத்தொடங்கயிருக்கிறது. புதிய தலைமைத்துவத்துடன் இயங்குகிறது.

தலைநகரில் களனி கங்கை தீரத்தில் அமையப்பெற்றுள்ள அரசியல் கட்சிகளின் தலைமைக்காரியாலயங்களின் வரலாற்றை எழுதும்போது 1977 இற்குப்பின்னர் ஆமர்வீதியில் மிகவும் குறைந்த வளங்களுடன் மிகவும் எளிமையாகத தொடங்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயம் ஒரு சாதாரண மர ஆலைக் கட்டிடத்திலிருந்துதான் தொடங்கியிருக்கிறது என்ற செய்தியையும் இங்கு பதிவுசெய்கின்றோம்.

இன்று இக்கட்சியின் வளர்ச்சிக்கு ஒரு காலத்தில் அத்திவாரம் இட்ட பலர் களனி கங்கையில் சடலங்களாக மிதந்தனர் என்பதையும் மறந்துவிட முடியாது.

(தொடரும்)

தொடர்ச்சி...

# வரலாற்றுக்கு முற்பட்ட (கற்கால) கால மட்டக்களப்பு

கருதுகின்றனர். இவர்கள்தான் இன்றைய வேடர்களின் மூதாதையினர் ஆகும். இவர்கள் பேசிய மொழி ஒஸ்ரிக்மொழியாகும்.

இற்றைக்கு 28,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமாகிய இக் கலாசாரம் கி.மு. 1000 வரை ஈழத்தில் நிலைகொண்டிருந்தது எனவும் குறிப்பிடுகிறார்.

இத்தகவல்கள் சரியானவை எனின், இலங்கையின் ஏனைய பிரதேசங்களைப் போலவே, கிழக்கு மாகாணத்திலும், இற்றைக்கு 2800 வருடங்களுக்கு முன்னர், வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலத்தில், தென்னிந்திய கற்கால மக்களின் பண்பாட்டை ஒத்த, கற்காலப் பண்பாடு கொண்ட மக்கள் வாழ்ந்திருந்தார்கள் என்ற முடிவுக்கு வரக்கூடியதாகவும் இருக்கும்.

உண்மையில் இத்தொல்பொருட்களின் காலத்தை சரியாக அறிந்து கொள்ள முடியாதுள்ளது என்பதனால் இதன் பழமை பற்றி உறுதிபடக் கருத்து எதுவும் தெரிவிக்க முடியாதுள்ளது.

இத்தகவல்கள் சரியானவை எனின், மட்டக்களப்பிற்கான தொடர்ச்சியானதொரு வரலாற்றை கண்டறியவும் முடியும். அதாவது இன்று மட்டக்களப்பில் வாழும் தமிழ்ச் சமூகத்தின் நீண்டகால வரலாற்றுத் தொடர்ச்சியை கண்டறியவும் முடியும். இதற்குப் போதுமானளவு தகவல்கள் இப்போது கிடைத்துள்ளன.

லெனம, மண்டு கல்கே ஆகிய இடங்களில் கிடைத்த தொல்பொருட்கள் மேலதிகத் தகவல்களை சேகரிக்க வேண்டியுள்ளது. மட்டக்களப்பில் பல தொல்லியல் மையங்கள் காணப்படுகின்றன எனப்பலரும் குறிப்பிடுகின்றனர்.

இத்தொல்லியல் மையங்கள் பற்றி ஆராய்வது அவசியமானதாகும். இதன் வழியாக மட்டக்களப்பின் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலம் பற்றி மேலும் தகவல்களை அறிந்து கொள்ள முடியலாம்.

இவ்வாறு மட்டக்களப்பின் வரலாற்றுக்கு முற்பட்ட கற்கால வரலாற்றை ஆராய்ந்தறிவதுடன், மட்டக்களப்புச் சமூகம் பற்றி மிக அண்மைக்காலம் வரை கிடைத்துள்ள சான்றுகளைத் தொகுத்து நோக்கும் போது மட்டக்களப்பில் வாழும் தமிழ்ச் சமூகத்தின் நீண்டகால வரலாற்றுத் தொடர்ச்சியைக் கண்டறிந்து கொள்ள முடியும்.

இந்நீண்டகாலப் பரப்பில் இன்றைய சமூகம் உருவாகிய தன்மையையும் அறிந்து கொள்ள கூடியதாகவிருக்கும்.

ஆனால் லெனம, மண்டு கல்கே ஆகிய இடங்களில் கிடைத்த தொல்பொருட்கள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெறமுடியாதவர்களாக இருக்கின்றோம்.

அவற்றைப் பற்றி அறிய முயலவேண்டும்.

இதற்குப் பிற்பட்ட பெருங்கற்காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசதத்தில் மக்கள் வாழ்ந்தமையை கதிரவெளி தொல்லியல் சான்றுகள் உட்பட வேறுபல தொல்லியல் சான்றுகள் நிரூபிக்கின்றன.

இவை பற்றிய தகவல்களைத் தேடியறிவதுடன் இவை பற்றிய தெளிவின்மைகளை நீக்கிக் கொள்ளவும் வேண்டும். இதற்குப் பிற்பட்ட காலம் தொடர்பில் இதுவரை பெருமளவு தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தொகுத்து ஆராயவேண்டிய தேவையும் உண்டு.

இவ்விடத்து, 1917 ஆம் ஆண்டில் கந்தரோடையில் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டிருந்த சேர் போல் பீரிஸ் அவர்கள், "இதுவரை கனவிலும் எண்ணிப் பாராத தமது நாகரிகத்தின் கவரத்தக்க வளர்ச்சிக் கட்டம் பற்றிய சான்றுகள் உண்மையாகவே மண்ணுக்குள் புதைந்திருப்பதை தமிழ் மக்கள் ஒரு காலத்தில் உணர்வார்கள் என எதிர்பார்க்கிறேன்" (சி.க.சிற்றம்பலம், பக்:13) எனக் கூறிய கருத்தை நினைவு படுத்துதல் மிகப் பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

# மட்டு. மாநகரில் பதினொரு வருடங்கள் (1942-1953) - 02



"ஜீவநதி" மாத இதழில் "மனத்திரையில்" என்ற பத்தியிலே ஜுன், ஜுலை, ஓகஸ்ட் இதழ்களில் எனது ஆரம்பகாலத்தில் கொழும்பில் அமைந்த வாழ்க்கையையும், மட்டக்களப்புடன் எனக்கு ஏற்பட்ட தொடர்புகளையும் எழுதியிருக்கிறேன். அதனைத் தொடர்ந்தே "அரங்கம்" இதழில் எனது மட்டக்களப்பு வாழ்க்கையை சென்றவாரம் முதல் எழுதத் தொடங்குகிறேன்.

1943ம் ஆண்டில் தமிழ்மொழிக் கல்வி எனக்கு அவசியம் என்று கருதிய என் தந்தையார் என்னை ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையில் முதலாம் வகுப்பில் சேர்த்துவிட்டார். அங்கு ஐந்தாம் வகுப்புவரையுமே வகுப்புக்கள் நடந்தன. அதன் தலைமை ஆசிரியராக தமிழறிஞர் சைவப்புலவர் அருணாசலதேசிகர்

கே.எஸ். சிவகுமரன்

கடமையாற்றினார். அவர் இந்தியாவில் கல்வி கற்றதனால் போலும், அவர் உச்சரிப்பு இந்தியர்கள் போல இருக்கும்.


நான் வீட்டில் ஆங்கிலத்தை எனது தந்தையாரிடமிருந்து கற்றுக்கொண்டேன். எனது தமிழறிவும் விசாலமாக இருந்ததனால் மூன்றாம் வகுப்பில் இருந்து நேரடியாக ஐந்தாம் வகுப்பிற்கு வகுப்பேற்றப்பட்டேன். அங்கு தயாநிதி என்ற மாணவருக்கும் எனக்குமிடையில் முதலாமிடத்துக்குப் போட்டி இருந்துவந்தது.

நாகராஜா மாஸ்டர், சுப்ரமணியம் மாஸ்டர், பொன்னுத்துரை மாஸ்டர், கணித ஆசிரியர் என்றெல்லாம் பல கல்விமான்கள் எனது கல்வி வளர்ச்சிக்கு உதவினார்கள். சுப்ரமணியம் மாஸ்டர் ஒரு சிறுகதை ஆசிரியரும், சுவாமி விபுலானந்தர் தொடர்பாக நாவல்களைத் தந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் நாங்கள் வசதிபடைத்தவர்களாக இருந்ததனால் எனக்கும் என் தம்பி திருக்குமாருக்கும் காக்கித்தொப்பி அணிவித்து பாடசாலைக்கு அனுப்பிவைப்பார்கள். நாங்கள் திருப்பதி என்ற வீட்டிலிருந்து கால்நடையாக பள்ளிக்கூடம் செல்வோம்.

தங்கவடிவேல் என்ற மாணவனுக்கு நாங்கள் தொப்பி அணிந்து செல்வது பிடிக்கவில்லை. அவர் பின்னர் ஒரு கவிஞராக பிரசித்தி;ப்பெற்றார். பின்னர் இறந்துவிட்டார் என்று அறிந்தேன். அவர் நாங்கள் தொப்பிகளை அணியக்கூடாது என்பதற்காக பலமுறை அவற்றினை எடுக்க முயற்சி செய்தார். ஆனால் அது கைகூடவேயில்லை. அதுபோக தமிழ் கற்ற பின் ஆங்கில வகுப்புகளில் சேரவேண்டிய நிலைமை வந்தது. அப்பொழுது ஆங்கிலமொழி மூலமே மாணவர்கள் கற்றனர். மட்டக்களப்பில் கோவிந்தன் வீதி முடிவடையும் இடத்தில் சென்.மேரிஸ் ஸ்கூல் இருந்தது. அங்கு மீண்டும் ஐந்தாம் வகுப்பில் (ஆங்கிலம்) சேர்த்துவிட்டார் என்தந்தை. அந்தப் பாடசாலையை நடத்தியவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கத்தோலிக்க வணக்கத்துக்குரிய அருட்சகோதரர்கள்.

எனது வகுப்பில் அய்யாக்குட்டி ஜீவானந்தம், டன்ஸ்டன் பல்தாசார் ஆகிய இருவரும் படித்தனர். அவர்கள் இருவரும் படிப்பில் புலி, நானும் அவ்வாறிருக்க முயன்றேன். அங்கு பிரான்சிஸ் மாஸ்டர் எங்களுக்குப் படிப்பித்தார். அவர் வேட்டி உடுத்து சைக்கிளில் வருவார். விவேகப்பயிற்சி ஒரு பாடமாக இருந்தது. அவரின் படிப்பிப்பு மூலம் பொது அறிவை பெற வாய்;ப்புவந்தது. பழைய ஆங்கில நாடகம் ஒன்றை மேடையேற்றினார்கள். அதில் நாம் மூவரும் நடித்தோம்

சென் மேரிஸில் இருந்து சென்.மைக்கல் கல்லூரிக்கு போனோம். அமெரிக்க கிறிஸ்தவ பாதிரிமார் நிர்வகித்த அக்கல்லூ



ரியில் வண.பிதா சோமர்ஸ் டிரக்டராக இருந்தார். வண.பிதா ஈக்ரெளதர் எமக்கு சிவிக்ஸ் படிப்பித்தார். முருகேசு டிலிமா, பஸ்தியாம்பிள்ளை, மார்சலின், ரத்னாகர், கனகரத்தினம் போன்ற ஆசிரியர்களும், ஜோர்ஜ், தோமஸ், கமலாலூட்ஸ் பேன்ற மலையாள ஆசிரியர்களும், விக்கிரமசிங்க என்ற சிங்கள ஆசிரியரும் படிப்பித்தனர்.

சென். மைக்கல் கல்லூரியிலும் 1947ம் ஆண்டு, மீண்டும் 5ம் வகுப்பில் படித்தேன். கனகரத்தினம் மாஸ்டர் வகுப்பாசிரியர். அவரது மகன் இக்னேஸஸ் தவயோகம் எனது நண்பரானர். அவரும் எனது வகுப்பில் முதலாம் இடத்திற்குப்போட்டி போடுவார். பின்னர் அவர் ஐ.ரி.கனகரத்தினம் என்ற பெயரில், பொலிஸ் பிரதிமா அதிபராகக் கடமையாற்றி அண்மையில் மறைந்தார்.

(தொடரும்)

தொடர்ச்சி...

# 'ஏ' தரத்தை மீண்டும் தக்க வைத்தது கோட்டைமுனை விளையாட்டு கழகம்.....

ஓட்டங்களை பெற, பின் வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு தங்கள் விக்கெட்டை இழந்தனர். மைக்கல் மென் விளையாட்டு கழகம் 39 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் டிலக்சன் டெனிக் தலா மூன்று விக்கெட்டுக்களையும் தேனுரதன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இதன் அடிப்படையில் கோட்டைமுனை விளையாட்டு கழகம் 116 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

--ஜெயா--




அரங்கம் செய்திகள்

விளப்பரங்களுக்கு

தொடர்பு : 071 399 909 1

arangamnews@gmail.com




Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa